

கைலாஸ் மானசரோவர் யாத்திரை

கைலாஸ் - மானசரோவர் யாத்திரை

எழுதியவர்
சுவாமி கமலாத்மானந்தர்

ஸ்ரீராமகிருஷ்ண மடம்
மயிலாப்பூர், சென்னை-600 004

வெளியிடுபவர்:
தலைவர்
ஸ்ரீராமகிருஷ்ண மடம்
மயிலாப்பூர், சென்னை-4

II-3M 3C-8-2003
ISBN 81-7823-033-X

அச்சிட்டோர்:
ஸ்ரீராமகிருஷ்ண மடம் அச்சகம்
மயிலாப்பூர், சென்னை-4

33-1

பதிப்புரை

புராண காலம் முதல் இன்று வரையில், 'இதற்குமேல் ஒரு தீர்த்த யாத்திரை இல்லை' என்ற பெருமையுடன் கைலாஸ் - மானசரோவர் யாத்திரை திகழ்ந்து வருகிறது. சமீபகாலத்தில் இந்த யாத்திரையை மேற்கொள்பவர்களின், குறிப்பாக தமிழர்களின், எண்ணிக்கை பெருவாரியாக உயர்ந்துள்ளது. இந்த யாத்திரை பற்றிய செய்திகளை இந்த நூலில் காண் கிறோம்.

எமது மடத்திலிருந்து வெளிவருகின்ற தமிழ் மாதப் பத்திரிகையான ஸ்ரீராமகிருஷ்ண விஜயத்தின் முந்தைய (1977–2000) ஆசிரியர்களில் ஒருவரும், தற் போதைய மதுரை ஸ்ரீராமகிருஷ்ண மடத்தின் தலைவரு மான சுவாமி கமலாத்மானந்தர் எழுதிய நூல் இது. 1998–இல் 20 பேர் கொண்ட குழுவுடன் அவர் திருக்கயிலாய யாத்திரையை மேற்கொண்டார். தமது அனுபவங்களை ஸ்ரீராமகிருஷ்ண விஜயத்தில் தொடர் கட்டுரையாக (1998–2002) எழுதினார். இந்தக் கட்டுரை மிகுந்த வரவேற்பைப் பெற்றது.

தற்போது இந்தக் கட்டுரை பல புதிய பகுதிகள், தகவல்கள் போன்றவை சேர்க்கப்பட்டு நூலாக

வெளிவருகிறது. திருக்கயிலாய யாத்திரை மேற்கொள் பவர்களுக்கு இந்த நூல் ஒரு சிறந்த வழிகாட்டியாக அமையும்; சென்று வந்தவர்களுக்கு ஒரு சிறந்த நினைவாக, தியானமாக அமையும் என்பதில் ஐயமில்லை.

ஸ்ரீராமகிருஷ்ண மடம், சென்னை
மார்ச் 2003

கைலாஸ் - மானசரோவர் யாத்திரை

முன்னுரை

கைலாஸ்- மானசரோவர்

'காவாய் கனகத்திரளே போற்றி, கயிலைமலை யானே போற்றி போற்றி' என்று அப்பர் பெருமானால் போற்றிப் பாடப்பட்டது கயிலாய மாமலை. பொன் மலையாக அவர் கண்ட காட்சியை இன்றும் மெய்ப் பித்தபடி, பொன் வண்ணத்தை மட்டுமல்ல; இன்னும் எத்தனை எத்தனையோ வண்ணங்களைக் காட்டியபடி, ஓங்கி உயர்ந்து அருள்பாலித்துக் கொண்டிருக்கிறது கயிலை மாமலை. கயிலாய புரி, திருக் கயிலாயம், கயிலை, கைலாஸ் என்றெல்லாம் அழைக்கப்படும் இந்தப் பொன்மலையில் சிவ பெருமான் உறைகிறார் என்று மட்டுமல்ல, சிவ பெருமானே கயிலை மாமலையாகத் திகழ்கிறார் என்று புராணங்கள் கூறுகின்றன. அந்த மலையின் அருகில் அம்பிகை மானசரோவர் என்னும் புண்ணிய ஏரியாகத் திகழ்ந்து கொண்டிருக்கிறாள். சிவலிங்கமாகக் கயிலை மாமலை யும், அம்பிகையின் அம்சமான ஆவுடையாராக மான சரோவர் ஏரியும் திகழ்ந்து, ஒரு மாபெரும் சுயம்பு லிங்கமாக கயிலாயம் விளங்குகிறது.

திருக்கயிலாயத்தின் பெருமை

வேறு எந்தத் தீர்த்தத்தலத்திற்கும் இல்லாத பெருமை உடையது கயிலாயம்— இந்து மதம், புத்த மதம், சமண மதம், பொம்பா மதம் ஆகிய நான்கு மதத்தினருக்குப் புனிதத் தலம் இது.

இந்து மதத்தில்

இந்து மதத்தினருக்கு, கயிலை வழிபாடு என்பது காலத்தைக் கடந்தது. சிவபெருமான் பற்றிய கருத்து எப்போது தோன்றியதோ அப்போதே கயிலாயம் பற்றிய கருத்தும் தோன்றிவிட்டது எனலாம். கயிலாயம் சிவபெருமானின் உறைவிடமாகக் கருதப்படுகிறது. கயிலாய தரிசனம் என்பது தெய்வ தரிசனத்திற்கு நிகரானது. இந்துக்களிலும், தமிழர்களுக்கு மிக நீண்ட காலமாகவே கைலாசபதியிடம் ஒரு தனி ஈடுபாடு உண்டு எனலாம். வடமொழியில் கைலாசபதியைப் பற்றிய ஸ்தோத்ரங்கள் மிகவும் அபூர்வம். தமிழிலோ அப்பர், சுந்தரர், சம்பந்தர் என்று பலரும் இயற்றியுள்ள துதிகள் பல இருக்கின்றன.

புத்த மதத்தில்

திபெத்தின் முக்கிய மதமாக விளங்குவது புத்த மதம். திபெத்திய புத்த மதம் கயிலாயத்தைப் பிரபஞ்சத்தின் மையம் என்று குறிப்பிடுகிறது. இந்த மதத்தின் மகான்கள் பலர் கயிலை மலையின் அடிவாரத்தில் தவம் செய்து முக்தி பெற்றனர். சீன ஆக்கிரமிப்பின் காரணமாக எத்தனையோ பௌத்த மடங்கள் அழிக்கப்பட்டு

விட்டாலும், இன்றும், மானசரோவர் கரையிலும் கயிலைப் பகுதிகளிலும் பல பௌத்த மடங்களை நாம் காண முடிகிறது. திபெத்திய பௌத்த மன்னரும் மகானுமான மிலரேபா உயர்ந்த ஆன்மிக நிலையை அடைந்தது இங்குதான். இந்தியாவிலிருந்து திபெத்திற்கு புத்த மதத்தைக் கொண்டுசென்ற பத்மசம்பவர் நீண்ட காலம் இங்குதான் தவத்தில் ஈடுபட்டிருந்தார். இவ்வாறு கயிலை மலை பௌத்தர்களுக்கும் மிகப் புனிதமானது. அவர்கள் கயிலாயத்தை 'காங் ரிம் போசே' என்ற பெயரிலும், மானசரோவரை 'ஸோ மாபம்' என்ற பெயரிலும் ஆழ்ந்த பக்தியுடன் வணங்குகிறார்கள்.

ஜைன மதத்தில்

ஜைன மதத்தின் தீர்த்தங்கரர்களில் ஒருவராகிய ரிஷபதேவரும் வேறு பல மகான்களும் கயிலையில் தான் முக்தி பெற்றனர். எனவே ஜைனர்களுக்கும் இது புனிதத் தலமாக விளங்குகிறது.

பொம்பா மதம்

பொம்பா மதம் என்பது திபெத்தின் ஆதி மதமாகும். எப்போதும் ஆன்மிக சக்தியை வெளியிட்டுக் கொண்டிருக்கும் ஒன்பது முக ஸ்வஸ்திக் மலையாகக் கயிலையை அந்த மதத்தினர் காண்கின்றனர். இவர்களும் கூட்டம்கூட்டமாக வந்து கயிலையை வழிபடுவதைக் காண முடியும். இந்துக்களைப்போல் இவர்களும் கயிலையைச் சுற்றி வலம் வருகின்றனர்;

ஆனால் இடமாகச் சுற்றுகின்றனர். நாம் வலம் வரும்போது அவர்கள் இடம் வருகின்றனர்.

திபெத்தியர்கள் — பௌத்தராயினும் சரி, பொம்பா மதத்தினராயினும் சரி — கயிலையைச் சுற்றுவது தீவிர பக்தியின் வெளிப்பாடாக உள்ளது. கற்கள் நிறைந்த கரடுமுரடான அந்தப் பாதையில் நடந்து வலம் வருவதற்கே நாம் எவ்வளவோ சிரமப்படும் போது அவர்கள் சாஷ்டாங்க நமஸ்காரம் செய்தபடியே சுற்றுகிறார்கள். ஜபம் செய்தபடியே சாஷ்டாங்க நமஸ்காரம் செய்து, படுத்தபடியே கைகளை நீட்டி வணங்கி, அந்த இடத்தில் ஓர் அடையாளம் செய்து கொள்கிறார்கள். பிறகு எழுந்து அந்த அடையாளம் வரை நடந்து அங்கிருந்து மீண்டும் நமஸ்காரம் செய்கிறார்கள். இப்படியே அவர்கள் 52 கி.மீ. தூரத்தையும் கடக்கிறார்கள்.

கயிலாயத்தைத் தரிசித்த சில அடியார்கள் ——————

கயிலாயத்திற்குக் காலம் முழுவதும் சிவனடியார்கள் யாத்திரை சென்றிருக்கிறார்கள் விஞ்ஞானம் பெரிதும் வளர்ச்சி அடைந்த இந்தக் காலத்திலும்கூட கைலாஸ் யாத்திரை என்பது கடினமான யாத்திரையாக இருக்கிறது. ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் நினைத்துப் பார்க்க முடியாத அளவிற்கு இந்த யாத்திரை கடினமாக இருந்திருக்கும். என்றாலும் கூட அங்கொருவர் இங்கொருவர் என்று கயிலாய யாத்திரை சென்ற சிவனடியார்கள் இருந்திருக்கிறார்கள்.

தமிழ்நாட்டில் தோன்றிய சிவபரமான நூல்களில் முக்கியத்துவம் வாய்ந்தவை சைவத் திருமுறைகள். அவை பன்னிரெண்டு என்று சைவ சமயம் குறிப்பிடுகிறது. சைவத் திருமுறைகளில் கயிலாயம் பற்றிய செய்திகள் அநேக இடங்களில் இடம் பெற்றுள்ளது.

சைவத் திருமுறைகளில் ஒன்றுதான் பெரிய புராணம். பெரிய புராணத்திற்கும் மற்ற புராணங்களுக்கும் ஒரு வேறுபாடு உண்டு. மற்ற எல்லாப் புராணங்களும் நைமிசாரண்யத்தில் சூத முனிவரால் சொல்லப்படுகின்றன. பெரிய புராணம் ஒன்றுதான் கயிலாயத்தில் உபமன்யு முனிவர் சிவ கணங்களுக்குச் சொல்வதாக அமைந்துள்ளது. பெரிய புராணத்தைக் கயிலாயத்தில் ஆரம்பித்து கயிலாயத்தில் நிறைவு செய்கிறார் தெய்வப் புலவர் சேக்கிழார்.

சுந்தரமூர்த்தி நாயனார்

சைவ அடியார்களாகிய 63 நாயன்மார்களில் ஒருவர் சுந்தரமூர்த்தி நாயனார். அவர் திருக்காளஹஸ்திக்குச் சென்றார். அங்கே அவருக்குக் கயிலாயத்தின் காட்சி கிடைத்தது. கயிலாயத்தைப்பற்றி அவர் பாடல்கள் பாடி உள்ளார். கயிலைநாதன் தமக்குத் தந்த ஆன்மிக அனுபவத்தை 'ஊன் வேறு உயிர் வேறு செய்தான்! நொடித்தான் மலை உத்தமனே!' என்று அவர் பாடுகிறார். 'நான் என்பது உடம்பல்ல, உடம்பைக் கடந்த ஒன்று' என்ற அனுபவத்தை அவர் பெற்றிருக்கிறார்.

சிவத்தொண்டு புரிந்து உலகில் வாழ்ந்த சுந்தரரை சிவபெருமான் மீண்டும் கயிலாயத்திற்கு அழைத்துக் கொள்ள விரும்பினார். அவர் சுந்தரரைக் கயிலாயத் திற்கு அழைத்து வருமாறு வெள்ளை யானையை அனுப்பி வைத்தார். சுந்தரர் அதில் ஏறி கயிலாயம் சென்றார்.

சேரமான் பெருமாள் நாயனார் —

சுந்தரருடைய நெருங்கிய நண்பராக விளங்கியவர் சேரமான் பெருமாள் நாயனார். அவர் சுந்தரமூர்த்தி நாயனார் கயிலாயம் செல்வதைக் கண்டு தாமும் கயிலாயம் செல்ல விரும்பினார். உடனே அவர் தமது குதிரையின் காதில் பஞ்சாட்சர மந்திரத்தைக் கூறி, குதிரை மீதேறி வான்வழியாகக் கயிலாயம் சென்றடைந் தார். திருக்கயிலாயத்தில்தான் சேரமான் பெருமாள் நாயனார் 'திருக்கயிலாய ஞான உலா' என்ற நூலை இயற்றி, சிவபெருமான் முன்னிலையிலேயே அரங் கேற்றினார்.

பெருமிழலைக் குறும்பர் நாயனார் —

சுந்தரமூர்த்தி நாயனார் கயிலாயம் சென்றதை அறிந்து அவருடைய பரம பக்தராக விளங்கிய பெருமிழலைக் குறும்பர் நாயனாரும் கயிலாயம் செல்ல விரும்பினார். அவர் சுந்தரமூர்த்தி நாயனார் மீது பெரிதும் பக்தி கொண்டவர். அவரையே குருவாகக் கொண்டவர். பெருமிழலைக் குறும்பர் நாயனாரும் யோக சக்தியால் தமது உடலை உகுத்து கயிலாயம்

சென்றார். இவையெல்லாம் பெரிய புராணத்தில் நமக்குக் கிடைக்கின்ற தகவல்கள்.

ஔவையார்

தமிழ் மூதாட்டியாகிய ஔவையாரும் கயிலை சென்றதைத் தனிப்பாடல் திரட்டிலிருந்து அறிகிறோம். சுந்தரரும், சேரமான் பெருமாளும் கயிலை சென்றதைக் கண்டார் ஔவையார். அப்போது அவர் விநாயகருக்குப் பூஜை செய்து கொண்டிருந்தார். கயிலை செல்ல வேண்டும் என்ற ஆர்வத்தில் அவர் அவசர அவசரமாகப் பூஜையைச் செய்தார். அப்போது விநாயகப் பெருமான் அவரிடம், 'ஔவையே, பூஜையை நிதானமாகச் செய்து முடி. நான் உன்னைக் கயிலாயத்தில் கொண்டு போய்ச் சேர்க்கிறேன்' என்று கூறினார். அதன்படியே ஔவையார் பூஜையைச் செய்தார். விநாயகர் தமது துதிக்கையால் ஔவையாரைக் கயிலாயத்தில் கொண்டுபோய் விட்டார்.

அப்பர் பெருமானின் கயிலைக் காட்சி

சைவ அடியார்களில் கயிலாயம் செல்ல வேண்டும் என்று முனைப்போடு இருந்தவர் அப்பர் பெருமான். பல்வேறு திருத்தலங்களைத் தரிசித்தபடியே அவர் திருக்காளஹஸ்திக்குச் சென்றார். கயிலாயம் சென்று கயிலைநாதனைத் தரிசிக்க வேண்டும் என்ற உறுதி அங்கே அவருக்கு ஏற்பட்டது. அந்த உறுதியுடன் அவர் இமய மலையின் அடிவாரத்தை அடைந்தார். நடந்து நடந்து அவரது கால்கள் சோர்ந்தன. காலால் நடக்க

இயலாத நிலையில் கைகளை ஊன்றி முன்னேறினார். அதுவும் முடியாதபோது மார்பால் தவழ்ந்து தவழ்ந்து செல்லத் தொடங்கினார்.

அவரது உறுதியைச் சோதிக்க விரும்பிய சிவபெருமான் ஒரு முனிவர் வடிவத்தில் அவர் முன்பு வந்து, 'அன்பரே! கயிலாயம் மனிதர்கள் செல்ல இயலாத இடம். தேவர்கள்கூட செல்வதற்கு அரிதான இடம். எனவே உங்கள் முயற்சி பயனற்றது. திரும்பிச் செல்லுங்கள்' என்று கூறினார். அப்பர் பெருமான் அதற்கு உடன்படவில்லை. அவரது உடல் சோர்வடைந்ததே தவிர உள்ளம் தளரவில்லை. 'என் தலைவனாகிய சிவபெருமானை எப்படியும் தரிசிப்பேன். இந்த உடல் மாண்டு போகக் கூடியது. மாண்டு போகும் உடல் கொண்டிருக்கிற நான் கயிலாய பதியைத் தரிசிக்காமல் திரும்பமாட்டேன்' என்று உறுதியாகக் கூறிவிட்டார்.

அங்கு ஒரு பொய்கையைத் தோற்றுவித்த சிவபெருமான் அதில் மூழ்கி எழுந்திருக்குமாறு அசரீரியாக அப்பருக்கு உத்தரவிட்டார். அதன்படியே அப்பர் பெருமான் மூழ்கி எழுந்தபோது அவர் திருவையாற்றில் உள்ள குளத்தில் இருந்தார். மூழ்கியது இமயத்திலுள்ள இறைவன் காட்டிய பொய்கையில்; எழுந்தது திருவையாற்றில் உள்ள குளத்தில்.

அப்போது அவருக்குக் கயிலாயத்தின் காட்சி கிடைத்தது. அந்த நிலையில் அவர் எல்லாவற்றையும் சிவபெருமானாகவும் அம்பிகையாகவும், சிவனாகவும்

சக்தியாகவும்– கண்டார். அவர் அந்த அனுபவத்தை 'மாதர் பிறைக்கண்ணியானை' என்ற பாடலில் குறிப்பிட்டிருக்கிறார். எந்தக் கயிலாயத்தைச் சென்று பார்க்க வேண்டும் என்று அப்பர் சென்றாரோ, அந்த கயிலாயத்தின் தரிசனம் அவருக்குத் திருவையாற்றில் கிடைத்தது.

திருக்கயிலாய யாத்திரை

உலகின் கூரையாகக் கருதப்படுகின்ற திபெத் நாட்டில் கயிலாயம் அமைந்துள்ளது. திபெத் ஒரு சுதந்திர நாடாக இருந்தது வரையில் கயிலாய யாத்திரை என்பது இவ்வளவு பணச் செலவு மிகுந்ததாக இருக்க வில்லை. 1959-ஆம் ஆண்டு சீனா திபெத்தை ஆக்கிர மித்தது. அதன்பிறகு வெளிநாட்டினர் யாரையும் கயிலாய யாத்திரைக்குச் சீனா அனுமதிக்கவில்லை. 1981-இல் ஏற்பட்ட இந்தோ-சீன ஒப்பந்தத்தின்படி சீன அரசு, ஆண்டிற்கு 200 இந்தியர்களை மீண்டும் கயிலை யாத்திரைக்கு அனுமதிக்கத் தொடங்கியது. படிப்படி யாக இந்த எண்ணிக்கை தற்போது அதிகரித்து வருகிறது. இப்போது இந்த யாத்திரைக்கு நபர் ஒருவருக்கு எண்பதாயிரம் ரூபாய் வரை பணம் செல வாகிறது.

திருக்கயிலாய மலையின் உயரம் சுமார் 22,000 அடி ஆகும். அருகிலுள்ள அனைத்து மலைகளையும் கீழடக்குவதுபோல் கம்பீரமாக நிற்கிறது இந்த மலை. இதனைச் சுற்றி வருவதற்கான (பரிக்ரமம்) தூரம் சுமார் 52 கி.மீ. இதன் அடிவாரத்திலிருந்து சுமார் 50 கி.மீ.

தொலைவில் மானசரோவர் ஏரி உள்ளது. இதன் சுற்றளவு சுமார் 100 கி.மீ. இந்த இரண்டின் தரிசனமும் பரிக்ரமமும் சேர்ந்ததே கைலாஸ்–மானசரோவர் யாத்திரை.

இமயமலையின் ஏற்ற இறக்கங்கள், இடையில் குறுக்கிடும் ஆறுகள், நீர்வீழ்ச்சிகள், பனி சூழ்ந்த மலைகள், வழுக்கலான பாதைகள், பள்ளத்தாக்குகள், மலைச்சரிவுகள், நீண்ட நெடிய கால்நடைப் பயணம், இரத்தத்தை உறையவைக்கும் கடும்குளிர், கடுமையான வெயில், பனி மழை, ஜீப் பயணம், மட்டக் குதிரைப் பயணம், யாக்மீது பயணம், பழக்கமில்லாத உணவு, பழக்கமில்லாத இடங்கள், பழக்கமில்லாத மனிதர்கள், பழக்கமில்லாத மொழிகள் போன்றவற்றைக் கொண்டது கைலாஸ்–மானசரோவர் யாத்திரை.

காலநிலை, உணவு, உடை என்று பல வகையிலும் சிரமங்கள் நிறைந்தது திருக்கயிலாய யாத்திரை. இந்திய அரசாங்கம் கயிலை யாத்திரையை நடத்துகிறது. இந்திய அரசின் மூலம் செல்லும்போது செலவு சற்று குறைவாக உள்ளது. தற்போது சில ஆண்டுகளாக நேபாளத்தின் பல ஏஜண்டுகள் இந்த யாத்திரையை நடத்துகிறார்கள். நேபாளத்தின் வழியாகச் செல்வது செலவு சற்று அதிகமானது. ஆனால் இதில் சுதந்திரம் அதிகம். நமது குழுவின் எண்ணிக்கையையும் நபர்களையும் நாமே தேர்ந்தெடுக்க முடியும். செல்லும் வழியிலும் பல விஷயங்களை நாமே முடிவு செய்துகொள்ள முடியும். இந்த வாய்ப்பு இந்திய அரசு மூலம் செல்வதில் கிடையாது.

ஏப்ரல் முதல் செப்டம்பர் வரையில்தான் இந்த யாத்திரையை மேற்கொள்ள முடியும். ஏப்ரல்–மே மாதங்கள் கடும் குளிர் (–20 டிகிரி சென்டிகிரேட் வரை) நிலவும். ஜுன்–ஜுலையில் குளிர் இவ்வளவு இருக்காது. காலநிலையும் மிகவும் சாதகமாக இருக்கும். எனினும் மழை பெய்யும் அபாயம் உண்டு. மழை வராவிட்டால் ஜுன் இறுதி மிகவும் ஏற்ற காலமாகும்.

எங்கள் குழு

நாங்கள் சென்னை, ஸ்ரீராமகிருஷ்ண மடத்தின் பக்தர்கள் இருபது பேர் சேர்ந்து காட்மாண்டு வழியாக கயிலை யாத்திரை செல்ல விரும்பினோம். அதன்படி 1998 மே 14 –ஆம் தேதி சென்னையிலிருந்து புறப்பட்டு, 1998 ஜுன் 24–ஆம் தேதி சென்னை திரும்பினோம். சென்னை-காசி- கைலாஸ்- காசி-சென்னை வழியாக, 40 நாட்கள் கொண்டதாக எங்களுடைய இந்த கைலாஸ் மானசரோவர் யாத்திரை அமைந்தது.

இந்த யாத்திரை பற்றிய சில செய்திகளை இப்போது இந்த நூலில் நாம் காண இருக்கிறோம்.

14.5.98 வியாழன்

எங்கள் யாத்திரைத் திட்டத்திற்கு ஏற்ப, வசதியான நாட்களில் வாராணசி ரயில் அமையாததால் சென்னை - பாட்னா எக்ஸ்பிரசில் எங்கள் குழு இந்தத் தீர்த்த யாத்திரையைத் துவக்கியது. கயிலாயத்தில் மட்டும் என்றல்ல; யாத்திரையின் 40 நாட்களையும் ஆன்மிக சாதனை நாட்களாகவே கழிக்க வேண்டும் என்று

புறப்படுவதற்கு முன்பே நாங்கள் முடிவு செய்துகொண் டோம். எனவே ரயிலில் சென்ற இரண்டு நாட்களும் கூட காலையில் பிரார்த்தனைகள், மாலையில் ஸ்ரீராமகிருஷ்ண மடங்களில் பாடப்படும் ஆரதிப் பாடல்கள், அதைத் தொடர்ந்து சைவத் திருமுறை களிலிருந்து சில பதிகங்கள், திருநாவுக்கரசர் இயற்றிய கயிலைப் போற்றி திருத்தாண்டகம், நாமாவளிகள் போன்றவற்றைப் பாடினோம். அநேகமாக அனைத்து நாட்களிலும் பாடல்களுக்குப் பிறகு எனது ஆன்மிகச் சொற்பொழிவும் இடம் பெற்றது.

வாராணசி (16.5.98 சனி– 17.5.98 ஞாயிறு) ————

நாங்கள் முதலில் சென்றது வாராணசி என்றும், காசி என்றும் அழைக்கப்படும் புனிதத் தலமாகும். சென்னை - பாட்னா எக்ஸ்பிரஸ் மொகல்சராய் வரை யில்தான் செல்லும். அங்கிருந்து வாராணசி வரை யிலுள்ள 18 கி.மீ. தூரத்தை பஸ்சில் கடந்தோம்.

வாராணசியை நெருங்கும்போது எங்கள் பஸ் கங்கையாற்றின் மீதுள்ள பாலத்தின்மீது சென்றது. பஸ்சில் இருந்தபடியே கங்கையையும் வாராணசியை யும் தரிசித்து வணங்கினோம். எங்கள் குழுவிலிருந்த துறவியர் வாராணசி ராமகிருஷ்ண மிஷன் சேவாசிர மத்திலும், அன்பர்களும் தாய்மார்களும் குமாரசுவாமி மடத்திலும் நிர்மலா சிவானந்த ஆசிரமத்திலும் தங்கி னோம். வாராணசியில் நாங்கள் 3 நாட்கள் இருந்தோம். அங்கே தரிசிக்க வேண்டிய முக்கிய இடங்களை எல்லாம் தரிசித்தோம்.

காசியில் கங்கைக் கரையில் 64 தீர்த்த கட்டங்கள் (நீராடும் துறைகள்) இருக்கின்றன. இவற்றில் முக்கியத்துவம் வாய்ந்த இடத்திற்கு 'மணிகர்ணிகா காட்' என்று பெயர். இங்கே தொடர்ந்து பிணங்கள் எரிக்கப்படுகின்றன. காசியில் இறப்பது முக்தியைத் தரும் என்பது இந்துக்களின் நம்பிக்கை. காசிக்கு ஸ்ரீராமகிருஷ்ணர் சென்றபோது அவருக்கு இதுபற்றி மணிகர்ணிகா காட்டில் ஓர் அற்புதமான ஆன்மிகக் காட்சி கிடைத்தது. அதைப்பற்றி ஸ்ரீராமகிருஷ்ணர் பின்வருமாறு கூறியுள்ளார்:

''வெண்மை நிறம் கொண்ட நல்ல உயரமான ஜடை முடியோடு கூடிய ஓர் உருவம் (சிவபெருமான்) கங்கைக்கரையில் எரிந்துகொண்டிருந்த ஒவ்வொரு பிணத்திடமும் சென்று, கருணையோடு அந்த உயிரைத் தட்டி எழுப்பி, அவர்களின் காதுகளில் தாரக மந்திரத்தை ஓதியது. கருணையின் வடிவமாகிய ஜகன்மாதா, நெருப்பின் மறுபக்கம் உட்கார்ந்து கொண்டு அந்த உயிர்களைப் பிணைத்திருக்கும் தளைகளை ஒவ்வொன்றாக நீக்கி அந்த உயிர்களுக்கு முக்தியின் கதவைத் திறந்துகொண்டிருந்தாள்; அவள் அதிர்ஷ்டசாலிகளான அந்த உயிர்களை மிகவும் வேக மாக மோட்சத்திற்குள் அனுப்பிக்கொண்டே இருந்தாள். காலம் காலமாக ஆன்மிக சாதனையில் மூழ்கிக் கடுமையான தவம், தியானங்களில் ஈடுபட்டு ஒருவர் பெறக் கூடிய மிகவும் உயர்ந்த இந்த அத்வைத நிலையைக் காசியில் உயிர்விடுவதாலேயே சாதாரண மான மக்கள்கூட அதை மிகவும் சுலபமாகச்

சிவபெருமானின் எல்லையற்ற கருணையால் அடைந்து கொண்டிருந்தார்கள்.''

நாங்கள் மணிகர்ணிகா காட் கங்கையில் நீராடி, காசி விஸ்வநாதருக்கு அபிஷேகம் செய்வதற்காக கங்கை தீர்த்தம் எடுத்துக்கொண்டோம். பிறகு மணிகர்ணிகா காட்டில் சடலங்கள் எரிந்துகொண் டிருந்த இடத்திற்குச் சற்று அருகில் சென்று, சடலங்கள் எரிந்து கொண்டிருந்ததைப் பார்த்தோம். அங்கு அப்போது ஐந்து சடலங்கள் எரிந்துகொண்டிருந்தன.

பிறகு அனைவரும் விஸ்வநாதர் கோயிலுக்குச் சென்றோம். தென்னிந்தியாவில் இருப்பது போல் இல்லாமல், காசியில் விஸ்வநாதரை பக்தர்கள் தாங்களே தொட்டு அபிஷேகம், ஆராதனைகள் செய்யலாம். நாங்கள் வாங்கிச் சென்ற நைவேத்தியப் பொருட்களை நாங்களே காசி விஸ்வநாதருக்கு அர்ப்பித்தோம்.

பிறகு எங்கள் குழுவினர் அனைவரும் அன்ன பூரணி கோயிலுக்குச் சென்றோம். அன்னபூரணியின் சந்நிதியை நாங்கள் பலமுறை பிரதட்சணம் செய்தோம்; எங்களுக்குத் தெரிந்த சுலோகங்களைக் கூறினோம். அங்கு கோயிலில் ஆங்காங்கு அமர்ந்து பிரார்த்தனை போன்றவற்றைச் செய்த பிறகு டுண்டி விநாயகரைச் சென்று தரிசித்தோம்.

காசி விஸ்வநாதர் கோயிலில் ஒவ்வொரு நாளும் இரவு 7.45 மணி முதல் 8.30 மணி வரை சப்தரிஷி பூஜை

என்ற சிறப்பு வழிபாடு நடைபெறுகிறது. அந்தப் பூஜையில் கலந்துகொள்வதற்கு நபர் ஒருவருக்கு ரூ.21 செலுத்த வேண்டும். அதில் கலந்துகொள்வதற்காக மீண்டும் விஸ்வநாதர் கோயிலுக்குச் செல்ல ஆரம்பித்தோம். அன்று சனிக்கிழமை என்பதால் வழியில் உள்ள சனி பகவான் சந்நிதியில் பக்தர்களின் கூட்டம் நிரம்பி வழிந்தது. அந்தக் கூட்ட நெரிச்சலில் நாங்கள் சற்று சிரமப்பட்டுச் சென்றோம். சனி பகவான் சந்நிதிக்கு அருகிலுள்ள சில கடைகளில் நெய் விளக்குகள் விற்பனைக்குக் கிடைக்கும். எங்கள் குழுவினரில் சிலர், ஒரு நெய் விளக்கு ஒரு ரூபாய் என்ற விலைக்கு வாங்கி சனி பகவானுக்கு நெய் விளக்குகள் ஏற்றினார்கள்.

பிறகு காசி விஸ்வநாதர் கோயிலுக்குச் சென்றோம். நாங்கள் சென்ற சிறிதுநேரத்தில் விஸ்வநாதர் எழுந் தருளியிருக்கும் கருவறையைச் சுத்தம் செய்ய ஆரம் பித்தார்கள். அதைத் தொடர்ந்து இரவு 7.45 மணிக்கு சப்தரிஷி பூஜை ஆரம்பித்தது. நாங்கள் அந்தப் பூஜையைப் பார்ப்பதற்கு ஏற்கெனவே டிக்கெட்டுகள் வாங்கி இருந்ததால், கருவறை உள்ள நுழைவு வாயி லில் இரண்டு பக்கங்களிலும் அமர்ந்து சப்தரிஷி பூஜையைத் தரிசித்தோம். அந்தப் பூஜையின்போது ஏழு பண்டாக்கள் (கோயில் குருக்கள்) காசி விஸ்வநாதரைச் சுற்றி அமர்ந்து பூஜை செய்தார்கள். அந்த நேரத்தில் சப்தரிஷிகளும் வந்து காசி விஸ்வநாதரைப் பூஜை செய்வதாக ஐதீகம். இது காசி யாத்திரை செல்பவர்கள் அவசியம் தரிசிக்க வேண்டிய பூஜையாகும். காசி,

விஸ்வநாதர் கோயிலில் சப்தரிஷி பூஜை முடிவதற்கு இரவு 8.30 மணி ஆகிவிட்டது.

மறுநாள் கங்கைக் கரையிலுள்ள தசாஸ்வமேத காட் என்ற இடத்திற்குச் சென்றோம். இந்த இடத்தில் பிரம்மா, பத்து அசுவமேத யாகங்களைச் செய்தாராம். அதனால் இந்த இடத்திற்கு 'தசாஸ்வமேத காட்' என்று பெயர். அன்னை ஸ்ரீசாரதாதேவியார் காசிக்கு வந்திருந்த போது இந்தத் துறையில் நீராடி, அதன் கரையில் இருக்கும் சிவலிங்கத்திற்கு கங்கை நீரால் அபிஷேகமும் செய்தார். நாங்களும் அங்கு கங்கையில் நீராடினோம்.

ஒருநாள் சுவாமி பாஸ்கரானந்தரின் சமாதிக்குச் சென்றோம். காசியில் அந்நாளில் வாழ்ந்த ஒரு பெரும் மகான் சுவாமி பாஸ்கரானந்தர். அவரை அன்னை ஸ்ரீசாரதாதேவியாரும், சுவாமி விவேகானந்தரும் சந்தித்துப் பேசியிருக்கிறார்கள்.

பாஸ்கரானந்தர் சமாதியிலிருந்து நாங்கள் 'சங்கட் மோசன் (சங்கடங்களை நீக்குபவர்)' என்ற அனுமான் கோயிலுக்குச் சென்றோம். இந்தக் கோயில் இப்போதுள்ள இடத்தில்தான் ஆஞ்சநேயர், துளசிதாசருக்குத் தரிசனம் கொடுத்தாராம். இந்தச் சங்கட்மோசன் கோயிலைச் சேர்ந்த நிர்வாகிகளின் அழைப்பின்பேரில் அனுமன் ஜயந்தி, ஸ்ரீராமநவமி சமயங்களில் ஸ்ரீராமகிருஷ்ண மடத்தின் சந்நியாசிகள் இந்தக் கோயிலில் ஸ்ரீராமநாம சங்கீர்த்தனம் செய்வது வழக்கம். நாங்கள் சங்கட்மோசன் அனுமானுக்கு நைவேத்தியம் செய்த இனிப்பு வகைகளை அங்கேயே கோயிலிலிருந்த

பக்தர்களுக்கு விநியோகம் செய்தோம். பின்னர் ஆஞ்சநேயர் சந்நிதியை வலம் வந்தோம்.

கோயிலில் அமர்ந்து ஜபம், தியானம், பிரார்த்தனை செய்தோம். இந்தக் கோயிலில் துளசிதாசர் இயற்றிய ஹனுமன் சாலீஸா ஸ்தோத்திர புத்தகங்கள் நிறைய வைக்கப்பட்டுள்ளன. அவற்றை இந்தக் கோயிலுக்குச் செல்லும் பக்தர்கள் எடுத்து படித்துவிட்டு அங்கேயே வைக்கிறார்கள். இந்தக் கோயிலில் நிறைய குரங்குகள் இருக்கின்றன.

அங்கிருந்து துர்க்கை கோயிலுக்குச் சென்றோம். காசியிலுள்ள துர்க்கை கோயில் முழுவதும் கருஞ்சிவப்பு கலரில் சுண்ணாம்பு பூசியிருக்கிறார்கள். அந்தக் கோயிலின் அருகில் கோயிலைச் சேர்ந்த ஒரு பெரிய குளம் இருக்கிறது. இந்தக் குளத்திற்கு அருகில் ஓர் ஒற்றையடிப் பாதையில் சுவாமி விவேகானந்தர் நடந்து சென்றபோது அவரைக் குரங்குகள் துரத்தின. அவர் ஓட ஆரம்பித்ததும் குரங்குகள் மேலும் துரத்தின. அப்படி ஓடிக் கொண்டிருக்கும்போது அங்கே வந்த துறவி ஒருவர், 'குரங்குகளைக் கண்டு பயந்து ஓடாதே. அவற்றை எதிர்த்து நில்' என்று கூறினார். சுவாமி விவேகானந்தரும் அப்படியே நின்று தைரியமாக அவற்றை எதிர்கொண்டார். உடனே குரங்குகள் பயந்து ஓடிவிட்டன. இந்த நிகழ்ச்சியை சுவாமி விவேகானந்தர் பின்னாளில் தமது ஒரு சொற்பொழிவில் நினைவு கூர்ந்து, ''வாழ்க்கையைக் கண்டு பயந்து ஓடாதீர்கள், அவற்றை எதிர்கொள்ளுங்கள்'' என்று கூறியுள்ளார்.

துர்க்கை கோயிலைப் பிரதட்சிணம் செய்துவிட்டு, கால பைரவர் கோயிலுக்குச் சென்றோம். காசியின் காவல் தெய்வம் கால பைரவர். ''காசியில் யம பயம் கிடையாது; ஆனால் கால பைரவரின் தண்டனை உண்டு'' என்று காசியின் மகிமையைக் கூறும் காசி கண்டம் என்னும் நூல் குறிப்பிடுகிறது. ''கால பைரவர் அனுமதித்தால்தான் ஒருவர் காசிக்குள் நுழையவோ, வெளியே வரவோ முடியும்'' என்பது இந்துக்களின் நம்பிக்கையாகும்.

ஸ்ரீராமகிருஷ்ணர் காசிக்குச் சென்றிருந்தபோது கால பைரவரின் தரிசனம் பெற்றார். அதைப்பற்றி சுவாமி பிரம்மானந்தர் பின்வருமாறு கூறியுள்ளார்: ''ஸ்ரீராமகிருஷ்ணர் காசியில் இருந்தபோது, தாடியுடன் கூடிய பேரொளி பொருந்திய தெய்விக வடிவம் ஒன்று அவர் முன் தோன்றியது. அந்தத் தெய்விக வடிவம் காசியிலுள்ள முக்கியமான இடங்களையெல்லாம் ஸ்ரீராமகிருஷ்ணருக்குக் காண்பித்தது. அந்தச் சமயத்தில் ஸ்ரீராமகிருஷ்ணரின் உடலோ நினைவின்றி விழுந்து கிடந்தது. அந்த வடிவம் கால பைரவராகும்.''

கால பைரவர் கோயிலுக்கு வெளியிலும், கோயிலுக்கு உள்ளும், சிலர் 'காசிக் கயிறு' என்று சொல்லப்படும் சிறியதும், பெரியதுமான கருப்புக் கயிற்றை விற்றுக்கொண்டிருந்தார்கள். காசி யாத்திரை செல்பவர்கள், இந்தக் கோயில் அருகில் விற்கும் கருப்புக் கயிற்றை வாங்கி இங்குள்ள கால பைரவருக்குச் சமர்ப்பிப்பார்கள். கால பைரவரின் பிரசாதமான

இந்தக் கயிற்றைக் கையில் கட்டிக் கொண்டாலோ, கழுத்தில் அணிந்துகொண்டாலோ கால பைரவர் நம்மைக் காப்பாற்றுவார் என்பது இந்துக்களின் நம்பிக்கை.

ஆனால் இப்போது இதே போன்ற கருப்புக் கயிற்றை வேறு பல கோயில்களின் பிரசாதமாகவும் கையில் அணிந்துகொள்ளும் வழக்கம் பரவி வருகிறது. எங்கள் குழுவினர் பொருட்டு கால பைரவர் கோயிலில், கால பைரவர் அஷ்டகம் கூறி பண்டா பூஜை செய்தார்.

அந்த அஷ்டகத்தின் சில வரிகள் வருமாறு:

தேவராஜ - ஸேவ்யமான பாவனாங்க்ரி பங்கஜம் ।
வ்யால - யஜ்ஞஸூத்ரமிந்து **சேகரம்** க்ருபாகரம் ॥
நாரதாதி - யோகிவ்ருந்த வந்திதம் **திகம்பரம்** ।
காசிகாபுராதிநாத - கால**பைரவம் பஜே** ॥

(பொருள்: தேவேந்திரனால் வணங்கப்பட்ட புனிதமான திருவடித் தாமரைகளை உடையவரும், பாம்பைப் பூணூலாக அணிந்தவரும், தலையில் சந்திரனைச் சூடியவரும், கருணை புரிபவரும், நாரதர் முதலிய யோகிகளின் குழுவினரால் வணங்கப் பெற்றவரும், திசைகளையே ஆடையாக உடையவரும், காசீபுரியின் ஆதிநாதருமான கால பைரவரைப் போற்றுகிறேன்.)

பொதுவாக வட இந்தியாவிலுள்ள கோயில்களில் நவக்கிரகங்களுக்குத் தனியாகச் சந்நிதி கிடையாது. ஆனால் காசியில் கால பைரவர் சந்நிதியைப் பிரதட்சிணம் செய்யும்போது, அங்கு நவக்கிரகங்களுக்கும்

திருவுருவச் சிலைகள் இருப்பதைப் பார்க்கலாம். கால பைரவர் கோயிலின் உட்பிராகாரச் சுவர்களில் பைரவரின் பல்வேறு அம்சங்களை வண்ண ஓவியங்களாக வரைந்திருக்கிறார்கள்.

கால பைரவரின் தரிசனம் முடிந்த பிறகு நாங்கள் விசாலாட்சிக் கோயிலுக்குச் சென்றோம். காசியிலுள்ள விசாலாட்சிக் கோயில், தமிழ்நாட்டைச் சேர்ந்த நாட்டுக் கோட்டை நகரத்தார்களின் நிர்வாகத்தில் இருந்து வருகிறது. இந்தக் கோயில் தமிழ்நாட்டிலுள்ள தேவி கோயிலின் அமைப்பில் கட்டப்பட்டுள்ளது. இங்குள்ள விசாலாட்சி விக்கிரகம் தமிழ்நாட்டில் செய்யப்பட்டு அங்கு பிரதிஷ்டை செய்யப்பட்டதாகும். எனவே மூலவராக இங்கிருக்கும் விசாலாட்சியின் விக்கிரகம், தமிழ்நாட்டிலுள்ள தேவி கோயில்களிலுள்ள தேவியின் விக்கிரகம் போன்றே காட்சியளிக்கிறது. அந்தத் தேவியின் பின்னால் விசாலாட்சியின் புராதன சிறிய சிலையும் இருக்கிறது. அந்தச் சிலையின் முகம் மட்டும் யாத்திரிகர்களுக்குத் தெரியும் வகையில் வைத்திருக்கிறார்கள். விசாலாட்சி சந்நிதியைச் சுற்றியுள்ள பிராகாரத்தில் சிவலிங்கங்கள், நந்தி, விநாயகர் சிலைகள் உள்ளன. கோயிலைச் சேர்ந்த பக்கத்து அறையிலுள்ள விசாலாட்சியின் உற்சவ மூர்த்தி, நவக்கிரகங்கள், சிவலிங்கம் ஆகியவற்றைச் சென்று வழிபட்டோம்.

நாங்கள் காசியில் இருந்த 3 நாட்களும் பலமுறை விசுவநாதரையும் அன்னபூரணியையும் வழிபட்டோம்.

பலமுறை கங்கையில் நீராடினோம். கயிலை யாத்திரைக்கு முன்பு காசி தரிசனம் மிகவும் குறிப்பிடத் தக்கதாக இருந்தது.

காட்மாண்டு (18.5.98 திங்கள் – 20.598 புதன்) ———

அடுத்து நாங்கள் நேபாள நாட்டின் தலைநகரான காட்மாண்டு செல்ல இருந்தோம். 17–ஆம் தேதி காசியிலிருந்து புறப்பட்டு பைரவா என்ற இடத்திற்கு செல்வது என்று முன்பே திட்டமிட்டிருந்தோம். இரவு உணவுக்குப் பிறகு எட்டு மணிக்கு ஏர்கண்டிஷன் பஸ்சில் புறப்பட்டோம். வாராணசிக்கும் பைரவாவுக்கும் இடையில் உள்ள தூரம் 320 கி.மீ. ஆகும். இரவு எட்டு மணிக்குப் புறப்பட்ட பஸ் மறுநாள் விடியற் காலை 4.30 மணிக்கு சோனாலி (Sonali) என்ற இடத்தைச் சென்றடைந்தது. அதுவே இந்தியாவின் கடைசி எல்லையாகும். அதன்பிறகு நேபாள் வந்துவிடுகிறது.

சோனாலியில் ஓர் இடத்தில், Here ends the Indian Border என்ற வாசகம் பெரிய எழுத்துக்களில் காணப் பட்டது. சோனாலியைக் கடந்து நாங்கள் நேபாள அரசின் எல்லைக்குள் நுழைய வேண்டும். சோனாலி இந்திய எல்லையைக் கடந்ததும், நேபாள் ஆரம்பிக்கும் இடத்தில் ஒரு செக் போஸ்ட் இருக்கிறது. அங்கு இந்தியாவிலிருந்து செல்பவர்கள் தங்களிடம் பாஸ் போர்ட் வைத்திருக்காவிட்டால், அடையாள அட்டையைக் (Identity Card) காட்ட வேண்டும். மேலும் இந்த செக் போஸ்ட்டில் நம்மிடம் கேமரா, டேப் ரிக்கார்டர் போன்ற வெளிநாட்டுப் பொருள்கள் ஏதாவது

இருந்தால் அதற்கான Declaration படிவத்தில் பூர்த்தி செய்து தர வேண்டும். இல்லாவிட்டால் மீண்டும் இந்த வழியாக நாம் திரும்பி வரும்போது, "இவற்றை நீங்கள் வெளிநாட்டிலிருந்து வாங்கி வருகிறீர்கள்" என்று சொல்லி Duty போட்டுவிடுவார்கள். நாங்கள் Customs Clearance-க்காகச் சிறிது நேரம் காத்திருந்தோம்.

பின்னர் நேபாள எல்லையாகிய பெலேஹியாவுக் குள் நுழைந்தோம். பெலேஹியா என்ற இடத்தில் நேபாள நாட்டின் எல்லை ஆரம்பிக்கிறது. அங்கு நாங்கள் தங்குவதற்கு வாராணசி, வருணா டிராவல்ஸைச் சேர்ந்தவர்கள் முன்னதாகவே ஒரு விருந்தினர் விடுதியை ஏற்பாடு செய்திருந்தனர். இந்த விடுதியில், 'ஒரு நாளைக்கு இவ்வளவு' என்று கட்டணம் செலுத்த வேண்டியதில்லை. மாறாக, 'ஒரு மணி நேரத்துக்கு இவ்வளவு கட்டணம்' என்று நிர்ணயித்திருக்கிறார்கள்.

பெலேஹியாவிலிருந்து பைரவா விமான நிலையத்திற்குச் செல்லும் வழியில், பகவான் புத்தர் பிறந்த இடமான 22 கி.மீ. தூரத்திலுள்ள லும்பினிக்குச் செல்லும் பாதை பிரிந்து செல்கிறது. நாங்கள் பைரவா விமான நிலையத்திற்குச் சென்றோம். அங்கு காட்மாண்டு புறப்பட இருந்த நேபாள் ஏர்லைன்ஸ் விமானத்தில் சென்று அமர்ந்தோம். அந்த விமானம் ஒரு மணிநேரப் பிரயாணத்திற்குப் பிறகு பகல் 1.15 மணிக்குக் காட்மாண்டு விமான நிலையத்தைச் சென்ற டைந்தது. இந்தியாவுக்கும் நேபாளத்திற்கும் நேரத்தில்

15 நிமிடம் வித்தியாசம் இருக்கிறது. அதாவது சென்னையில் காலை 8 மணி என்றால், காட்மாண்டில் காலை மணி 8.15 ஆகும்.

அங்கு விமான நிலையத்தில் Eco Trek-யைச் சேர்ந்த ஆறு பேர் எங்களை வரவேற்பதற்கு வந்திருந்தார்கள். அவர்கள் எங்கள் எல்லோருக்கும் மாலைகள் அணிவித்து அன்புடன் மகிழ்ச்சி பொங்க கோலாகலமாக வரவேற்றார்கள்.

பின்னர் எங்கள் அனைவரையும் ஒரு வேனில் காட்மாண்டில் 'தாமல்' என்ற பகுதியிலுள்ள கார்டன் ஹோட்டலுக்கு அழைத்துச் சென்றனர். அது மூன்று நட்சத்திர ஹோட்டலாகும். அதில் ஓர் அறையில் இரண்டு பேர் வீதம், பத்து அறைகளில் நாங்கள் தங்கினோம்.

மாலை 5.30 மணிக்கு டீலக்ஸ் வேனில், காட்மாண்டிலுள்ள 'ஸ்ரீராமகிருஷ்ண - விவேகானந்தா வேதாந்த சென்டர்' இருக்கும் இடத்திற்குப் புறப்பட்டோம். இந்த இடத்தில் பக்தர்கள் ஸ்ரீராமகிருஷ்ணரின் பெயரால் ஆன்மிகத் தொண்டு செய்து வருகிறார்கள். இங்குள்ள பிரார்த்தனை ஹாலில் ஸ்ரீராமகிருஷ்ணரின் முன்பு அமர்ந்து பிரார்த்தனை செய்தோம்.

அடுத்து நாங்கள், நேபாளத்தில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த பசுபதிநாத் சிவன் கோயிலுக்குப் புறப்பட்டோம். இந்தக் கோயில் பாக்மதி ஆற்றின் கரையில் அமைந்துள்ளது. கோயிலுக்கு அருகில் வண்டிகள்

செல்வதற்கு வசதியில்லை. கார், பஸ், வேன் ஆகிய வற்றில் செல்பவர்கள் குறிப்பிட்ட ஓர் இடத்தில் வண்டி களை நிறுத்திவிட்டு, சுமார் பதினைந்து நிமிடங்கள் நடந்து சென்றுதான் கோயிலை அடைய முடியும். பாக்மதி ஆற்றின் கரையில் பல மேடைகள் போன்ற பகுதிகள் உள்ளன. அவற்றில் பிணங்கள் எரிக்கப்படு கின்றன. நாங்கள் சென்றபோதும் அங்கே சில சடலங்கள் எரிந்து கொண்டிருந்தன. இங்கு இந்த இடம் 'மணி கர்ணிகா காட்' என்ற பெயரால் அழைக்கப்படுகிறது.

பசுபதிநாத் கோயில் சிவன் கோயில் என்றாலும் பல தனித்துவங்களைக் கொண்டது. இங்கே அம்பிகைக்கென்று தனி சன்னிதி கிடையாது. ஆனால் கோயிலின் உள்ளேயே தனி இடத்தில் தேவி ஸ்ரீசக்கர மாக வழிபடப்படுகிறாள். காலையில் 11.00 மணிக்கு ஒரு விசேஷ பூஜை நடைபெறுகிறது. இதில் பசுபதி நாதரின் மேல்முகத்தில் சந்தனம் பூசப்படுகிறது. அதன் மீது ஸ்ரீசக்கரம் வரையப்பட்டு, அதில் ராஜராஜேஸ்வரி எழுந்தருளச் செய்யப்படுகிறாள். பிறகு இருவருக்கு மாக சிவசக்தி பூஜை நடைபெறுகிறது. பசுபதிநாத் கோயிலிலிருந்து சிறிது தூரத்தில் குஹ்யேஸ்வரி கோயில் உள்ளது. இந்த தேவியும் பசுபதிநாதரின் தேவியாகக் கருதப்படுகிறாள்.

பசுபதிநாத் கோயில் நேபாளத்தில் இருந்தாலும் இந்தியர்தான் அங்கே தலைமை பூஜாரியாக இருக்க வேண்டும் என்ற நியதி உள்ளது. சிருங்கேரி சங்கர மடத்தின் பரிந்துரையின் பேரில் தலைமை பூஜாரியை

நேபாள மன்னரே நேரடியாக நியமிக்கிறார். இது முக்கியத்துவம் வாய்ந்தது. ஏனெனில் நாட்டின் பிரதம மந்திரியையும், பசுபதி நாத் கோயில் தலைமை பூஜாரியையும் மட்டுமே மன்னர் இவ்வாறு நேரடியாக நியமிக்கிறார்.

நாங்கள் பசுபதிநாத் கோயில் கருவறையை அடைந்தபோது இரவு மணி 7.35. இங்கு கருவறையில் பசுபதிநாதர் ஐந்து முகங்களுடன் காட்சி அளிக்கிறார். அவருக்கு மேலே நாக கிரீடம் வைத்திருந்தார்கள்.

பசுபதிநாத் கோயில் கருவறையின் எதிரில் பித்தளையால் செய்யப்பட்ட பிரம்மாண்டமான நந்தி அமர்ந்த நிலையில் காணப்படுகிறது. சுமார் ஏழு அடி உள்ள பீடத்தைத் தவிரவும், நந்தி உருவம் மட்டும் சுமார் பன்னிரண்டு அடி உயரம் இருக்கும். அந்தப் பெரிய நந்தியின் உருவம் தஞ்சை, பிரகதீஸ்வரர் கோயிலிலுள்ள நந்தியை எனக்கு நினைவுபடுத்தியது. பசுபதிநாத் கோயிலைப் பிரதட்சிணம் செய்தபோது, அங்கிருந்த பெரிய திரிசூலம் என் கவனத்தை ஈர்த்தது.

பசுபதிநாத் கோயிலில் 1008 சிவலிங்கங்கள் இருக்கும் இடத்திற்குச் சென்றோம். பசுபதிநாத் கோயிலில் சிறிய, பெரிய சுவாமி சந்நிதிகள் பல இருக்கின்றன. இவற்றில் முக்கியமாகக் குறிப்பிட்டுச் சொல்லும் வகையில் பைரவர் சந்நிதி அமைந்துள்ளது. இதில் சுமார் எட்டு அடி உயரமும், ஐந்தடி அகலமும் கொண்ட பித்தளையால் ஆன பைரவரின் விக்கிரகம் கம்பீரமாகக் காட்சியளிக்கிறது. இந்தக் கோயிலில்

பித்தளை விக்கிரகங்கள், கல் விக்கிரகங்கள், மர விக்கிரகங்கள் என்று சிறியதும் பெரியதுமாக ஏராள மான விக்கிரகங்கள் உள்ளன. இவற்றில் முக்கியமாக நமது கவனத்தை ஈர்க்கும் வகையில் பல சிவ லிங்கங்கள் அமைந்துள்ளன.

இந்தக் கோயிலில், தமிழ்நாட்டிலுள்ள சிவன் கோயில்களில் இருக்கும் அம்சங்கள் அநேகமாக இல்லை என்றே சொல்ல வேண்டும். வட இந்தியா, நேபாள், திபெத், சீனா ஆகிய கலாச்சாரங்களின் ஒரு நேர்த்தியான கலவையாக இந்தப் பசுபதிநாத் கோயில் விளங்குகிறது.

கோயில் பிராகாரத்திலுள்ள சிறிய மண்டபங்களில் ஆங்காங்கே சிவலிங்கங்கள் பிரதிஷ்டை செய்யப் பட்டுள்ளன. அவற்றைத் தரிசித்தபடியே கோயிலை விட்டு வெளியே வந்தோம். வேனில் சென்று அமர்ந்ததும் நாமாவளிகளும் பக்திப் பாடல்களும் பாடினோம்.

19.5.98 காலை ஒன்பது மணிக்கு ஒரு வேனில் அனைவரும் தட்சிண் காளி என்ற கோயிலுக்குப் புறப்பட்டோம். இந்த இடம் நாங்கள் தங்கியிருந்த ஹோட்டலிலிருந்து 25 கி.மீ. தூரத்தில் இருக் கிறது. வேனில் செல்லும்போது வழியில் மலை களையும் பள்ளத்தாக்குகளையும் இயற்கைக் காட்சிகளையும் பார்த்தபடியே சென்றோம். அந்தக் காட்சிகளும், சீதோஷ்ண நிலையும் தமிழ்நாட்டி லுள்ள எனக்கு உதகமண்டலத்தை நினைவுபடுத்தியது.

நாங்கள் சென்ற வேன் ஒரு சிறிய மலைக் குன்றின் மீது சென்று நின்றது. அந்தக் குன்றிலிருந்து சுமார் பதினைந்து நிமிடம் கீழே இறங்கிச் சென்றுதான் தட்சின் காளியைத் தரிசிக்க முடியும். தட்சிண்காளி கோயிலின் அருகில் வேன் செல்வதற்கு வசதி இல்லை. எனவே சற்று தொலைவிலேயே எங்கள் வேனை நிறுத்திவிட்டு நாங்கள் நடந்து கோயிலுக்குச் சென்றோம்.

வழி நெடுகிலும் பல கடைகள் இருந்தன. அந்தக் கடைகளில் பூஜை சாமான்கள், சுவாமி படங்கள், நேபாளத்தின் முக்கிய காட்சிகளை விளக்கும் படங்கள், நேபாள கைவினைப் பொருள்கள், நேபாள நாணயங்கள், நேபாள ஸ்டாம்புகள், பௌத்த மதம் சார்ந்த தொன்மை வாய்ந்த பொருள்கள், பாரம்பரியம் மிக்க நேபாளிய கத்திகள் போன்றவற்றை விற்பனைக்கு வைத்திருந்தார்கள்.

தட்சின் காளி கோயில் இருக்கும் இடத்தில் பூர்ணாவதி கங்கா, உத்தராவதி கங்கா ஆகிய இரண்டு சிறிய ஆறுகள் செல்கின்றன. காளி கோயிலுக்குச் சிறிது தூரத்தில் காளிக்குப் பலி கொடுக்கும் பொருட்டு, பக்தர்கள் வாங்கிச் செல்வதற்கான ஆடுகளும் கோழிகளும் விற்பனைக்கு இருந்தன. கோயிலில் நேபாளியர்களான பண்டாக்கள் ஆடுகளையும் கோழிகளையும் பலியிட்டுக்கொண்டிருந்தார்கள். நாங்கள் அங்கிருந்த போது ஆறு கோழிகளும், ஐந்து ஆடுகளும் பலியிடப் பட்டன.

தட்சிண் காளிக்குப் பூஜை செய்யும் பணியை இரண்டு பெண்கள் செய்கிறார்கள். இந்த தட்சிண் காளி கோயில் திறந்த வெளியில் அமைந்த ஒரு சிறிய கோயிலாகும். இங்கே காளி ஸ்மாசான காளியாக, அதாவது சுடுகாட்டில் உறைபவளாக வழிபடப்படு கிறாள். ஒரு காலத்தில் கொள்ளையர்கள் வழிபட்ட இடம் இது என்றும் கூறப்படுகிறது. இங்கே காளிக்கு இரும்பு ஆபரணங்களே அணிவிக்கப்படுகின்றன.

இந்துக்கள் அல்லாத வெளிநாட்டினர் இந்தக் கோயிலுக்குள் அனுமதிக்கப்படுவதில்லை. அவர்கள் தூரத்தில் சுற்றி நின்றுதான் பார்க்க முடியும். அவ்விதம் வெளிநாட்டவர் சிலர் தொலைவில் நின்று, தட்சிண் காளி கோயிலைப் பார்த்தபடியே நின்றிருந்ததையும் கண்டோம்.

கோயிலிலிருந்து சுமார் 30 மீட்டர் தூரத்தில் ஓர் இடத்தில் மக்கள் கூட்டமாகக் கூடியிருந் தார்கள். அங்கு கோயிலில் பலியிடப்பட்ட ஆடு, கோழிகளைச் சிறிய சிறிய துண்டுகளாக வெட்டிப் பிரசாதமாக அங்கிருந்தவர்களுக்குக் கொடுத்துக்கொண் டிருந்தார்கள்.

கோயிலுக்குள்ளும், அருகிலும் ஆங்காங்கு புறாக்கள் அமர்ந்திருந்தன. அவற்றை பார்த்தபோது, 'ஆடு-கோழி பலியிடும் கொடுமையும், சமாதான புறாவும் இங்கே ஒரே இடத்தில் இருக்கின்றனவே!' என்ற எண்ணம் தோன்றியது.

கோயிலிலிருந்து திரும்பி வரும்போது எங்களில் சிலர் தங்களுக்குத் தேவையான வெளிநாட்டு ஸ்டாம்புகள், நேபாள நாணயங்கள், நேபாளத்தின் கைவினைப் பொருட்கள், சுவாமி படங்கள் ஆகிய வற்றை விலைக்கு வாங்கினார்கள்.

இவையெல்லாம் முடிந்து நாங்கள் எங்கள் வேன் இருந்த இடத்திற்கு மீண்டும் வந்து சேர்ந்தபோது பகல் மணி 12 ஆகியிருந்தது.

பகல் மூன்று மணிக்கு கார்டன் ஹோட்டலில் உள்ள Conference Hall-இல் எங்கள் குழுவினருடன், கைலாஸ் யாத்திரையின்போது பயணம் எவ் விதம் இருக்கும் என்பதுபற்றி Eco Trek ஜோதி அதிகாரி பேசினார். அதைத் தொடர்ந்து அவர் எங்கள் குழுவினர் கேட்ட சந்தேகங்களுக்கு விளக்கம் அளித்தார்.

அன்று மாலையில் நாங்கள் கடைவீதிக்குச் சென்று டிரக் ஸூட், உல்லன் தொப்பிகள், குடைகள், சாக்ஸ், ஷூ போன்றவற்றை வாங்கினோம்.

20.5.98 காலை எட்டு மணிக்கு நாங்கள் மினி வேனில் கார்டன் ஹோட்டலிலிருந்து மீண்டும் பசுபதிநாத் கோயிலுக்குச் சென்றோம். அன்று எங்கள் குழுவின் சார்பாகச் சிறப்பு வழிபாடு செய்வதற்கு முந்தின நாளே ஏற்பாடு செய்திருந்தோம். கோயிலி லுள்ள பின் மண்டபத்தில் ஒரு பண்டாவின் மூலம், ''எங்கள் கைலாஸ் யாத்திரை நல்ல விதமாக அமைய வேண்டும்'' என்று சங்கல்ப பூஜைகள் செய்தோம்.

பூஜை முடிந்ததும் அந்த மண்டபத்தை வலம் வந்தோம். அப்போது மண்டபத்தில் இருந்த கண்ணாடி ப்ரேம் போட்ட இரண்டு படங்கள் எங்கள் கவனத்தை ஈர்த்தன. ஒரு படத்தில் ஸ்ரீராமகிருஷ்ணரும் அன்னை ஸ்ரீசாரதாதேவியும் இருந்தார்கள். அவர்களின் பின்னணி யில் காளியின் உருவம் இருந்தது. மற்றொரு படத்தில் ஸ்ரீராமகிருஷ்ணர், அன்னை ஸ்ரீசாரதாதேவி, சுவாமி விவேகானந்தர் ஆகிய மூவரும் இருந்தார்கள். அந்தப் படங்களை நாங்கள் சிறப்பு வழிபாடு செய்த அதே மண்டபத்தில் பார்த்தது எனக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தந்தது; அவர்கள் எங்கள் குழுவின் கைலாஸ் யாத்திரை நல்ல விதமாக அமைய வேண்டும் என்று எங்களை ஆசீர்வதிப்பதாகவே நாங்கள் எடுத்துக்கொண்டோம்.

பசுபதிநாத் கோயிலில் பண்டா பூஜையை முடித்தபோது காலை 9.25 மணி ஆகியிருந்தது. தினமும் காலை 9.45-க்கு அந்தக் கோயிலில் பூஜை செய்யும் பண்டாக்கள் கர்ப்பகிரகத்திற்கு வருகிறார்கள். அவர்கள் வந்து பசுபதிநாத்திற்குப் பூஜை செய்யும் அந்த நேரத்தில் மட்டும், பசுபதிநாத் கருவறையின் நான்கு பக்கங் களிலும் உள்ள நான்கு கதவுகளையும் திறந்து வைக் கிறார்கள். மற்ற நேரங்களில் கருவறையின் ஒரு கதவு மட்டுமே திறந்திருக்கும். அந்த ஒரு கதவின் மூலமே பக்தர்கள் பசுபதிநாதரைத் தரிசிக்க முடியும்.

நாங்கள் சென்ற சிறிது நேரத்திற்கெல்லாம் பூஜை செய்ய வேண்டிய பண்டா வந்தார். கருவறையின் நான்கு வாயில்களிலும், சுமார் நான்கு அடி உயரமுள்ள

தடுப்பு மரக்கதவுகள் நான்கு இருக்கின்றன. நாங்கள் நின்றிருந்த நுழைவாயிலுக்கு வந்த பண்டா ஒருவர், நுழைவாயிலின் மேலே கட்டப்பட்டிருந்த கயிற்றைப் பிடித்தபடியே இடுப்பளவு உள்ள தடுப்புக் கதவைத் தாண்டி கருவறைக்குள் சென்றார்.

கோயிலைச் சுற்றிலும் பல இடங்களில் பக்தர்கள் சிறு சிறு குழுக்களாகப் பிரிந்து பக்திப் பாடல்கள் பாடிக்கொண்டிருந்தார்கள்.

பின்னர் மினி வேன் மூலம் நாங்கள் குஹ்யேஸ்வரி கோயிலுக்குப் புறப்பட்டோம். இந்தத் தேவியின் கோயில் பசுபதிநாத் கோயிலிலிருந்து சுமார் இரண்டு கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கிறது. இது அறுபத்தி நான்கு சக்தி பீடங்களில் ஒன்றாகக் கருதப்படுகிறது. இது தேவியின் பிருஷ்டபாகம் விழுந்த இடம் என்று அங்கிருந்த ஒருவர் கூறினார். இந்தக் கோயிலும் பாக்மதி ஆற்றின் கரையில் அமைந்துள்ளது.

குஹ்யேஸ்வரியை வழிபட்ட பின்னர் அங்கிருந்து புத்த நீலகாந்தர் என்ற விஷ்ணு கோயிலுக்குச் சென்றோம். நாங்கள் சென்ற வேன் அந்தக் கோயிலைச் சென்றடைந்த போது, அங்கு ''ஓம் நமோ நாராயணாய'' என்று பலரும் சேர்ந்து சொல்லிக்கொண்டிருந்தது எங்கள் காதில் விழுந்தது. கோயிலை நெருங்கியபோது, அந்தச் சப்தம் அங்கு நடந்துகொண்டிருந்த கோடி அர்ச்சனை காரணமாக எழுந்தது என்பது புரிந்தது. கோயிலின் முன்பகுதியில் ஒரு பெரிய யாககுண்டம் காணப்பட்டது. அதைச் சுற்றிலும் பலர் அமர்ந்து, புனித

அக்கினியில் ஆகுதிகள் அளித்தபடியே நாராயண மந்திரத்தைக் கோடி அர்ச்சனையாகச் சொல்லிக்கொண் டிருந்தார்கள்.

இந்தக் கோயிலில் ஒரு குளம் இருக்கிறது. இந்தக் குளத்தின் நடுவில் - சுமார் இருபது அடி அகலமும், நூறு அடி நீளமும் கொண்ட மகாவிஷ்ணு பாம்பணை யில் பள்ளிகொண்டிருப்பதுபோல் அமைத்திருக் கிறார்கள். தண்ணீரின் நடுவில் உள்ள பாம்பணையும், விஷ்ணுவின் உருவமும் மிகவும் அழகானவை.

அங்கு நாங்கள் சென்றபோது பகல் மணி பன்னிரண்டு இருக்கும். அப்போது வெயில் கடுமை யாகவும் கொடுமையாகவும் இருந்தது. தரை மிகவும் சூடாக இருந்ததால் அங்கு நாங்கள் வெறுங்காலுடன் நிற்பதற்கு மிகவும் சிரமப்பட வேண்டியிருந்தது. அந்த விஷ்ணுவின் திருவடிகளைத் தொட்டு வணங்கிவிட்டு வந்தோம். கோயிலை விட்டு வெளியே வந்தபோது, கோடி அர்ச்சனை நடந்துகொண்டிருந்ததைச் சிறிது நேரம் பார்த்துவிட்டு, பிறகு யாக குண்டத்தைப் பிரதட்சிணம் செய்தோம்.

அங்கிருந்து 'சுயம்புநாத்' என்ற புத்தர் கோயிலுக்குச் சென்றோம். இந்தப் புத்தர் கோயிலில் உயரமான ஒரு ஸ்தூபி இருக்கிறது. அதில் இரண்டு கண்கள் வரையப்பட்டுள்ளன. இங்கு மட்டுமல்ல, பொதுவாக எல்லா பௌத்த மடாலயங்களிலும், புத்தர் கோயில்களிலும் இரண்டு பெரிய கண்கள் வரையப்படு கின்றன. இந்தக் கண்கள் புத்தர் உலகைத் தமது

அருட்கண்களால் பார்த்துக்கொண்டிருப்பதாக அமை கின்றன. சில இடங்களில் அந்தக் கண்களிலிருந்து கண்ணீர்த் துளி விழுவதற்குத் தயாராக இருப்பது போலவும் காட்டப்படுகிறது. மக்களின் துன்பத்தைக் கண்டு புத்தர் வருந்துவதை இந்தக் கண்ணீர்த் துளிகள் தெரிவிக்கின்றன.

மினி வேனில் சென்ற நாங்கள் அந்தப் புத்தர் கோயில் உள்ள மலையடிவாரத்தைச் சென்றடைந் தோம். தமிழ்நாட்டிலுள்ள சில முருகன் கோயில்களில், மலையடிவாரத்திலிருந்து படிகள் ஆரம்பித்து நாம் அதன் உச்சியை அடைவதுபோல இந்த 'சுயம்புநாத்' கோயில் அமைந்துள்ளது. இந்த இடத்திற்கு புத்தர் ஒரு சமயம் வந்ததாகக் கூறுகிறார்கள். மலையின் படிகளில் ஏற ஆரம்பித்ததும் அங்கு குளத்தின் நடுவிலுள்ள புத்தர் சிலை, சிறிய பெரிய ஸ்தூபிகள் ஆகியவற்றைப் பார்த்தோம்.

இந்தக் கோயிலின் உச்சியிலுள்ள வளாகத்தில் ஸ்தூபிகள், காளிகோயில், அருங்காட்சியகம், மலை மீதிருந்து காட்மாண்டு நகரைப் பார்க்கும் வகையில் உள்ள டெலஸ்கோப் ஆகியவை இருக்கின்றன. அருங் காட்சியகம் சிறியது. அதில் பௌத்த மத தொடர் புடைய சிலைகள் போன்றவை இருந்தன. மலைப் படிகளில் ஏறிச் செல்லும் வழியில் சில கடைகள் இருந்தன. அந்தக் கடைகளில் பெரும்பாலும் நேபாள் நாட்டின் கைவினைப் பொருட்களை விற்பனைக்கு வைத்திருந்தார்கள். இவற்றில் பெரும்பாலானவை புத்த

மதத்துடன் தொடர்புடையவை. மலையின் உச்சியிலுள்ள காளி கோயிலையும், ஸ்தூபிகளையும், அருங்காட்சியகத்தையும் பார்த்துவிட்டு கார்டன் ஹோட்டலுக்குப் புறப்பட்டோம்.

ஹோட்டலில் எங்கள் யாத்திரை ஏஜண்ட் ஜோதி அதிகாரியுடன் 'கைலாஸ் யாத்திரைக்கான முன்னேற்பாடுகள்' குறித்து ஒரு கலந்துரையாடல் இடம்பெற்றது. கலந்துரையாடலின் முடிவில் - இந்த யாத்திரையில் அதிக உயரம் (High Altitude) காரணமாக உடல்நலம் பாதிக்கப்படுபவர்களுக்கு Treatment கொடுக்கும் - Portable Altitude Chamber Demonstration நடந்தது. இதுவே 'காமா பேக் (Gama Bag)' என்று கூறப்படுகிறது.

அதிக உயரங்களில் காற்றின் ஆக்ஸிஜன் குறைவு, அழுத்தமும் குறைகிறது. இதனால் மூச்சு விடுவதும், இரத்த ஓட்டமும் பாதிக்கப்படுகிறது. தலைவலி, தலைசுற்றல், நினைவு தவறுதல் போன்றவை இதன் விளைவாக ஏற்படுகின்றன. இவற்றால் பாதிக்கப்பட்டவருக்கு முதல் கட்டமாக மருந்துகள் கொடுக்கப்படுகின்றன. மருந்து பலனளிக்காதபோது, உயரம் குறைந்த ப்குதிகளில் இருப்பதுபோன்ற ஒரு நிலைமையைச் செயற்கையாக உருவாக்குகிறார்கள். அதற்குப் பயன்படுவதே இந்த காமா பேக். இந்தச் சிகிச்சையும் பலனளிக்காவிட்டால் நோயாளியை உடனடியாக கீழ்ப் பகுதிகளுக்கு எடுத்து வருவதைத் தவிர வேறு எந்த வழியும் இல்லை. அவ்விதம் கொண்டு வராவிட்டால் உயிருக்கே ஆபத்து நேரிடலாம்.

காமா பேக் Demonstration கார்டன் ஹோட்டலைச் சேர்ந்த நீச்சல் குளத்தின் அருகிலுள்ள புல்வெளியில் நடைபெற்றது. எங்கள் குழுவைச் சேர்ந்த ஒருவர் காமா பேக் Demonstration பொருட்டு காமா பேகுக்குள்படுத்தார். இந்த காமா பேகுக்குள் காற்று முழுவதும் செலுத்தப் பட்ட பிறகு நான் அவரது அருகில் சென்று, ''உள்ளே இருப்பது எப்படி இருக்கிறது?'' என்று வினவினேன். அதற்கு அவர், ''முழங்கால் பகுதி சிறிது வேர்த்திருக்கிறது'' என்று கூறினார். பிறகு அவர் காமா பேக்கிலிருந்து வெளியே வந்தார். 'இந்த காமா பேக்கை ஒரு முறை உப யோகிப்பதற்கு ரூ.2,000' என்ற ஏற்பாட்டின் கீழ், எங்கள் கைலாஸ் யாத்திரையின்போது இந்த காமா பேக்கையும் எங்களுடன் எடுத்துச் செல்ல முடிவு செய்தோம்.

அவ்விதமே காமா பேக்கை எங்களுடன் எடுத்துச் சென்றோம். வழியில் பிகுட்ஸோ என்ற இடத்திலும், தார்ச்சனிலும் எங்கள் குழுவைச் சேர்ந்த சிலர் காமா பேக் டிரீட்மெண்ட் எடுத்துக்கொண்டனர். ஆனால் நாங்கள் யாத்திரை முடிந்து காட்மாண்ட் திரும்பியபோது, காமா பேக் பயன்படுத்தியவர்களிடமிருந்து ஈகோ டிரக்கைச் சேர்ந்த ஜோதி அதிகாரி தலா ரூ.2000 பெற்றுக்கொள்ள வில்லை.

அன்று மாலை எங்கள் குழுவினர் அனைவரும் யாத்திரைக்குத் தேவையான பொருள்களைக் கடை களில் சென்று வாங்கினார்கள்.

அங்கு எங்கள் குழுவினரைச் சந்தித்த திபெத்தியர் ஒருவர் திபெத்தில் சீனாவின் ஆக்கிரமிப்பு பற்றி இவ்விதம் கூறினார்:

"நான் பெங்களூரில் சில காலம் தங்கிக் கல்வி கற்றேன். அதனால் தமிழ்நாட்டைப் பற்றி எனக்குக் கொஞ்சம் தெரியும். நீங்கள் தமிழ்நாட்டிலிருந்து வந்திருக்கிறீர்கள் என்பதால், உங்களிடம்தான் இப்போது மனம் விட்டுப் பேசுகிறேன். சீன அரசு திபெத்திலுள்ள திபெத்திய இளைஞர்களைத் தன் தலைநகரான பீகிங்கிற்கு அழைத்துச் சென்று, அங்கு அவர்களை ஒரு முகாமில் வைத்து பயிற்சி தருகிறது. அந்த முகாமில், 'தலாய்லாமா திபெத்தியர்களுக்குச் செய்தவை அனைத்தும் தவறு; அவர் திபெத்தியர்களுக்குத் தவறான வழிகளைக் காட்டினார். அதனால்தான் இப்போது திபெத்தியர்கள் பல விதமான துன்பங்களையும் அனுபவிக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. திபெத்தியர்கள் தலாய்லாமாவின் வழியைப் பின் பற்றாமல், சீன அரசு காட்டும் வழியில் சென்றால் திபெத்தியர்களுக்கு எல்லா நன்மைகளும் ஏற்படும். திபெத்திய மக்களின் நலனில் சீன அரசுக்குத்தான் உண்மையிலேயே அக்கறை இருக்கிறது' என்பன போன்ற கருத்துக்களைத் திரும்பத் திரும்ப கூறுகிறார்கள். இவ்விதம் திபெத்திய இளைஞர்களின் மூளையைச் சலவை செய்து, அந்தக் கருத்துக்களை அவர்கள் நம்பி ஏற்றுக்கொள்ளும்படி சீன அரசு செய்து வருகிறது. பிறகு திபெத்திய இளைஞர்கள் அவர்களின் ஊர்களுக்குத் திருப்பி அனுப்பப்படுகிறார்கள். இதை நான் உங்களிடம் மனம் விட்டுக் கூறுகிறேன். இப்படி நான் சொன்னதை நீங்கள் திபெத்தில் யாரிடமும் சொல்லாதீர்கள்."

சீன எல்லையை நோக்கி...

21.5.98 காலையில் எழுந்து வெந்நீரில் குளித்தேன். மீண்டும் இது போல் மூன்று வாரங்களுக்குப் பிறகுதான் - யாத்திரை முடிந்து திரும்பி வரும்போதுதான் - சோப்புப் போட்டு நன்றாகக் குளிக்க முடியும் என்று நினைத்துக்கொண்டேன்.[1]

கார்டன் ஹோட்டலில் காலை ஏழு மணிக்கு எங்களுக்குச் சிற்றுண்டி வழங்கினார்கள்.

பின்னர் எங்கள் லக்கேஜ்களை ஹோட்டலுக்கு வெளியே எங்களை அழைத்துச் செல்ல காத்திருந்த மினி வேனில் ஏற்றினோம். அப்போது லேசாக மழை தூறிக் கொண்டிருந்தது. மினி வேன் முன்னால் 'Kailash Yatra 1998, Devotees, Sri Ramakrishna Math, Chennai - 600 004, South India' என்ற துணி பேனரைக் கட்டி, என்னுடன் வந்தவர்கள் ஃபோட்டோ எடுத்தார்கள்.

எங்களுடன் நேபாள சமையல்காரர்கள் 4 பேரும் வழிகாட்டி ஒருவரும் வந்தார்.

நாங்கள் காலை எட்டு மணிக்கு மினி வேனில் அமர்ந்து, "ஜெய் ஸ்ரீகுருமகராஜ் கீ ஜெய், ஜெய் ஸ்ரீமகா மாயீ கீ ஜெய், ஜெய் ஸ்ரீசுவாமிஜி மகராஜ் கீ ஜெய், ஜெய் ஸ்ரீகைலாஸ்பதி கீ ஜெய், காவாய் கனகத்திரளே போற்றி!

1. தற்போது (2002) சீன எல்லையில் ஆரம்பத்திலுள்ள நியாலம் என்ற ஊரிலும், கயிலாயத்தின் அடிவாரமான தார்ச்சனிலும் வெந்நீர்க் குளியலுக்கான ஏற்பாடுகள் உள்ளன. கட்டணம் செலுத்தி இதில் நன்றாகக் குளிக்க முடியும்.

கயிலைமலையானே போற்றி, போற்றி! தென்னாடுடைய சிவனே போற்றி, எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி! ஓம் நம: பார்வதி பதியே, ஹர ஹர மகா தேவா!'' ஆகிய முழக்கங்களுடன் காட்மாண்டிலிருந்து வேனில் புறப்பட்டோம்.

வழியில் ஒன்பது மணிக்கு பனேபா என்ற சிற்றூர் வந்தது. அங்கு நாங்கள் வண்டியை நிறுத்தி பழங்கள், காய்கறிகள் ஆகியவற்றை வாங்கினோம்.

பிறகு துலிகல் (Dhulikhel) என்ற ஊரிலுள்ள அழகான பள்ளத்தாக்கு வழியாக எங்கள் வேன் சென்றது. பச்சைக் கம்பளங்கள் விரித்ததுபோல் இருந்த புல்வெளிகளைப் பார்த்துக்கொண்டே சென்றோம். வழியில் பூக்களைப் பார்த்த இடங்களில் எங்கள் குழுவினர் சிலர் வண்டியை நிறுத்தி, சிவ பூஜைக்குத் தேவையான பூக்களைச் சேகரித்துக் கொண்டார்கள்.

துலிகல் தாண்டியதும் ஒரு ராமர் கோயில் வழியாக எங்கள் வேன் சென்றது. அந்தக் கோயில் விமானத்தின் மீது ஸ்ரீராமபிரானின் வில்லின் வடிவம் அமைக்கப்பட்டிருந்தது.

வழியில் துலால் காட் (Dolal Ghat) என்ற இடத்தில் இந்திராவதி என்ற ஆறு ஓடிக்கொண்டிருந்தது. இந்த நதியை நாங்கள் கடந்தபோது காலை மணி 10.45. மலை முகடுகளின் ஊடே புகுந்து வண்டி செல்வது போல் இருந்தது. வழியில் 'சுன்கோசி', 'போட்டே கோசி' ஆகிய இரண்டு ஆறுகளின் வழியாக எங்கள் வேன் சென்றது. இந்த ஆறுகளைக் கடந்தபோது எங்கள்

வேன் ஒரு மலையின் இறக்கத்தின் வழியாகச் சென்றது. பாலம் வழியாக நதியைக் கடந்து வேன் அடுத்த மலையில் நுழைந்தவுடன், அந்த மலையின் மேல் நோக்கி ஏற ஆரம்பித்தது.

பாஹரா பேசே (Bahra Bise) என்ற இடத்தை நோக்கி எங்கள் வேன் சென்றது. வழியிலுள்ள கடைகளில் பெண்கள் அதிக எண்ணிக்கையில் வேலை செய்துகொண்டிருந்ததைப் பார்த்தோம்.

ஓரிரு இடங்களைத் தவிர பொதுவாக நாங்கள் சென்ற மலைப்பாதை சீராகவே இருந்தது. ஆனால் நேபாள் எல்லை வரும்போது ரோடு கரடு முரடாகி விட்டது. ஆங்காங்கே ரோட்டின் இரண்டு பக்கங்களின் அருகிலும் தூரத்திலும் இருந்த மலைகளிலிருந்து அருவிகளும், நீர்வீழ்ச்சிகளும் கொட்டிக் கொண் டிருந்தன. வலப் பக்கத்தில் ஓர் ஆறு ஓடிக்கொண் டிருந்தது. அந்த ஆற்றின் மறுகரையில் பெரிய பெரிய நீர்வீழ்ச்சிகள் பல இருப்பதை பார்த்தபடியே வேனில் சென்றோம். அந்த அருவிகளும், நீர்வீழ்ச்சிகளும் சிவபெருமானுக்குப் பாலபிஷேகம் செய்வது போன்று காட்சியளித்தன. வழியில் ஓர் இடத்தில் கோயில் வெளிப் பிராகார தோற்றத்தைப் போன்று ஒரு மலை இருந்தது. அங்கு தேனீக்கள் கட்டியிருந்த பல தேன்கூடு களைக் கண்டோம். சப்தத்துடன் ஓடும் நதி - துள்ளி குதித்து ஆரவாரத்துடன் ஓடும் சிறுமியைப்போல் சென்றுகொண்டிருந்தது. மலையைக் குடைந்து ஓடுவது போல ஒரு நதி மலையின் ஊடே சென்றது.

பகல் 12.55 மணிக்கு தாத்தோபாணி (Thathopani) என்ற இடத்தை அடைந்தோம். இதுவே நேபாள் எல்லையில் இருக்கும் கடைசி கிராமமாகும். அங்குள்ள மொத்த கடைகளையும், வீடுகளையும் சேர்த்தால் சுமார் 100 இருக்கும். இங்குள்ள நீர்வீழ்ச்சிகளுடன் சிறிய ரப்பர் குழாய்களை இணைத்து அதன் மறு முனையை வீடுகளின் முன்னாலும், சாலை ஓரத்திலும் வைத்திருக்கிறார்கள். இந்த முனையை அவர்கள் குழாய் போட்டு மூடாமல் வைத்திருக்கிறார்கள். எனவே இந்தக் குழாய்களிலிருந்து எப்போதும் தண்ணீர் கொட்டியபடியே இருக்கிறது.

தாத்தோபாணியிலிருந்து ஜாங்மூ (Zhangmu) என்ற இடம் தெரிந்தது. சீனப் பகுதியிலுள்ள முதல் நகரம் இது. சீட்டுக்கட்டை அடுக்கி வைத்திருப்பது போன்ற கட்டிடங்களுடன் மலையின் நடுவில் இந்தச் சிறிய நகரம் அமைந்துள்ளது. தாத்தோபாணியுடன் நேபாளத்தின் எல்லை முடிவதால் நாங்கள் அங்கிருந்து வண்டி மாற வேண்டும். தாத்தோபாணியின் முடிவிடத்திற்கு கோடரி (Kodari) என்று பெயர். இந்த இடத்தில் ஓர் ஆற்றின் மீதுள்ள Friendship Bridge என்ற பாலத்தை நாங்கள் நடந்து கடந்து சென்றோம்.

பாலத்தின் மறுகரையில் சீன எல்லை ஆரம்பிக்கிறது. பாலத்தின் கீழே ஓர் ஆறு ஓடிக்கொண்டிருந்தது. ''பாலத்தைக் கடந்ததும் சீனா வந்துவிடுகிறது'' என்று நாம் சொன்னாலும், உண்மையில் அது சீனாவினால் ஆக்கிரமிக்கப்பட்ட திபெத்தையே குறிக்கிறது.

பாலத்தின் மறுமுனையில் சீனக் கட்டுப்பாட்டு அலுவலகம் (Controlling Office) அமைந்துள்ளது. பாலத்தைக் கடந்து சீனாவிற்குள் நுழைந்தோம்.

நேபாளத்திற்கும், சீனாவுக்கும் 2.15 மணி நேரம் அதிகம் வித்தியாசம் இருக்கிறது. இந்தியாவிற்கும், சீனாவுக்கும் உள்ள வித்தியாசம் 2.30 மணிநேரம் அதிகமாகும்.

யாத்திரை ஆரம்பம் ———

சீன எல்லையான ஜாங்மூவிலிருந்துதான் யாத்திரையின் முக்கியப் பகுதி ஆரம்பிக்கிறது. இங்கிருந்து மானசரோவர் சுமார் 1000 கி.மீ. தொலைவில் உள்ளது. இந்த தூரம் 4 அல்லது 5 நாட்களில் கடக்கப்படுகிறது.. எங்கள் யாத்திரைக்குத் தேவையான அனைத்தையும் ஈகோ டிரக்கினர் ஏற்பாடு செய்திருந்தார்கள். ஜீப்புகளில் பயணம் நடைபெறுகிறது. இந்த ஜீப்புகள் Toyota Land Cruisher என்று அழைக்கப்படுகின்றன. இந்த ஜீப்பின் நான்கு சக்கரங்களுக்கும் 'எஞ்சின் கண்ட்ரோல்' உள்ளது. இது Four Wheel Drive & Left Hand Drive வண்டியாகும். இந்த வண்டி கல், பாறை, மணல் ஆகியவற்றைக் கொண்ட மிகவும் மோசமான பாதையிலும் செல்லக் கூடியது; சிற்றாறுகளையும் சுலபமாகக் கடக்கக் கூடியது. இந்த வண்டியை ஓட்டுவதற்கு மிகவும் திறமை வேண்டும்.

ஒரு ஜீப்பிற்கு நான்கு பேர் வீதம், ஐந்து ஜீப்புகளில் எங்கள் குழுவினர் இருபது பேரும் சென்றோம். இந்த


ஜீப்புகளை திபெத் தலைநகரான 'லாசா' என்ற இடத்திலிருந்துகொண்டு வந்திருந்தார்கள். இந்த வண்டிகளைக் கொண்டு வந்த டிரைவர்களைத் தவிரவும், அவர்களுடன் சீன வழிகாட்டி ஒருவரும் லாசாவிலிருந்து வந்திருந்தார். சீன வழிகாட்டிக்கு ஆங்கிலமும் சீன மொழியும் நன்றாகத் தெரியும். இவர் ஹிமாசலப் பிரதேசத்தில் சில ஆண்டுகள் தாம் கல்வி பயின்றதாகக் கூறினார். சீன எல்லையில் நாங்கள் இருந்த அத்தனை நாட்களிலும் இவர் பல விதங்களிலும் எங்களுக்கு உதவி செய்தார்.

நேபாளத்திலிருந்து வந்த சமையல்காரர்கள் சுமார் 20 நாட்களுக்குத் தேவையான உணவுப் பொருட்கள், கேஸ் (gas), கூடாரங்களுக்குத் தேவையான பொருட்கள் ஜீப்பிற்கான பெட்ரோல் முதலியவற்றுடன் இரண்டு லாரிகளில் எங்களுடன் பயணம் செய்தார்கள்.

ஜாங்மூ-நியாலம் : 25 கி.மீ. ———————————

மாலை சுமார் 4.15 மணிக்கு ஜாங்மூ வந்து சேர்ந்தோம். இங்கு சீன கஸ்டம்ஸ் ஆபீஸ் இருக்கிறது. அங்கு நாங்கள் அனைவரும் Health Forms வாங்கி அவற்றைப் பூர்த்தி செய்து கொடுத்தோம். அந்த Form-இல் ''எனக்கு எந்த நோயும் இல்லை'' என்று எங்கள் குழுவினர் ஒவ்வொருவரும் எழுதிக் கொடுத்தோம்.

பின்னர் அந்த அலுவலகத்தில் எங்கள் குழுவினர் ஒவ்வொருவருடைய Passport Verification நடந்தது.



திருக்கயிலாய மலை
மானசரோவர்
லிமி
பர்யாங்
திபெத் (சீனா)
ராரா
மஹேந்த்ர நகர்
தவளகிரி
பர்தியா
சாகா
லாசாவிற்கான வழி
டிங்கிரி
லாட்சே
நியாலம்
ஜாங்மூ
நேபாள்கஞ்ஜ்
தான்சேன்
எவரஸ்ட் சிகரம்
கோதாரி
லும்பினி
கோரக்பூர்
ரக்ஸல்
பிர்கஞ்ஜ்
காகர்பிட்டா
பதரபூர்
இந்தியா
தேசிய பூங்கா, வனவிலங்கு சரணாலயம்
நெடுஞ்சாலை
விமான நிலையம்
நகரம்
மலை

கஸ்டம்ஸ் Verification முடிந்தவுடனேயே எங்களைச் சீனர்கள் பலர் சூழ்ந்துகொண்டு, ''இந்தியப் பணத் திற்குச் சீனப் பணமாக யுவான் தருகிறோம்'' என் றார்கள். இவர்களில் சீனப் பெண்கள் அதிகமாக இருந்தனர். இந்தச் சீனர்களிடம் இந்தியப் பணத்தை, சீனப் பணமான யுவான்களாக வாங்கிக்கொண்டு நாங்கள் மேற்கொண்டு நடந்து சென்றோம்.

ஜாங்மூவில் Customs Clearance முடிந்தவுடன் நியாலம் என்ற இடத்திற்குச் செல்வது என்று எங்கள் பயணத்திட்டம் இருந்தது. இந்த நிலையில், ''இன்றைய தினம் ஜாங்மூவிலிருந்து நியாலம் செல்லும் வழியில் ஒரு விபத்து ஏற்பட்டிருக்கிறது. விபத்து ஏற்பட்ட இடத்தில் இருக்கும் வண்டிகளை அகற்றாத வரையில் நாம் மேற்கொண்டு பயணம் தொடர இயலாது'' என்று எங்களுக்குத் தகவல் கிடைத்தது. அதனால் அன்றைய தினம் நியாலம் செல்லும் எண்ணத்தை நாங்கள் கைவிட நேர்ந்தது.

ஒரு ஹோட்டலில் அன்றிரவு நாங்கள் தங்குவதற்கு ஏற்பாடு செய்யும் பொருட்டு அறைகள் எடுப்பதற்காக எங்கள் குழுவைச் சேர்ந்த இருவர் சென்றார்கள். நாங்கள் எங்கள் ஜீப்புகளில் அமர்ந்திருந்தோம். அப்போது திபெத்தியர்கள் பலர் - அவர்களில் பெரும்பாலான வர்கள் குழந்தைகள் - எங்கள் ஜீப்புகளைச் சூழ்ந்து கொண்டு தின்பதற்காகத் தின்பண்டங்கள் கேட்டார்கள். அவர்களுக்கு என்னிடம் இருந்தவற்றைத் தாராள மாகக் கொடுத்தேன். அந்தத் திபெத்தியர்களின்

ஏழ்மை நிலை பார்ப்பதற்குப் பரிதாபமாக இருந்தது.

சீனர்கள் 1950-களில் திபெத்தைப் பலவந்தமாக ஆக்கிரமித்துக்கொண்டார்கள். அதைத் தொடர்ந்து சீன அரசு திபெத்தியர்களின் நிலம், சொத்து ஆகியவற்றைக் கைப்பற்றிக்கொண்டு அவர்களைக் கொத்தடிமை போலவும், ஆடுமாடுகளைப் போலவும் நடத்துகிறது என்று கேள்விப்பட்டோம். இங்குள்ள திபெத்தியர்கள் அன்பும் பரிவும் நிறைந்தவர்கள். அவர்களின் கண் களில் ஒருவித ஏக்கம் தெரிந்தது. அதற்குக் காரணம் தங்களுக்குச் சுதந்திரம் இல்லை; தலாய்லாமா திபெத் வர முடியவில்லை என்பதாகத்தான் இருக்கும்.

சீன அரசின் கொள்கை கம்யூனிசம் என்ற பொதுவுடைமையாகும். தங்களின் ஆட்சிக்குட்பட்ட திபெத்தியர்களை ஆடு, மாடுகளைப் போல் நடத்துவது எந்த விதத்தில் பொதுவுடைமை ஆகும் என்று எனக்குப் புரியவில்லை.

திபெத்தியர்களுக்கு விடிவுகாலம் எப்போது?

ஆங்கிலேயர்களிடம் இந்தியர்களாகிய நாம் சுமார் 300 ஆண்டுகள் அடிமைப்பட்டிருந்தோம். அப்போது இந்தியாவில் எத்தகைய நிலை இருந்திருக்கும் என்பதை, இந்தத் திபெத்தியர்களைப் பார்த்தபோது ஓரளவு புரிந்துகொள்ள முடிந்தது.

ஜாங்மூவில் நாங்கள் தங்கியது மூன்று நட்சத்திர ஹோட்டலாகும். இதைச் சீனர்கள் நடத்தி

வருகிறார்கள். இதன் பெயர் ஜாங்மூ ஹோட்டல். இரவு ஏழு மணிக்கு என் அறையில் யாத்திரிகர்கள் அனைவரும் கூடி கூட்டுப் பிரார்த்தனை செய்தோம். அப்போது ஸ்ரீராமகிருஷ்ணர் ஆரதி, சிவபுராணம், கயிலைப் போற்றித் திருத்தாண்டகம் ஆகியவற்றைப் பாடினோம். அதன் பிறகு கயிலாயத்தின் சிறப்பு, இந்தக் கயிலாய யாத்திரை என்ற அரிய வாய்ப்பைப் பயன்படுத்தி நிறைந்த ஆன்மிகப் பயன் பெற வேண்டும் என்பதை விளக்கி ஒரு சொற்பொழிவு செய்தேன். அன்றைய தினம் நாங்கள் கடல் மட்டத்திலிருந்து 7,070 அடி உயரத்தில் இருந்தோம்.

மறுநாள் காலையில் ஜாங்மூ ஹோட்டல் அறையில், சுவர் போன்ற பெரிய கண்ணாடி ஜன்னல் வழியாகப் பார்த்தபோது, கம்பீரமான இமயத்தின் வெள்ளிப் பனி மலைகளின் தொடர் ரம்மியமாகத் தெரிந்தது. சுமார் 10 கி.மீ. தூரத்தில் கண்ணுக்கெட்டிய தொலைவில் பனி மூடியிருந்ததால், ஒரு மலை கண்ணாடி மலை போலவே தோற்றமளித்தது! ஆங்காங்கே பனி மூடிய இமயமலையின் சிகரங்கள் சிலவற்றை ஏற்கெனவே உத்தரகாசியில் பார்த்திருந்தாலும், ஒரு பெரிய மலையையே கண்ணாடி போல் பனி மூடியிருந்ததை ஜாங்மூவில்தான் முதல் முறையாகப் பார்த்தோம். அந்தக் கண்ணாடி மலை, 'இப்படியும் ஒரு மலை இருக்க முடியுமா?' என்று அப்படியே வியப்பில் ஆழ்த்தியது.

காலை 10.45 மணிக்கு ஜாங்மூவிலிருந்து நியாலம் நோக்கிப் புறப்பட்டோம். ஜாங்மூவுக்கும்

நியாலத்திற்கும் இடையிலுள்ள தூரம் சுமார் 25 கி.மீ. ஆகும். ஜாங்மூவிலிருந்து செல்லும் வழியில் மலைகளின் தரிசனம் எங்களுக்குத் தாராளமாகக் கிடைத்தது. ஆயிரக்கணக்கான கிலோ வெள்ளியை உருக்கி ஊற்றியது போல் 'பளபள' என்று மலைகளில் பல அருவிகள் தென்பட்டன. ஆங்காங்கே மலைகளில் பனி மூட்டம் அதிகமாகவும், படலம் படலமாகவும், கனமாகவும் இருந்துகொண்டே இருந்தது. அப்போது நாங்கள் கடல் மட்டத்திலிருந்து 11,000 அடி உயரத்தில் சென்றுகொண்டிருந்தோம். 'ஓ' என்ற இரைச்சலுடன் ஒரு நதி சென்றுகொண்டிருந்தது. அந்த நதி பாறைகளில் முட்டி மோதி வர்ண ஜாலங்களுடன் வந்து கொண்டிருந்தது. வைர, வைடூரியங்கள் வாரி இறைத்தது போல் ஒளிமயமாக அந்த நதி விளங்கியது.

பகல் 11.25 மணிக்கு ஓரிடத்தில் பனிப்பாறை விழுந்து வழி மறைத்து பாதையை மூடி இருந்தது. அங்கு நாங்கள் சென்றபோது 'புல்டோசர்' மூலம் அங்கிருந்த பனியை அகற்றிக் கொண்டிருந்தார்கள். பனியை வெட்டி வழி செய்த பிறகு, பனிக்கட்டிகளின் ஊடே எங்கள் ஜீப்புகள் சென்றன. மலை முகடுகள் பல வண்ணங்களில் தெரிந்தன. பள்ளத்தாக்குகளின் அழகைப் பார்த்துக்கொண்டே சென்றோம். 'எவ்வளவு தூரம் ஏறி வந்திருக்கிறோம்!' என்ற மலைப்பு சில சமயங்களில் எங்களுக்கு ஏற்பட்டது. சில இடங்களில் 'கிடு கிடு' பாதாளம் தென்பட்டது. ஆங்காங்கு சிவ பெருமானை நினைவுபடுத்துவதுபோல் பாறைகள் தென்பட்டன. அவற்றிலிருந்து வரும் அருவிகள்

சிவபெருமானின் சிரசிலிருந்து கங்கை வருவது போல் இருந்தது.

நாங்கள் சென்ற ஜீப்புகளைப் பகல் 12.55 மணிக்குச் சமவெளியாக இருந்த ஓர் இடத்தில் நிறுத்தினோம். அங்கு வண்டியிலிருந்து இறங்கிச் 'சிலுசிலு' என்ற காற்றை அனுபவித்தோம். உடலையும் உள்ளத்தையும் வருடிக் கொடுக்கும் இதமான குளிர் அங்கு அப்போது வீசியது.

இந்த இடத்தில்தான் நாங்கள் முதன்முதலில் திபெத்தியர்கள் பிரார்த்தனை கொடிகளைக் கட்டியிருந்ததைப் பார்த்தோம். இதைத் தொடர்ந்து எங்கள் கைலாஸ் - மானசரோவர் யாத்திரையின்போது இது போன்ற திபெத்தியர்களின் பிரார்த்தனை கொடிகளைப் பல இடங்களில் பார்த்தோம். விழாக் காலங்களில் நாம் கட்டுகின்ற தோரணம்போன்று இந்தப் பிரார்த்தனைக் கொடிகள் காணப்படுகின்றன. நீண்ட கயிற்றில் முக்கோணம் மற்றும் செவ்வக வடிவங்களில் இந்தக் கொடிகள் வரிசையாக உள்ளன. நீலம், மஞ்சள், சிவப்பு, பச்சை, வெள்ளை ஆகிய ஐந்து நிறங்களில் இந்தக் கொடிகள் உள்ளன. இதில் திபெத்திய மொழியில் பிரார்த்தனைகள் அச்சிடப்பட்டுள்ளன. கற்களைக் குவித்துவைத்து அதில் இத்தகைய கொடிகள் கட்டப்பட்டிருந்த சில இடங்களையும் நாங்கள் பார்த்தோம். இந்தக் கொடிகளே அவை உள்ள இடம் வழிபாட்டுத் தலம் என்பதற்கு அடையாளமாகத் திகழ்கின்றன.

திபெத்தியர்கள், சிறியதும் பெரியதுமான கற்களைக் குவித்து செவ்வக வடிவில் அமைத்திருக்கும் மேடைகளும் வழிபாட்டுத்தலங்களாகும். கைலாஸ்–மானசரோவர் செல்லும் வழியில் இத்தகைய நூற்றுக் கணக்கான இடங்களை நாம் காணலாம். திபெத்திய பௌத்தர்கள் இந்தக் கற்குவியல்களை பௌத்த ஸ்தூபியின் அடையாளமாகப் பிரார்த்தனையுடன் அமைக்கிறார்கள். தாங்கள் நேசிக்கின்ற யாக்குகள் இறந்து விட்டால் அவற்றின் தலையை இந்த மேடையில் வைத்துவிடுகிறார்கள். அதனால் அவை சொர்க்கத் திற்குச் செல்லும் என்றும், பிறகு அவற்றிற்கு உயர்ந்த பிறவி கிடைக்கும் என்றும் அவர்கள் நம்புகிறார்கள்.

கற்கள் சிதறிக் கிடப்பதை எந்த திபெத்தியன் பார்த்தாலும் உடனே அவற்றை ஒன்றின் மீது ஒன்றாக அடுக்கத் தொடங்கிவிடுகிறான். பெரிய கற்களைக் கீழே வைத்து படிப்படியாக சிறிய கற்களை மேலே வைக்கிறான். அரை அடி அல்லது ஓர் அடி உயரத்தில் இவை கூம்பு வடிவத்தில் வழியெங்கும் உள்ளன. இதற்கு திபெத்தியர்கள் அளிக்கும் விளக்கம் மிகவும் பொருள் பொதிந்தது: இந்தக் கூம்புகள் அவற்றை அமைப்பவனின் பிரதிநிதிகள். தங்கள் பிரதிநிதியாக, அந்தக் கூம்புகள் எப்போதும் கயிலையை வழிபட்டுக் கொண்டிருப்பதாகவும், அந்தப் பலன் தங்களை அடையும் என்றும் திபெத்தியர்கள் உறுதியாக நம்புகிறார்கள்.

நாங்கள் இருந்த இடத்திலிருந்து இமயமலையைச் சேர்ந்த கோமளங்க மலைத்தொடரின் அழகிய

காட்சிகள், கண்களுக்கு விருந்தளித்து எங்களைப் பரவசத்தில் ஆழ்த்தியது. எங்கள் ஜீப் டிரைவர், "இந்தக் கோமளங்க மலைத்தொடர் திபெத்தின் மிகவும் அழகிய பகுதிகளில் ஒன்று என்ற முக்கியத்துவம் பெற்றிருக்கிறது" என்றார். திபெத்திலுள்ள இமயமலைப் பகுதி பிரமிப்பை ஏற்படுத்துவதாகும். இந்தியப் பகுதியில் நாம் பார்க்கும் மலைகளைவிட இவை மிகவும் உயரமானவை. வானை முட்டுவதுபோல் ஓங்கி உயர்ந்து நிற்கும் இந்த மலைகள் பார்க்கின்ற யாரையும் ஒரு கணம் ஸ்தம்பித்து நிற்கச் செய்பவை.

பகல் ஒரு மணிக்குப் புழுதிக் காற்று பலமாக வீசியது. அதனால் எங்கள் குழுவைச் சேர்ந்த நாங்கள் அனைவரும் Dust Mask அணிந்து கொண்டோம். காற்றில் ஆக்ஸிஜன் குறைந்த அந்த இடங்களில் Dust Mask அணிவது மூச்சு விடுவதில் சிரமத்தை ஏற்படுத்தக் கூடியது. இருப்பினும் அதை அணிந்துகொள்வது நல்லது.

இரண்டு மணிக்கு நியாலம் போய்ச் சேர்ந்தோம். இந்த இடம் கடல் மட்டத்திலிருந்து 12,010 அடி உயரத்தில் இருக்கிறது. இங்குதான் முதன்முறையாக நாம் கடல் மட்டத்திலிருந்து அதிக உயரத்தில் இருப்பதைப் புரிந்துகொள்கிறோம். சிறிது தூரம் நடந்தாலும் அதிகமாக மூச்சு வாங்குகிறது; விரைவில் களைத்தும் விடுகிறோம்.

அங்கு நாங்கள் ஜீப்பை விட்டு இறங்கியபோது காற்று பலத்த சப்தத்துடன் வீசியது. இந்த எங்கள் பிரயாணத்தில் அவ்வளவு காற்றைச் சந்தித்தது அதுவே

முதல் தடவையாகும். இங்கு நாங்கள் நியாலம் ஹோட்டலில் தங்கினோம்.

நியாலம் – சாகா (23.5.98–25.5.98) : 230 கி.மீ ————

இன்று 23.5.98 சனிக்கிழமையும் பிரதோஷமும் சேர்ந்த நன்னாளாகும். விடியற்காலையில் சந்திரனின் அற்புதமான பிறைக்காட்சி மலை முகடுகளின் வழியாகத் தெரிந்தது. நாங்கள் தங்கியிருந்த விடுதியின் வெளியே வந்து மானசரோவர் செல்லும் பாதை இருந்த திசையில் சிறிது தூரம் நடந்து சென்றோம். அப்போது ஒரு பனி மலை கண்ணாடி மலை அல்லது ஸ்படிக மலை போன்று தென்பட்டது.

காலை சுமார் பத்து மணிக்கு நியாலத்திலிருந்து எங்கள் பயணம் துவங்கியது. காலை 11.30 மணிக்கு நாங்கள் சென்ற ஜீப் மலைப் பாதையை விட்டு சமதளத்தில் ஓட ஆரம்பித்தது. அப்போது எங்கள் வழிகாட்டி, ''நாம் இப்போது தரை மட்டத்திலிருந்து சுமார் 12,600 அடி உயரத்தில் இருக்கிறோம்'' என்று கூறினார். வழியில் 'ரேக்லா' வண்டிபோல் குதிரை இழுக்கும் இரண்டு வண்டிகளைப் பார்த்தோம். இவை இரண்டு பேர் அமர்ந்து செல்லக் கூடியவை. ஜீப் சென்ற பாதையின் இரண்டு பக்கங்களிலும் வானத்தைத் தொடுவதுபோல் வெள்ளிப் பனி மூடிய சிகரங்கள் தென்பட்டபடியே இருந்தன. ஆங்காங்கே திபெத்தியர்கள் நாடோடிகள் போல் சஞ்சரித்துக் கொண்டிருந்தார்கள். வறுமையில் வாடும் அவர்களின் நிலை எங்கள் மனதைச் சஞ்சலப்படுத்தியது.

பகல் 12.35 மணிக்கு 'நியாலம் பாஸ்' என்ற இடத்தை அடைந்தோம். அங்குள்ள ஒரு பனிமலையின் சிகரம் விநாயகர் உட்கார்ந்திருப்பது போலவும், மற்றொரு பனிமலை சிவபெருமான் பிறையுடன் வீற்றிருப்பது போலவும் தெரிந்தது. அதைத் தொடர்ந்து வழியில் ஒரு பனி சிகரம் சிம்மவாகினி போன்று தென்பட்டது. ஓர் இடத்தில் பனிச்சிகரம் பாம்பணையில் படுத்திருக்கும் மகாவிஷ்ணுவை நினைவுப் படுத்தியது. ஒரு மலை, நீண்ட நெடிய உருவம் கொண்ட சிவபெருமான் படுத்திருப்பது போன்று தோற்றமளித்தது. இன்னொரு மலை தேவர்கள், கின்னரர்கள் நின்றுகொண்டு வாத்தியங்கள் இசைப்பது போன்ற தோற்றத்துடன் இருந்தது. மற்றொரு மலை புத்தர் படுத்திருப்பது போன்ற காட்சியைத் தந்தது. ஓர் இடத்தில் ஒரு பனி மலையைத் தொட்டுக்கொண்டிருந்த மேகங்கள் புஷ்பக விமானம் செல்வதைப் போன்று தோற்றமளித்தன.

நீண்ட தூரம் பிரயாணம் செய்து, மாலை சுமார் ஆறு மணிக்கு ஓர் ஆற்றின் கரையிலிருந்த ஒரு திறந்த வெளியைத் தேர்ந்தெடுத்தோம். அங்கு கூடாரங்கள் போட்டுத் தங்கினோம். இந்த இடத்தின் பெயர் பிகுட்ஸோ (Pikutso). இந்த இடத்தில் Rest House எதுவும் இல்லை என்பதால்தான் இவ்விதம் நாங்கள் கூடாரங்கள் அமைத்துத் தங்க வேண்டியதாயிற்று.

ஈகோ டிரக்கைச் சேர்ந்தவர்கள் எங்கள் குழுவினருக்காக இரண்டு பேர் தங்கக் கூடிய சிறிய கூடாரங்கள்

அடித்தனர். அந்தக் கூடாரங்களில் எங்கள் குழுவினர் இரண்டு இரண்டு பேராகத் தங்கினோம். இந்தக் கூடாரங்கள் மிகவும் சிறியவை. இரண்டுபேர் படுத்துக் கொள்ள மட்டுமே அவற்றில் இடமிருக்கும். ஒருவர் நிமிர்ந்து நிற்க முடியாத அளவிற்கு உயரமும் குறைவாக இருந்தது.

அன்று நாங்கள் தங்கிய இடம் கடல் மடத்திலிருந்து 15,700 அடி உயரத்தில் இருந்தது.

அன்றிரவுதான் எங்கள் வாழ்க்கையிலேயே நாங்கள் முதல் முறையாக மிகவும் அதிகமான குளிரை அனுபவித்தோம். இவ்வளவு குளிருக்குப் பழக்கம் இல்லாத நாங்கள் அந்தக் கடும் குளிரில் திக்கு முக்காடிப் போய்விட்டோம். குளிர் மட்டுமல்ல; அதிகமான உயரம் காரணமாக மூச்சு விடுவதில் வரும் சிரமங்களையும் அங்குதான் உணர்ந்தோம். எங்கள் குழுவைச் சேர்ந்த நான்கு பேர் இரண்டொரு முறை வாந்தி எடுத்தனர். அதன் காரணமாக அவர்கள் சோர்வுடன் இருந்தனர். இந்த உயரத்தில் ஆக்ஸிஜன் குறைவு. எனவே அங்கு சிறிது தூரம் நடந்து சென்றால்கூட எங்களுக்கு மூச்சுத் திணறியது. மீண்டும் எங்களை ஆசுவாசப் படுத்திக்கொள்ள சில நிமிடங்கள் நாங்கள் ஓய்வெடுக்க வேண்டியிருந்தது. எங்களில் மூவர் Altitude Sickness காரணமாக 'காமா பேக்' Treatment எடுத்துக்கொண்டார்கள்.

அன்றிரவு கூடாரங்களில் நாங்கள் படுத்திருந்த போது, கூடாரத்திற்குள் போதிய இடம் இல்லாததால்

எங்கள் லக்கேஜ்களைக் கூடாரத்திற்கு வெளியே வைத்திருந்தோம். மறுநாள் காலையில் எழுந்து பார்த்தபோது அவற்றின் மீது பனி கனமாகப் படர்ந்திருந்தது. இரவு கடும் குளிரில் எங்களின் கை, கால்கள் 'வெடவெட' வென்று நடுங்கின.

அன்றிரவு கடுமையான குளிர் காரணமாக ஒருவரது உடல்நலம் மிகவும் பாதிக்கப்பட்டது. அவரது நாடித் துடிப்பு இறங்கிப் பல் கிட்டிக்கொண்டது. அதோடு அவர் சுயநினைவையும் இழந்துவிட்டார். எனவே நாங்கள் கேட்ட கேள்விகளுக்கு அவரிடமிருந்து பதிலே இல்லை. அவரது உடல் கவலைக்கிடமானதைப் பார்த்து நாங்கள் எல்லோருமே மிகவும் பயந்து போய் விட்டோம். அவரது உடல்நிலை தேற வேண்டும் என்பதற்காக எங்கள் குழுவிலிருந்த ஒருவர் திருநாவுக்கரசரின் 'கயிலைத் திருத்தாண்டகம்' கூறினார்; மற்றொருவர் அன்னை ஸ்ரீசாரதாதேவியாரிடம் பிரார்த்தனை செய்து பாடல்கள் பாடினார். ஒருவர், தான் கொண்டு வந்திருந்த Life Saving மருந்தை ஊசியின் மூலம் மூன்று முறை செலுத்தினார். அவருக்குச் சிகிச்சை தரும் பொருட்டு 'காமா பேக்'கில் வைத்து Treatment கொடுத்தனர். சுமார் அரை மணிநேர சிகிச்சைக்குப் பிறகு அவருக்கு மெல்ல மெல்ல சுயநினைவு திரும்பியது. அதன் பிறகுதான் அவரைப் பற்றிய எங்கள் பயம் நீங்கியது. அன்று அவர் மரணத்தின் வாயிலுக்கே சென்று திரும்பினார்.

அன்றிரவு எனக்குத் தூக்கமே வரவில்லை. கூடாரத்தின் வெளியே காற்றும் பேய்த்தனமாக

வீசிக்கொண்டிருந்தது. கூடாரத்தில் படுப்பதற்கு நாங்கள் காட்மாண்டிலிருந்து எடுத்துச் சென்ற Sleeping Bag-யை, முதன் முறையாக அன்றைய இரவுதான் நாங்கள் பயன்படுத்தினோம். Sleeping Bag என்பது உறையோடு கூடிய மெத்தை போன்று இருக்கும். நாம் அதற்குள் நுழைந்து படுத்துக்கொள்ள வேண்டும். Sleeping Bag பயன்படுத்திப் பழக்கம் இல்லாததால் அதற்குள் நுழைவதும், பிறகு அதிலிருந்து வெளியே வருவதும் ஆரம்பத்தில் எங்களுக்குச் சிரமமாக இருந்தது. மறுநாள் காலையில் எழுந்தவுடன் Sleeping Bag-யை அதன் 'கவரில்' திணித்துக் கட்டியபோது எங்களுக்கு மூச்சு வாங்கியது.

இன்று காலை 'பிகுட்ஸோ' என்ற இந்த இடத்திலிருந்து புறப்பட வேண்டும் என்று முதல் நாள் திட்டமிட்டிருந்தோம். ஆனால் இன்று காலையில் எழுந்ததும் கூடாரத்தை விட்டு நாங்கள் வெளியே வரவே முடியாதபடி குளிர் கடுமையாக இருந்தது. எங்கள் உடல் குளிருக்குப் பழக வேண்டும் என்பதாலும், எங்களில் சிலருக்கு உடல்நலை சரியில்லை என்பதாலும், அன்றைய தினம் அங்கிருந்து மேற்கொண்டு பயணத்தைத் தொடராமல் அதே இடத்தில் இரண்டாம் நாளும் தங்கினோம்.

நாங்கள் ஆற்றின் கரையில் தங்கியிருந்தோம். காலையில் எழுந்து பார்த்தபோது அன்றிரவு இருந்த கடுங்குளிர் காரணமாக ஆற்றின் நீர் 75% ஐஸ் தரையாக உறைந்து போயிருந்தது. முதல் நாள் ஆற்றில் நீரைப் பார்த்துவிட்டு, அதே ஆறு காலையில் எழுந்து

பார்த்தால் பனியாக உறைந்து போயிருக்கும் என்று அதற்கு முன்பு நாங்கள் கேள்விப்பட்டதில்லை. கேள்விப்படாத அதை அங்கு நாங்கள் நேரில் கண்டோம். பிறகு வெயில் வந்த பின்பு இரவு பனியாக இருந்த ஆறு உருகி ஓட ஆரம்பித்தது.

நாங்கள் இந்த முகாமில் தங்கியிருந்தபோது 'சாகா' என்ற இடத்திலிருந்து மூன்று ஜீப்புகள் வந்தன. அவற்றின் டிரைவர்கள் இறங்கி வந்து எங்கள் டிரைவர்களோடு சிறிது நேரம் பேசிக்கொண்டிருந்தார்கள். அவர்கள் எங்கள் டிரைவர்களிடம், ''நாங்கள் எங்கள் ஜீப்புகளில் இருக்கும் ஜெர்மானியர்களைக் காட்மாண்டிலிருந்து 'சாகா' வரையில் அழைத்துச் சென்றோம். அங்கு இவர்களுக்கு, 'இப்போது மானசரோவரிலும் கைலாசத்திலும் கடுமையான குளிர் இருக்கிறது; டோல்மா பாஸில்[1] முழங்கால் அளவு பனி இருக்கிறது!' என்பன போன்ற விவரங்கள் தெரிய வந்தன. அதைக் கேட்டதும் இவர்கள் பயந்து தங்களின் கைலாஸ் யாத்திரையையே ரத்து செய்துவிட்டார்கள். இப்போது இவர்கள் காட்மாண்டு திரும்பிக் கொண்டிருக்கிறார்கள்'' என்று கூறினார்கள்.

25.5.98 காலை சிற்றுண்டிக்குப் பிறகு 10.30 மணிக்கு, பிகுட்ஸோவிலிருந்து சாகாவிற்குப் புறப்பட்டோம். ஒன்றரை மணிநேரம் பிரயாணம் செய்த பிறகு, ஸேன்-போ நதிக்கரையை அடைந்தோம். இந்த நதியே

1. கைலாஸ் பரிக்ரமத்தில் இரண்டாம் நாள் கடந்து செல்ல வேண்டிய பகுதி.

இந்தியாவிற்குள் வரும்போது பிரம்மபுத்திரா என்று பெயர் பெறுகிறது. இந்தியாவிலுள்ள ஆறுகளைப் பொதுவாக 'பெண்' என்றே கூறுவது நம் நாட்டு வழக்கம். இதற்கு மாறாக, பிரம்மபுத்திரா ஆறு 'ஆண்' என்று கருதப்படுகிறது.

ஆனால் இவ்வளவு பெரிய ஆற்றைக் கடப்பதற்கு சீன அரசு பாலம் கட்டாமலேயே விட்டு வைத்திருக் கிறது! அதற்குக் காரணம், அங்கு திபெத்தியர்கள் வாழ் கிறார்கள்; இந்தியர்கள் யாத்திரையாக வருவார்கள் என்பதாக இருக்கக்கூடும். இந்த இடத்தில் நீராவிப் படகுகள் இல்லை. பிரம்மபுத்திரா நதியின் கரையில் ஆற்றைக் கடப்பதற்காக நாங்கள் காத்திருந்தோம். எங்களுடையது மொத்தம் ஐந்து ஜீப்புகள், இரண்டு லாரிகள்.

பகல் 12.45 மணிக்கு ஆற்றில் இரண்டு பெரிய கட்டுமரங்களை ஒன்றோடு ஒன்று சேர்த்து வைத்து, அதன்மீது எங்கள் மூன்று ஜீப்புகளை ஏற்றி மறு கரைக்குக் கொண்டு வந்து சேர்த்தார்கள். இரண்டாவது தடவை அந்தக் கட்டுமரங்களில் எங்கள் இரண்டு ஜீப், இரண்டு லாரிகளை ஏற்றி மறுகரைக்குக் கொண்டு வந்து சேர்த்தார்கள். இவற்றைச் செய்த இருவரில் ஒருவர் பெண். இந்தப் பகுதியிலுள்ள பெண்கள் வயிற்று பிழைப்புக்காகக் கடுமையாக உழைக்கிறார்கள்; உழைக்க வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறார்கள்.

எங்கள் வண்டிகள் ஆற்றைக் கடந்த பத்து நிமிடங்களில் 'சாகா' என்ற இடத்திலுள்ள விருந்தினர்

விடுதிக்குப் போய்ச் சேர்ந்தோம். சாகா கடல் மட்டத்திலிருந்து 14,460 அடி உயரத்தில் இருக்கிறது.

இங்கு நாங்கள் தங்கிய விருந்தினர் விடுதியிலுள்ள அறைகள் அனைத்தும் மண்ணால் கட்டப்பட்டவை (Mud Houses) ஆகும். இந்த சாகா விடுதியில் மட்டுமின்றி, காட்மாண்டிலிருந்து புறப்பட்டு நாங்கள் தங்கிய எல்லா விடுதிகளிலும், எங்கள் தேவைக்குப் போதுமான வெந்நீரைப் பெரிய பிளாஸ்குகளில் அந்தந்த விடுதியைச் சேர்ந்தவர்கள் கொண்டு வந்து வைத்துவிடுகிறார்கள். இந்த விடுதிகளில் அறைகள் வசதியாக இருந்தாலும் இங்கே இயற்கைக் கடன்களைக் கழிப்பதற்கான வசதிகள் குறைவு. கதவுகள் இல்லாத கழிப்பறைகளைப் பயன்படுத்த வேண்டியுள்ளது.

சாகா–பர்யாங் : 230 கி.மீ. ———

26.5.98. இன்று காலை சிற்றுண்டிக்குப் பிறகு, காலை 9.45 மணிக்கு சாகாவிலிருந்து பர்யாங் என்ற இடத்தை நோக்கிப் புறப்பட்டோம். பகல் 12.45 மணிக்கு வழியில் குபா என்ற இடத்தை அடைந்தோம்.

அங்கு ஆஸ்திரேலியர் ஒருவரைச் சந்தித்தோம். அவர், "என்னுடைய பெயர் ஆலன் மிரன் (Alen Myren)" என்று தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டார். அவர் தனக்கு இந்து மதத்தின் மீதுள்ள பக்தியையும் ஈடுபாட்டையும் வெளிபடுத்தினார். தான் கழுத்தில் அணிந்திருந்த சங்கிலியைப் பயபக்தியுடன் கண்களில்

ஒற்றிக்கொண்டு எங்களிடம் பயபக்தியுடன் கொடுத்தார். அந்தச் சங்கிலியில் ஒரு விநாயகர் விக்கிரகம் 'டாலர்' போன்று கோத்திருந்தது. அதில் விபூதி, குங்குமம் பூசப்பட்டிருந்தது.

அவர், "நான் ஒரு கத்தோலிக்க கிறிஸ்தவன். எனினும் விநாயகரை என் தெய்வமாக வழிபட்டு வருகிறேன். நான் அணிந்திருக்கும் இந்த விநாயகர் விக்கிரகம் இந்தியாவில் சந்நியாசிகள் பலரால் ஆசீர் வதிக்கப்பட்டது. தெற்கு ஆஸ்திரேலியாவில் இருக்கும் என் வீட்டிற்கு 'கைலாஸ்' என்று பெயர் வைத்திருக்கிறேன். கயிலாயத்தைப் போன்ற புனிதம் வாய்ந்த இடம் உலகில் வேறு எதுவுமே கிடையாது. நான் இப்போது கயிலைக்குப் புனித யாத்திரையாக வந்திருக்கிறேன். என்னுடைய Visiting Card-இல் விநாயகரின் வாகனமாகிய மூஷிகத்தை அச்சிட்டிருக்கிறேன். கயிலைப் பிரதட்சணம், மானசரோவர் பிரதட்சணம் செய்யும்போது குறைந்தது பத்து அடிகளாவது கால் நடையாக நடந்து செல்ல வேண்டும். இந்து மதம் போன்ற ஒரு பரந்த மனப்பான்மையுடன் உயரிய கருத்துக்களைக் கொண்ட மதம் உலகில் வேறில்லை" என்று கூறினார்.

அவரைச் சந்தித்தது எங்களுக்கு ஓர் இனிய அனுபவமாக இருந்தது.

எங்கள் ஜீப் சென்ற பாதை முழுவதும் ஒரே மணல் வெளியாக இருந்தது. சுற்றிலும் பனி சூழ்ந்த மலைகள் இருந்தன. வெயில் கொளுத்தியது; கடுமையான குளிர்

காற்றும் வீசியது. இவ்விதம் முரண்பட்ட வெயிலையும் குளிரையும் இங்கு நாங்கள் அனுபவித்தோம். வழியில் பல இடங்களில் மணல் வெளிகள் இருந்தன. அவற்றில் பயணம் செய்தது பாலைவனத்தில் பயணம் செய்வது போன்று இருந்தது. பாதையில் இரண்டு பக்கங்களிலும் ஆங்காங்கே மணல் மேடுகள் தென்பட்டன. இந்த மணல் மேடுகள் மனித முயற்சியின்றி அங்கு வீசும் பலமான காற்றினால் இயல்பாக ஏற்பட்டவை. இங்குள்ள சில மணல் மேடுகள் எகிப்திய பிரமிடுகள் போன்றும், அரைக் கோளங்கள் போன்றும் காணப்பட்டன.

சாகாவிற்குப் பிறகு மரங்கள் எதையும் நாம் இங்கு பார்க்க முடியாது. புல்பூண்டுகள் மட்டுமே ஏதோ கொஞ்சம் இங்கு வளர்கின்றன.

நாங்கள் வரும் வழியில் சில இடங்களில் யாக்குகளும் குதிரைகளும் இறந்து கிடந்ததைப் பார்த்தோம். 'இந்தப் பாலைவனம் போன்ற பகுதியில் இவற்றுக்கு உணவு எதுவும் கிடைக்காதது காரணமாக இவை இறந்திருந்திருக்கலாம்; அல்லது குளிரால் இவை இறந்திருக்கலாம்' என்று எனக்குத் தோன்றியது.

வழியில் சீன ராணுவத்தினரின் பல லாரிகளைக் கடந்து சென்றோம். அதிகமான மணல் உள்ள இடங்களில், சீன ராணுவத்தினர் மணல் மீது பலகைகளைப் போட்டு அதன் மீது லாரியைச் செலுத்திக்கொண்டிருந்தார்கள்.

ஏழு மணி நேரம் பிரயாணம் செய்து, சீன நேரப்படி மாலை சுமார் 5.30 மணிக்கு நாங்கள் பர்யாங் என்ற இடத்தைச் சென்றடைந்தோம். அங்குள்ள யாக் ஹோட்டலில் தங்கினோம். அங்கு நாங்கள் தங்கிய விடுதி சாகாவில் நாங்கள் தங்கியதைப் போன்று மண்ணால் கட்டப்பட்டிருந்தது.

பர்யாங் என்ற இந்த இடம் கடல் மட்டத்திலிருந்து 14,800 அடி உயரத்தில் இருக்கிறது.

பர்யாங் – மானசரோவர் : 230 கி.மீ

27.5.98. இன்று மூன்றாம் பிறை நாள். எங்களுக்கு இன்றைய தினம் மாலை கயிலாயத்தின் முதல் தரிசனம் கிடைக்கும் நாள். எனவே எங்கள் ஆர்வம் அளவு கடந்ததாக இருந்தது.

எங்கள் ஜீப்புகள் காலை 10.30 மணிக்குப் பர்யாங்கிலிருந்து புறப்பட்டன. வழியில் இமயமலைத் தொடர்களின் இயற்கை எழிலை மனம் குளிர மிகவும் நன்றாக அனுபவித்தோம். வலப் பக்கத்தில் இருந்த மலைகளில் பெரும்பாலும் பனி சூழ்ந்திருக்கவில்லை. ஆனால் இடப் பக்கத்தில் இருந்த மலைத்தொடர்களில் பனி சூழ்ந்திருந்தது. அங்கு அடுத்தடுத்து பெரிய பெரிய மலைகளிலும், மலைத்தொடர்களிலும் பனி முழுவதும் சூழ்ந்திருந்ததோடு, அவற்றின் உச்சியில் மேகங்களும் சூழ்ந்திருந்தன. அவற்றைப் பார்த்தபோது, ''இந்தப் பனிச் சிகரங்கள் ஆகாயத்தையே தொட்டுவிட்டன!'' என்று சொல்லத் தோன்றியது. இது போன்ற

காட்சிகளை ஓர் இடத்தில், இரண்டு இடத்தில் அல்ல; பல இடங்களில் வழி நெடுகிலும் கண்டோம்.

இன்றைய தினம் எங்கள் பிரயாணம் சுமார் ஒன்பது மணி நேரம் இருந்திருக்கும். இந்த ஒன்பது மணி நேரப் பிரயாணத்தில் சில இடங்களில் வழியில் முயல்கள் ஓடித் திரிந்துகொண்டிருந்ததைப் பார்த்தோம்; சில இடங்களில் பொந்துகளிலிருந்து பெருச்சாளிகள் எழுப்பிய சத்தத்தைக் கேட்க முடிந்தது; சில இடங்களில் மான்கள் கூட்டம் கூட்டமாகத் திரிந்து கொண்டிருந்ததைப் பார்த்தோம். அந்த மான்கள் எங்கள் ஜீப்புகளைக் கண்டதும் துள்ளி ஓட ஆரம்பித்தன. நான்கைந்து இடங்களில் யாக்குகள் மந்தை மந்தையாக மேய்ந்துகொண்டிருந்தன.

அது போலவே 'போனி' என்று சொல்லப்படும் மட்டக் குதிரைகளையும் திபெத்தியர்கள் சில இடங்களில் மேய்த்துக் கொண்டிருந்தார்கள்; மூன்று நான்கு இடங்களில் செம்மறி ஆடுகளையும் மேய்த்துக் கொண்டிருந்தார்கள்.

வழியில் எத்தனையோ சிற்றாறுகளையும், ஓடை களையும் கடந்து எங்கள் ஜீப்புகள் சென்றுகொண் டிருந்தன. இவ்விதம் நாங்கள் எத்தனை சிற்றாறுகளை யும், ஓடைகளையும் கடந்தோம் என்று எங்களால் திட்டவட்டமாகச் சொல்ல முடியாது.

நாங்கள் வந்த வழியில் சீனர்களின் இரண்டு பெரிய ராணுவ முகாம்கள் இருந்தன. இவை தவிர நான்கைந்து

சிறிய கிராமங்கள் இருந்தன. இந்தக் கிராமங்களில் இருந்த எல்லா வீடுகளும் மண்ணால் கட்டப்பட்ட சிறிய சிறிய வீடுகளாகும். சில பௌத்த மடாலயங்கள் சீனர்களால் இடிக்கப்பட்டிருந்தன.

அங்கிருந்த திபெத்தியர்கள் சிலர் தங்கள் கைகளில் ஜப மாலையை வைத்து ஜபம் செய்து கொண்டிருந்தார்கள். அவர்களில் ஒருவருக்குச் சுமார் அறுபது வயது இருக்கும். அவர் எங்களிடம், ''நீங்கள் எந்த நாட்டைச் சேர்ந்தவர்கள்?'' என்று வினவினார். அதற்கு நாங்கள், ''இந்தியர்கள்'' என்றோம். அதைக் கேட்டதும் அவரது முகம் மகிழ்ச்சியால் மலர்ந்தது; ''ஓ! பாரத்வாசி!'' என்று சொல்லியபடியே அவர் கை குலுக்கினார்.

கண்ணுக்கு எட்டிய தூரம் வரையில் மக்கள் நடமாட்டமே இல்லாத பகுதியில் எங்கள் ஜீப்புகள் சென்று கொண்டிருந்தன. வண்டி சென்ற பெரும்பாலான பகுதிகளில் புழுதி இருந்ததால் தூசி வாரி வாரி அடித்தது. அந்தப் புழுதி மூக்கில் நுழைவதைத் தவிர்ப்பதற்காக நாங்கள் Dust Mask அணிந்துகொண்டோம்.

எங்கள் ஜீப்புகள் சுமார் 20 கி.மீ. வந்த பிறகு சுமார் பதினொரு மணிக்கு வழியில் ஒரு சிறிய ஆறு குறுக்கிட்டது. எங்கள் ஜீப்புகளில் இரண்டாவதாக வந்த ஜீப் ஆற்றின் நடுவில் சிக்கிக்கொண்டது. எனவே அதைத் தொடர்ந்து வந்த மற்ற மூன்று ஜீப்புகளும் ஆற்றைக் கடந்து செல்ல முடியவில்லை. ஈகோ டிரக்கைச் சேர்ந்தவர்கள் இரும்புக் கயிற்றைக் (கேபிள்)

கொண்டு வந்து முதலில் கரையேறிய ஜீப்பின் பின் புறத்தையும், ஆற்றில் சிக்கிக்கொண்ட ஜீப்பின் முன் புறத்தையும் இணைத்தனர். பிறகு இரண்டு வண்டிகளை யும் ஒரே நேரத்தில் ஸ்டார்ட் செய்து, ஒன்றாக ஓட்டிக் கரையேற்றினார்கள். அதன் பிறகு மற்ற ஜீப்புகள் ஒன்றன் பின் ஒன்றாக ஆற்றைக் கடந்து மறுகரையைச் சென்றடைந்தன.

வழியில் நாங்கள் பார்த்த இந்த ஆற்றுக்கும், இது போல் நீர் பாயும் பல இடங்களுக்கும் சீன அரசு பாலம் கட்டாமல் அப்படியே வைத்திருக்கிறது. இதனால் யாத்திரிகர்கள் ஆங்காங்கு பெரிதும் சிரமத்திற்குள்ளாக நேரிடுகிறது.

வழியில் ஓர் ஆற்றை ஒட்டி எங்கள் ஜீப்புகள் சென்றன. அப்போது அந்த ஆற்றின் பல இடங்களில் ஆற்றின் நடுவிலும், கரையோரங்களிலும் நீளமாகவும், அகலமாகவும் இருந்த பல பெரிய பனிப் பாறைகளைப் பார்த்தோம். ஆற்று நீர் உறைந்து அங்கு அத்தகைய பனிப்பாறைகளாக மாறி இருந்தன. அந்த ஆற்றில் ஆங்காங்கே சுமார் நான்கு அடி உயரத்தில் வெவ்வேறு அளவுகளில் வெவ்வேறு வடிவங்களில் பனிப் பாறைகள் (Glaciers) இருந்தன; கனமான சிறிய, பெரிய ஜமக்காளங்கள் விரித்தது போன்று சமவெளியாகவும் பனித்தரை படர்ந்திருந்தது.

மாலை 4.15 மணிக்கு 'மயுல்லா பாஸ்' என்ற இடத்தைக் கடந்து சென்றோம்.

ஆங்காங்கு வெள்ளியை உருக்கித் தகடு செய்துமூடி யதைப் போன்று பனி மலைகள் வெயிலில் பளபளத் தன. ஆனால் இந்த இமயமலைப் பகுதியில் ஒரே ஒரு மரம் கூட இல்லை என்பதுதான் விந்தையிலும் விந்தை!

மாந்தாதா மலை

மாலை சுமார் 6.45 மணிக்கு முதலில் எங்களுக்கு மாந்தாதா மலையின் தரிசனம் கிடைத்தது.

மாந்தாதா என்பவர் ஸ்ரீராமபிரானின் முன்னோர் களில் ஒருவர். அவர் இந்த மலையில் இருந்து தவம் செய்தார். அதனால் இந்த மலை மாந்தாதா மலை என்று அழைக்கப்படுகிறது.

இந்த மாந்தாதா மலைக்கு மேலும் இரண்டு சிறப்புகள் உண்டு.

முதல் சிறப்பு - இங்குள்ள ஒரு குகையில்தான் விநாயகர் அவதாரம் செய்தார். இரண்டாவது சிறப்பு - இந்த மலையில்தான் திருமுருகனின் அவதார மும் நிகழ்ந்தது. எனவே, இந்த மாந்தாதா மலைதான் விநாயகர், முருகன் ஆகியவர்கள் இருவருக்கும் அவதார ஸ்தலமாகும். இந்த மலையின் மீதுதான் முருகன் அவதாரத்துடன் தொடர்புடைய சரவணப் பொய்கை இருக்கிறது என்றும் கூறப்படுகிறது.

இந்த மாந்தாதா மலை பல பெரிய மலை களையும், பல சிறிய மலைகளையும் அடுத்தடுத்துத் தொடராகக் கொண்டிருக்கிறது. அதனால் இது அகலத்திலும், நீளத்திலும் ஒரு பெரிய மலையாகும்.

இதன் உயரம் 25,355 அடி. சுமார் 15 கி.மீ. நீளம் கொண்டதாக இந்த மலை இருக்கும் என்று நினைக்கிறேன்.

கைலாஸ் : முதல் தரிசனம்


வழியில் நாங்கள் ஒரு பெரிய ஏரியைக் கண்டோம். அதை முதலில் மானசரோவர் என்று தவறாக நினைத்துவிட்டோம். அதன் கரையையொட்டி சுமார் இருபது நிமிடங்கள் பயணம் செய்த பிறகுதான், 'அது மானசரோவர் அல்ல' என்ற உண்மை எங்களுக்குப் புரிந்தது.

அந்த ஏரியில் பல வகையான பறவைகள் இனிய ஓசைகளை எழுப்பியபடி பறந்து கொண்டிருந்தன. நாங்கள் சென்றுகொண்டிருந்தபோது ஓர் இடத்தில் ஐந்து பறவைகள் இருந்தன. அவற்றின் சிறகுகளில் ஆரஞ்சு நிறம் கீற்றுக் கீற்றாக இருந்தது. அது அந்தப் பறவைகள் மேலே பறக்கும்போது 'தக தக' என்று பிரகாசித்தது.

அன்று மாலை சீன நேரப்படி இரவு 7.45. அது இந்திய நேரப்படி மாலை 5.30 மணி. அதாவது, நல்ல பிரதோஷ நேரம். அப்போது ஏரிக்கரையின் மீது எங்கள் ஜீப் சென்றுகொண்டிருந்தது.

அன்றைய தினம் எங்களுக்குக் கயிலாயத்தின் முதல் தரிசனம் கிடைக்கும் என்று தெரியும்; ஆனால் எப்போது - எந்த நேரத்தில் கிடைக்கும் என்று திட்டவட்டமாகத் தெரியாது.

எங்கள் ஜீப் நேர் பாதையில் சென்றுகொண்டே இருந்தது. திடீரென்று ஒரு திருப்புமுனை வந்ததும் வண்டி திரும்பியது. திருப்புமுனையில் வண்டி திரும்பியதோ, இல்லையோ உடனே சிலர், ''அதோ கைலாஸ்!'' என்று பரவசத்தில் கூவினார்கள்.



அவர்கள் சுட்டிக்காட்டிய திசையில் கயிலைமலை தெரிந்தது!!!

எதிர்பாராமல் திடீரென்று கிடைத்த கயிலையின் தரிசனம் எங்களைத் திக்குமுக்காடச் செய்தது; எங்களுக்குக் கையும் ஓடவில்லை, காலும் ஓடவில்லை.

அதனால் எங்கள் டிரைவர் ஜீப்பை நிறுத்தினார். எங்களைத் தொடர்ந்து வந்த மற்ற நான்கு ஜீப்புகளும், எங்கள் ஜீப் நின்றிருந்த இடத்திற்கு வந்ததும், 'சர் சர்' என்று திடுதிடுப்பென நின்றன. இவை சில விநாடிகளில் நடந்தன.

உடனே வண்டியிலிருந்து இறங்கிய நாங்கள் பக்தியுடன் கைலாஸ்பதியை சாஷ்டாங்கமாக விழுந்து வணங்கினோம். கைலாஸ்பதியின் அந்த முதல் தரிசனம் எங்கள் அனைவருக்குமே பரவசமும் பரபரப்பும் தருவதாக அமைந்தது.

அரை கிலோ கொண்ட கர்ப்பூரக் கட்டியை வேக வேகமாக கயிலைநாதனின் முன்பு ஏற்றினோம். ஏற்கெனவே தயாராக வைத்திருந்த உலர்ந்த பழங்கள் முதலானவற்றை அவசர அவசரமாக எடுத்து நைவேத்தியம் செய்தோம்; பரபரப்புடன் ஊதுபத்திகளை ஏற்றினோம்.

எங்கள் குழுவைச் சேர்ந்த ஒருவர் மேல்மூச்சு கீழ்மூச்சு வாங்க வேகவேகமாக "நமசிவாய வாழ்க" என்று ஆரம்பித்து, 'சிவபுராணம்' முழுவதையும் கூறினார். ஒருவர் சைவத் திருமுறைகளிலிருந்து பல

பதிகங்களைச் சொன்னார். ஒருவர் சம்ஸ்கிருத சிவ ஸ்துதிகள் சொன்னார். ஒருவர் மாணிக்கவாசகர் அருளிய திருப்பள்ளியெழுச்சி பாடினார்.

காலையிலிருந்து ஜீப்பில் பயணம் செய்த எங்களின் சுமார் ஒன்பது மணி நேரக் களைப்பும் கயிலாயத்தைக் கண்டதும் பறந்தே போய்விட்டது! அனைவரும் பரவச நிலையில் எங்களை மறந்து சிவ சிந்தனையில் மூழ்கினோம்.

அந்த இடத்தில் திபெத்தியர்களின் பிரார்த்தனை கொடிகள் கட்டப்பட்டிருந்தன. அங்கு எங்கள் குழுவைச் சேர்ந்த இருவர் சென்று 'சிவ சிவ' என்ற மந்திரமும், நந்தியின் திருவுருவமும் பொறிக்கப்பட்ட சிவப்பு நிற பரிவட்டத்தைக் கட்டிவிட்டு வந்தார்கள். அங்கு ஏற்கெனவே எங்களைப் போன்ற யாத்திரிகர்கள் பல மொழிகளிலும் சிவ மந்திரங்கள் பொறிக்கப்பட்ட கொடிகளைக் கயிற்றில் வரிசையாகக் கட்டியிருந்தார்கள்.

அந்த இடத்தில் நாங்கள் சுமார் ஒரு மணிநேரம் இருந்திருப்போம். அந்த ஒரு மணி நேரமும், ''சிவ லோகத்தில் இருந்தோம்'' என்றே சொல்ல வேண்டும். எல்லோரும் கைலாஸ்பதியை சாஷ்டாங்கமாக விழுந்து வணங்கிய பின்னர் பூரண மனநிறைவோடு அங்கிருந்து புறப்பட்டோம்.


மானசரோவர் : முதல் தரிசனம்

வழியில் மானசரோவரின் முதல் தரிசனம் எங்களுக்குக் கிடைத்தது.

சுமார் 412 சதுர கி.மீ. பரப்பளவும், சுமார் 300 அடி ஆழமும் கொண்ட அழகிய ஏரி இது. கடல் மட்டத்திலிருந்து சுமார் 15,000 அடி உயரத்தில் இது உள்ளது. மானசரோவர் ஒரு சமுத்திரம் போன்றே காட்சி அளிக்கிறது. கடலில் அலைகள் ஒன்றன் பின் ஒன்றாக வருவதைப் போலவே, மானசரோவரிலும் ஒன்றன்பின் ஒன்றாக அலைகள் மிகுந்த வேகத்துடன் கரையில் வந்து மோதிக்கொண்டிருந்தன. அதன் தண்ணீர் ஸ்படிகம் போன்று மிகவும் தெளிவாக இருக்கிறது. 'காற்றினால் மானசரோவரில் அலைகள் இல்லாமல் இருந்தால், மிகுந்த ஆழத்தில் நீந்துகின்ற மீன்கள் கூட துல்லியமாக நம் கண்களுக்குத் தெரியும்' என்று கூறுகிறார்கள்.

வசிஷ்டர், மரீசி முதலான முனிவர்கள் ஒரு சமயம் கயிலாயத்தில் கடுந்தவம் செய்து வந்தார்கள். அவர்கள் நீராடி சிவபெருமானை வழிபடும் பொருட்டு தங்களுக்கு ஒரு நீர்நிலை வேண்டும் என்று பிரம்ம தேவரிடம் பிரார்த்தனை செய்தார்கள். முனிவர்களின் பிரார்த்தனைக்கிணங்க பிரம்மா தன் மனதிலிருந்து இந்தத் தெய்விக ஏரியைத் தோற்றுவித்தார். மானசரோவர் நடுவில் சிவபெருமான் சொர்ணலிங்க மாக அந்த முனிவர்களுக்குத் தரிசனம் கொடுத்ததாகக் கூறப்படுகிறது. பிரம்மாவின் மனதிலிருந்து தோன்றிய தால் இந்த ஏரி 'மானசரோவர்' என்று அழைக்கப்படு கிறது. மானசரோவர் உமாதேவியின் வடிவம், பார்வதி தேவியின் சொரூபம், பார்வதிதேவியே மானசரோவரின் வடிவத்தில் இருக்கிறாள் என்று இந்து மத நூல்கள் கூறுகின்றன.

"உலகின் அனைத்து பாகங்களிலும் உள்ள கங்கை முதலான எல்லாப் புண்ணிய நதிகளும் உண்மையில் மானசரோவரிலிருந்துதான் உற்பத்தியாகின்றன. மானசரோவரின் நீர்தான் பூமிக்கு அடியில் சென்று



வெவ்வேறு பெயர்களில், வெவ்வேறு இடங்களில் புனித நதிகளாக வெளிப்படுகிறது. கங்கையின் பிறப்பிடமும் மானசரோவர்தான். மானசரோவரில் கங்கையும் இருக்கிறது. அது பூமிக்கடியில் சென்று கோமுகத்தில் வெளிப்பட்டு இந்தியாவின் பல பாகங்களிலும் பாய்கிறது. இவ்விதம் உலகிலுள்ள அத்தனை புனித நதிகளுக்கும் தாய் மானசரோவர் என்பதால் மானசரோவர் 'மகா சரோவர்' ஆகும்'' என்று திபெத்தியர்கள் கருதுகிறார்கள்.

எங்கள் ஜீப்புகள் இரவு 8.30 மணிக்கு, மானசரோவர் கரையிலுள்ள ஹோரே என்ற இடத்தைச் சென்றடைந்தன. இந்த இடம் மானசரோவர் கரையிலுள்ள ஒரு முக்கிய இடமாகும்.

ஹோரே முகாமில் எங்கள் அறைகளில் சாமான்களை வைத்துவிட்டு, வெளியே வந்து கைலாஸ்பதியையும் மூன்றாம் பிறையையும் தரிசித்தோம். நாங்கள் தங்கிய இடம் கயிலைநாதனைத் தரிசிக்கக் கூடிய இடத்தில் அமைந்திருந்தது எங்களுக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தந்தது. இங்கிருந்து கயிலாயம் சுமார் 50 கி.மீ. தூரம் இருக்கும்.

''விடியற்காலையில் இரண்டரை மணி முதல் 4.30 மணிக்குள் தேவர்கள் மானசரோவரில் வந்து நீராடுகிறார்கள். அவர்கள் நீராடுவது நம் ஸ்தூல கண்ணுக்குத் தெரியாவிட்டாலும் அந்த பிரம்ம முகூர்த்த நேரத்தில் மானசரோவரைத் தரிசிப்பது விசேஷம்'' என்பது நம்பிக்கை. எனவே 28.5.98 விடியற்காலையில் கயிலாயத்தைத் தரிசிக்கலாம் என்ற எண்ணத்துடன்

அறையை விட்டு வெளியே வந்தேன். வெளியில் எந்த இடத்தில் நின்று பார்த்தால் கயிலையை நன்றாகத் தரிசிக்க முடியுமோ, அங்கு சென்று கைலாஸ்பதியைத் தரிசித்தபடியே நின்றேன். நான் அங்கு சென்ற போது எங்கள் குழுவைச் சேர்ந்த ஒருவர் ஏற்கனவே அங்கே இருந்தார்.

அப்போது கயிலை மலையின் உச்சியில் - விளக்கு அணைந்து அணைந்து எரிவது போன்று மினுக் மினுக் கென்று - ஓர் ஒளி தெரிந்துகொண்டிருந்தது. அந்தக் காட்சி ஓவியர்கள் வரையும் திருவண்ணாமலை கார்த்திகை தீபத்தை நினைவுபடுத்தியது. அப்போது மாணிக்கவாசகரின் திருப்பள்ளியெழுச்சி பாடலி லுள்ள, ''அருணன் இந்திரன் திசை அணுகினன் இருள் போய் அகன்றது உதயம்'' என்ற வரி என் நினைவுக்கு வந்தது. எனவே திருக்கயிலாயத்தைத் தரிசித்தபடியே திருப்பள்ளியெழுச்சி பாடல் முழுவதையும் சொல்லி முடித்தோம். நாங்கள் பாடிக்கொண்டிருக்கும்போது கயிலை மீது கொஞ்சம் கொஞ்சமாக சூரியனின் கதிர்கள் விழ ஆரம்பித்தன. விடியற்காலையில் கைலாஸ் தரிசனமும், திருப்பள்ளியெழுச்சி பாட வேண்டும் என்ற எண்ணமும் கயிலைநாதனின் பெருங்கருணை யால் எங்களுக்குக் கிடைத்தன.

பிற்பகல் இரண்டு மணிக்கு எங்கள் குழுவினர் அனைவரும் மானசரோவரில் புனித நீராடுவதற்காகச் சென்றோம். மானசரோவர் கரையிலிருந்தும் கைலாஸ் பதியின் தரிசனம் எங்களுக்கு நன்றாகக் கிடைத்தது.

மானசரோவரில் நீராடியபோது, அதன் கடுமையான குளிர்ச்சி பனிக்கட்டிக்குள் நாங்கள் நுழைந்து செல்வதுபோல் இருந்தது. வாழ்க்கையில் அப்படிப் பட்ட குளிர்ச்சியான நீரில் அது வரையில் நாங்கள் குளித்ததே இல்லை. காதில் பஞ்சை அடைத்துக் கொண்டுதான் நான் நீராடினேன்.

கயிலாய யாத்திரை மேற்கொள்ளும் அன்பர்கள், மானசரோவர் கரையில்தான் மூர்த்தங்கள் (கற்கள்) சேகரிப்பார்கள். இங்குள்ள ஒவ்வொரு மூர்த்தமும் சிவலிங்கமாகவும், மந்திர சக்தி வாய்ந்ததாகவும் கருதப் படுகிறது. திருப்பதி வேங்கடாசலபதி கோயில், மயிலை கபாலீஸ்வரர் கோயில் போன்ற எண்ணற்ற திருத்தலங்கள் உள்ளன. இவற்றில் விக்கிரகங்கள் செய்து கருவறையில் மூலவர்களாக வைத்திருக் கிறார்கள். இந்த விக்கிரகங்கள் அவற்றை விக்கிரகங் களாக வடிப்பதற்கு முன்பு சாதாரண கற்களாக இருந் தவை. பிறகு அவற்றில் விக்கிரகங்கள் செய்து - மந்திர சக்தி செலுத்தப்பட்டு - வழிபாட்டிற்கு உரியவைகளாக ஆக்கப்பட்டன. ஆனால் கயிலாயம் உலகம் தோன்றிய காலத்திலிருந்து இயல்பாகவே மந்திர சக்தியுடன் இருந்துகொண்டிருக்கிறது. எனவே இதை Mystic Moun- tain, மந்திர சக்தி வாய்ந்த மாமலை, தெய்விகம் வாய்ந்த மலை, பூரண ஆன்மிக சக்தி வாய்ந்த மலை என்று பெரியோர்கள் உறுதியாகச் சொல்கிறார்கள். மகேந்திர மாமலை என்று கயிலாயத்தை மாணிக்க வாசகர் திருவாசகத்தில் குறிப்பிடுகிறார். கைலாஸ் -

மானசரோவர் ஆகிய இரண்டு இடங்களிலும் உள்ள ஒவ்வொரு கல்லும் மந்திர சக்தியுடன் இருந்துகொண் டிருக்கிறது.

நாங்கள் மானசரோவரில் நீராடி கரையேறியதும் அங்கிருந்த மூர்த்தங்களை சேகரிக்க ஆரம்பித்தோம்.

மானசரோவர் பரிக்ரமம் ——————

மானசரோவரை நடந்து பரிக்கிரமம் செய்வதற்கு மூன்று நாட்கள் ஆகின்றன.[1]

29.5.98 காலை பத்து மணிக்கு எங்கள் முகாமிலிருந்து நாங்கள் ஜீப்புகளில் புறப்பட்டோம். ஜீப் எங்களை மானசரோவர் கரைக்கு அழைத்துச் சென்றது. அங்கு முன்பே நாங்கள் ஏற்பாடு செய்திருந்தபடி - எங்களை அழைத்துச் செல்வதற்காகக் குதிரைகளுடன் - திபெத்தியர்களான சுமார் முப்பது குதிரைக்காரர்கள் காத்திருந்தார்கள். நாங்கள் சென்றதும் அந்தக் குதிரைக் காரர்கள் எங்கள் குழுவினர் குதிரைகள் மீது ஏறுவதற்கு உதவி செய்தார்கள். நாங்கள் குதிரைகளில் அமர்ந்து, மானசரோவர் பரிக்ரமம் (பிரதட்சணம் செய்தல், வலம் வருதல்) என்ற எங்கள் பிரயாணத்தைத் துவக்கினோம். பிரயாணம் ஆரம்பித்த இடம் பள்ளத்திலிருந்து செங்குத்தாக மேல் நோக்கிச் செல்வதாக இருந்தது.

———

1. மானசரோவரை வலம் வரும்போது பல சிற்றாறுகள் குறுக்கிடுகின்றன. இவற்றைக் கடப்பதற்குரிய பாலங்கள் கட்டப்பட்டுவிட்டதால் தற்போது (2002) பல இடங்களில் ஒரு நாளிலேயே ஜீப்பில் இந்தப் பரிக்ரமத்தை முடித்துவிடலாம்.

குதிரைக்காரர்கள் எங்களுடன் நடந்து வந்தார்கள். அவர்களில் பெரும்பாலானவர்கள் பெண்கள்; இரண்டு சிறுவர்களும் இருந்தார்கள். மானசரோவர் கரையை ஒட்டியே எங்களைக் குதிரைகளில் திபெத்தியர்கள் அழைத்துச் சென்றார்கள். எனவே இந்தக் குதிரைப் பயணம் முழுவதும், மானசரோவரின் தெய்விக அழகை எங்களால் தரிசிக்க முடிந்தது. மானசரோவர் நீரின் நிறம் நீலம், பச்சை, மஞ்சள், சில நேரங்களில் பல நிறக் கலவை என்று அடிக்கடி— நிமிடத்திற்கு நிமிடம்— மாறியபடியே இருக்கிறது. இது காண கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. மானசரோவரின் நிறம் அவ்வப்போது மாறுவதற்கு அந்தந்த இடங்களிலுள்ள நீரின் ஆழம், சுற்றியுள்ள மலைகள், அவ்வப்போது அங்கு தவழும் மேகங்கள் ஆகியவையும் காரணமாகும்.

மானசரோவர் கரையில் சில பௌத்த மடாலயங்கள் இருக்கின்றன. பௌத்த மடாலயம் 'கொம்பா' என்று அழைக்கப்படுகிறது. முதலில் சிரலங் கொம்பா என்ற இடத்தை அடைந்தோம்.

நாங்கள் குதிரைகளிலிருந்து இறங்கிய இடத்தில், திபெத்தியர்கள் தங்களின் வழிபாட்டின் ஓர் அங்கமாக மானசரோவர் கரையில் Mani Stones எனப்படும் பெரிய பெரிய கற்களை அடுக்கி வைத்திருந்ததைப் பார்த்தோம். அவற்றில் கல்வெட்டுகள் போன்று, ''ஓம் மணிபத்மே ஹூம்'' என்ற மந்திரம் திபெத்திய மொழியில் எழுதப்பட்டிருந்தது.

சிரலங் கொம்பாவில் லாமாக்களான புத்த பிக்குகள் சிலர் இருந்தார்கள்.

அங்கே திபெத்தியர்களின் பாணியில் சுமார் ஐந்தடி உயரமுள்ள புத்தர் சிலை இருந்தது. அந்தச் சிலைக்கு இடப் புறத்தில் திபெத்தியர்கள் 'கோப தெய்வம்' என்று கூறும் ஒரு தெய்வத்தின் உருவம் வரையப்பட்டிருந்தது. அதன் தோற்றம் தமிழ்நாட்டில் கிராமங்களில் வணங்கப்படும் காளியின் உருவம் போன்று உக்கிரமாக இருந்தது. இங்கே பல இடங்களில் பல வண்ணங்களில் புத்தரின் திருவுருவம் கொண்ட துணிகள் தொங்க விடப்பட்டிருந்தன.

புத்தர் சிலையின் இடப் பக்கத்தில் புறாக் கூண்டுகள், அல்லது தபால் ஆபீசில் தபால்களைப் பிரிக்க பயன்படும் சிறிய அலமாரிகள் போன்ற பல அலமாரிகள் இருந்தன. அவற்றில் பௌத்த லாமாக்கள்[1] தங்கள் புனித நூல்களை நீளமான சுவடிகளில் எழுதி நூலால் சுற்றி வைத்திருந்தார்கள்.

இங்கு புத்த மடாலயங்களில் பெரிய நெய் விளக்கு வாங்கி, அதை புத்தர் சிலையின் முன்னால் பிரார்த்தனை செய்து ஏற்றி வைப்பது முக்கிய வழிபாடாகும். நாங்களும்நெய் விளக்குகள் வாங்கி, புத்த பகவானிடம் பிரார்த்தனை செய்து அவற்றை அவர் முன்னால் ஏற்றி வைத்தோம். இந்த நெய் விளக்கில்

1. புத்தமதத் துறவிகள்.

இருந்த நெய், யாக் எனப்படும் காட்டெருமைகளின் நெய்யாகும்.[1] புத்தர் சிலை இருந்த இடப் பக்கத்தில், இரண்டு லாமாக்கள் தங்களுடைய புனித நூலைப் பாராயணம் செய்துகொண்டிருந்தார்கள்.

கன்னியாகுமரி கடற்கரையில் ஆங்காங்கே பல நிறங்களில் மணல்கள் இருப்பது போலவே மானசரோவர் கரையில் ஆங்காங்கே தங்கம், வெள்ளி, சிவப்பு, மஞ்சள், பச்சை, கருப்பு போன்ற பல நிறங்களில் - பல நிறக் கலவைகளில் - மணல்கள் காணப் படுகின்றன. அங்கிருந்த திபெத்திய மூதாட்டி ஒரு வரிடம் எங்களில் சிலர் பணம் கொடுத்து மானசரோவ ரின் கலர் மணல்களை வாங்கினார்கள். இவற்றை யாத்திரிகர்கள் மானசரோவரின் பிரசாதமாக எடுத்து வருவது வழக்கம்.

மீண்டும் எங்கள் மானசரோவர் பரிக்ரமம் தொடர்ந்தது. பகல் சுமார் 1.30 மணிக்கு நாங்கள் ஓய்வெடுத்துக்கொண்டிருந்த சமயத்தில், குதிரைக் காரர்கள் தங்களின் பகலுணவைச் சமைக்க ஆரம்பித் தார்கள். இங்கு 'ஓய்வு' என்று மானசரோவர் கரையி லிருந்த புல்வெளியில் நாங்கள் படுத்திருந்ததைக் குறிப்பிடுகிறேன். இதை ஒரு வகையில் மானசரோவர் கரையில் எங்களுக்குக் கிடைத்த 'சன்பாத்' என்றுதான் சொல்ல வேண்டும்.

---

1. தற்போது (2002) இந்தியா மற்றும் நேபாளத்திலிருந்து இறக்குமதி செய்யப்படும் வனஸ்பதி நெய்யே பொதுவாகப் பயன்படுத்தப்படுகிறது.

மீண்டும் எங்கள் பயணம் தொடர்ந்தது. நான் அமர்ந்திருந்த குதிரையின் கயிற்றை ஒரு பெண் பிடித்துக்கொண்டு முன்னால் சென்றாள். அந்தப் பெண் வழி முழுவதும், ''ஓம், ஓம்'' என்பது போன்ற ஒலியைக் கொண்ட ஏதோ ஒரு மந்திரத்தைச் சொல்லிக் கொண்டே வந்தாள். அது அநேகமாக 'ஓம் மணிபத்மே ஹூம்' என்ற மந்திரமாக இருக்கும் என்று எனக்குத் தோன்றியது.

மானசரோவர் கரையில் நாங்கள் சென்ற சில இடங்களில் பனி உறைந்து கனமான பாறை போன்று இருந்தது. சில இடங்களில் பனி உறைந்து கெட்டியான தரை போலவே இருந்தது. அத்தகைய சுமார் இரண்டடி உயரமுள்ள பத்து, பதினைந்து பனித்தரைகளின் மீது எங்கள் குதிரைகள் சென்றன.

எங்களின் இந்தப் பயணத்தின்போது இடையில் மானசரோவரில் சென்று கலக்கும் பல சிறிய ஓடைகளும், சில சிற்றாறுகளும் குறுக்கிட்டன. சிறிய ஓடைகளைக் குதிரைகள் சுலபமாகத் தாண்டிச் சென்றன. சில சிற்றாறுகளைக் குதிரைகள் சற்று சிரமப்பட்டு கடக்க வேண்டியதாயிற்று. ஆறுகளைக் கடக்கும்போது எங்கள் அனைவரையும் குதிரைக்காரர்கள் குதிரைகளிலிருந்து கீழே இறக்கிவிட்டார்கள்; பின்னர் திறமையும் வலிமையும் வாய்ந்த குதிரைக்காரன் ஒருவன் ஒரு குதிரைமீது தான் ஏறிக்கொண்டு, எங்களில் ஒருவரை வேறொரு குதிரையில் ஏற்றிக்கொண்டு, அந்தக் குதிரையின் கயிற்றைப் பிடித்துக்கொண்டு

ஆற்றைக் கடந்து சென்றான். இப்படி நாங்கள் ஒவ்வொருவராக ஆறுகளைக் கடந்தோம்.

அவ்விதம் ஒரு சமயம் குதிரைக்காரர் ஒருவர் ஓர் ஆற்றைக் கடந்து சென்றபோது, அவர் காலில் அணிந்திருந்த ஷூவும் சாக்ஸும் ஆற்று தண்ணீரில் நினைந்து போனதைக் கவனித்தேன். எனவே நான் அமர்ந்திருந்த குதிரை ஆற்றைக் கடந்தபோது, என்னுடைய ஷூவும் சாக்ஸும் தண்ணீரில் நினையாமல் இருப்பதற்காகக் குதிரையின் முதுகின் மீதே என் கால்களை வைத்துக் கொண்டேன். அதனால் என்னுடைய ஷூவும் சாக்ஸும் ஆற்று நீரில் நனையாமல் தப்பின. இந்த ஆற்றைக் கடந்தபோது எங்கள் யாத்திரிகர்கள் சிலருடைய ஷூவும் சாக்ஸும் ஆற்று நீரில் நனைந்து விட்டன. அவர்கள் பிறகு அங்கு நிலவிய கடுமையான குளிரில் மிகவும் சிரமப்பட வேண்டியிருந்தது.

மீண்டும் ஓய்வுக்காக மாலை ஐந்து மணிக்கு ஓர் இடத்தில் எங்கள் குதிரைகள் நிறுத்தப்பட்டன. அப்போது குளிர்காற்று 'ஒரு குட்டிப் புயல்காற்று' என்று சொல்லத்தக்க வகையில் கடுமையாக வீசிக் கொண்டிருந்தது. அதனால் மானசரோவரில், கடலில் எழுவதுபோல் ஒன்றன்பின் ஒன்றாக பெரும் அலைகள் எழுந்து மோதிக்கொண்டிருந்தன.

இங்கு மானசரோவரின் மறுகரையில் நீண்ட தொலைவில் தெரிந்த கயிலாயத்தையும் தரிசித்தோம்.

அன்றைய தினம் மாலை நான்கு மணியிலிருந்தே குளிர் கடுமையாக இருந்தது. மூன்று கம்பளி

குல்லாய்களை நான் அணிந்திருந்தபோதிலும் குளிர் காற்று என் காதைப் பலமாக வந்து தாக்கியது. எங்களில் பலரும் அநேகமாக எல்லோருமே - இந்தக் குளிருக்கு பயந்தே போய்விட்டோம். கடும் குளிரின்போது தலையில் கம்பளித் தொப்பிகளை அணியும் முன்னர் காதுகளில் ear-plug வைத்துக் கொள்ளவோ அல்லது பஞ்சு வைத்துக்கொள்ளவோ செய்வது குளிரிலிருந்து நம்மை வெகுவாகப் பாதுகாக்கிறது. எப்படியோ, இறைவனின் நாமத்தை ஜபம் செய்தபடியும், பிரார்த்தனை செய்தபடியும் ஒரு வழியாகக் கடுமையான குளிரில் குதிரைப் பயணம் செய்து, அன்றிரவு தங்க வேண்டிய சுகு கொம்பா என்ற இடத்தைச் சென்றடைந்தோம்.

சுகு கொம்பா என்ற இந்த இடம் மாந்தாதா மலையின் அடிவாரத்தில் அமைந்துள்ளது. அன்றைய தினம் நாங்கள் சுமார் பத்தரை மணி நேரம் பிரயாணம் செய்திருந்தோம். இந்தப் பத்தரை மணி நேரத்தில் நாங்கள் கடந்தது 32 கி.மீ. தூரம் ஆகும்.

குதிரைகளிலிருந்து நாங்கள் இறங்கினோமோ இல்லையோ, குளிருக்குப் பயந்து விரைந்து ஓடிச் சென்று அருகிலிருந்த விருந்தினர் அறைகளில் நுழைந்துகொண்டோம். அந்த அறையில் சுமார் ஐந்தடி நீளம், ஐந்தடி அகலம் கொண்ட இரண்டு கண்ணாடி ஜன்னல்கள் இருந்தன. அந்த ஜன்னல்கள் திறக்க முடியாதபடி சுவற்றில் பொருத்தப்பட்டிருந்தன. இந்தக் கண்ணாடி ஜன்னல் வழியாக மானசரோவரைச் சுமார் அரை மணிநேரம் பக்தியுடன் தரிசித்தபடியே

இருந்தோம். அவ்விதம் தரிசிப்பதற்கு ஏற்ப அப்போது சூரிய வெளிச்சமும் நின்றாக இருந்தது. இங்கு இரவு சீன நேரப்படி சுமார் பத்து மணிக்குத்தான் சூரியன் அஸ்தமிக்கிறது. அன்றிரவு பயணக் களைப்பும், கடுமை யான குளிரும் சேர்ந்து எங்களால் அறையை விட்டு வெளியே வரவே முடியவில்லை.

'விநாயகரும், முருகனும் அவதரித்த மாந்தாதா மலையின் அடிவாரத்தில் இரண்டு நாள் தங்கப் போகிறோம்!' என்ற எண்ணம் என் மனதிற்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தந்தது.

30.5.98. இன்று எங்கள் குழுவைச் சேர்ந்த சிலருக்கு உடல் நலம் சரியில்லை. எனவே அவர்களால் மானசரோவருக்குச் சென்று நீராட முடியவில்லை. மற்றவர்கள் நீராடினார்கள்.

நாங்கள் தங்கிய விருந்தினர் விடுதிக்கு மிகவும் அருகில் மானசரோவர் கரையில் ஒரு புத்தர் கோயில் இருக்கிறது. அதன் அருகில் பூஜை, ஹோமம் முதலியன செய்வதற்கு ஏற்ற வகையில் ஒரு பெரிய மேடை இருக்கிறது. அங்கு பகல் ஒரு மணிக்கு ஸ்ரீராமகிருஷ்ணருக்குப் பூஜையும் ஹோமமும் செய்தோம்.

ஹோமத்தின்போது ஸ்ரீராமகிருஷ்ணர், ஸ்ரீசாரதா தேவியார், சுவாமி விவேகானந்தர், அன்னை காளி, கைலாஸ்பதி, காசி விஸ்வநாதர் படங்கள்; சிவ பார்வதி பித்தளை சிலை, மேரு, சிறிய மூன்று விநாயகர்

சிலைகள், வெள்ளி வேல், இரண்டு சிவலிங்கங்கள் ஆகியவற்றை வைத்திருந்தோம். உலர்ந்த பழங்கள், கற்கண்டு, வெள்ளியால் செய்த 108 வில்வதளங்கள், விபூதி, குங்குமம், புடவை, ரவிக்கை துணி, வளையல்கள், வேஷ்டி ஆகியவற்றை இறைவனுக்கும் இறைவிக்கும் அர்ப்பித்தோம். சிவபெருமானுக்குப் பிட்டு நைவேத்தியம் செய்வது சிறப்பு என்பதால், அன்றைய தினம் ஹோமத்தின்போது அரிசி மாவால் பிட்டு தயார் செய்து நைவேத்தியம் செய்தோம். அந்த ஹோமத்தின் முடிவில் 'த்ர்யம்பகம் யஜாமஹே சுகந்திம் புஷ்டிவர்த்தனம்...' என்ற மகா ம்ருத்யுஞ்ஜய மந்திரத்தை அனைவரும் சொல்ல, பூர்ணாஹுதியுடன் ஹோமம் திவ்யமாக நிறைவு பெற்றது. ஹோமத்தில் எஞ்சிய புனிதச் சாம்பல் முழுவதையும் பிரசாதமாகச் சேகரித்துக் கொண்டோம்.

நாங்கள் தங்கியிருந்த இடத்திற்கு அருகிலிருந்த புத்தர் கோயிலில், சுமார் நான்கடி உயரம் கொண்ட மூன்று புத்தர் சிலைகள் இருந்தன. அந்தச் சிலைகளைப் பற்றி விசாரித்தபோது அங்கிருந்த பௌத்தத் துறவி ஒருவர், ''இங்குள்ள மூன்று புத்தர் சிலைகளில் முதல் புத்தர் சிலை - இந்த உலகில் வாழ்ந்த சித்தார்த்த புத்தரைக் குறிப்பிடுகிறது. இரண்டாவது புத்தர் சிலை - மேல் உலகில் இருக்கும் புத்தரைக் குறிப்பிடுகிறது. மூன்றாவது புத்தர் சிலை - இனி எதிர்காலத்தில் வர இருக்கும் புத்தரைக் குறிப்பிடுகிறது'' என்று விளக்கம் கூறினார். இந்த புத்தர் கோயிலில் பகவான் புத்தரின்

பாதச் சுவடுகளை (Foot Prints)வழிபாட்டிற்கு வைத்திருக்கிறார்கள்.

அந்தக் கோயிலில் பல நிறங்களில் புத்தரின் அழகிய திருவுருவங்களைக் கொண்ட திரைச் சீலைகள் தொங்கவிடப்பட்டிருந்தன. அங்கு தொங்கிக்கொண்டிருந்த திரைச் சீலைகள் சிலவற்றில் காளி போன்ற உக்கிரமூர்த்திகளின் வடிவங்களும், கோயிலுக்குள் நுழையும் இடத்தில் இரண்டு பக்கங்களிலும் உள்ள சுவர்களில் பௌத்த பெண் தெய்வங்களின் உருவங்களும் வரையப்பட்டிருந்தன. கோயிலுக்குள் பௌத்த மத நூல்கள் பாலி, சம்ஸ்கிருதம், திபெத் ஆகிய மொழிகளில் சிறு சிறு அலமாரிகளில் வைக்கப்பட்டிருந்தன.

அன்றிரவு அந்த புத்தர் கோயிலிலேயே எங்கள் பிரார்த்தனைக் கூட்டத்தை வைத்துக்கொண்டோம். அப்போது அங்கு பௌத்தத் துறவிகள் சிலர் இருந்தார்கள். அவர்கள் நாங்கள் எங்கள் பிரார்த்தனைக் கூட்டத்தைத் துவக்கியபோது, தங்களின் இசைக்கருவிகளை மங்கள இசையாக வாசித்தனர். அவ்விதம் தங்கள் கோயிலில் புத்தரின் வழிபாட்டிற்குப் பயன்படுத்தப்படும் அந்த இசைக்கருவிகளை எங்களின் பிரார்த்தனைக் கூட்டத்தின் பொருட்டு புத்த பிக்குகள் வாசித்தது, புத்தரே எங்களை ஆசீர்வதிப்பது போன்ற மனநிறைவை எங்களுக்குத் தந்தது. எங்கள் பிரார்த்தனைக் கூட்டம் நிறைவு பெற்றபோதும், அதன் அடையாளமாகப் பிரார்த்தனைக் கூட்டத்தின்

ஆரம்பத்தில் வாசித்த அதே பௌத்த இசைக்கருவிகளை புத்த பிக்குகள் வாசித்தார்கள். அது எங்களுக்கு மகிழ்ச்சியைத் தந்தது.

இன்று 31.5.98 ஞாயிற்றுக்கிழமை காலை சுமார் பத்து மணிக்கு சுகு கொம்பா முகாமிலிருந்து ஜெய்தி என்ற இடத்திற்குப் புறப்பட்டோம். வழியில் பனி சூழ்ந்த பல மலைகளைப் பார்த்தபடியே சென்றோம்.

மாந்தாதா மலை எவ்வளவு நீளமுடையது என்று ஓரளவு இந்தப் பிரயாணத்தின்போது எங்களால் தெரிந்துகொள்ள முடிந்தது. எங்கள் ஜீப் செல்லச் செல்ல மாந்தாதா மலையும் தொடர்ந்து சென்று கொண்டே இருந்தது.

மாந்தாதா மலை ஐந்து சிகரங்களைக் கொண்டது. இது கடல் மட்டத்திலிருந்து 25,355 அடி உயரம் உடையது. திபெத்தியர்கள் இந்த மலையை மழைக் கடவுளாகக் கருதி வழிபடுகிறார்கள். அவர்கள் இந்த மலையை 'மெமோ நாம் கியால் (வெற்றித் திருமகன்)' என்ற பெயரால் அழைக்கிறார்கள்.

ராக்ஷஸ்தல் (அசுரர்கள் ஏரி)

இந்திய அரசு மூலம் டில்லி வழியாகக் கைலாஸ் யாத்திரை செல்பவர்கள் செல்லும் வழியில் 'ராக்ஷஸ்தல்' என்ற இடம் வருகிறது. ராக்ஷஸ்தல் என்ற சொல்லுக்கு 'அசுரர்கள் ஏரி' என்பது பொருள். காட்மாண்டு வழியாகக் கைலாஸ் யாத்திரை செல்பவர்கள் செல்லும் வழியில் ராக்ஷஸ்தல் வராது. ஆனால்

அவ்வளவு தூரம் போய்விட்டு ராக்ஷஸ்தல் பார்க்காமல் வரக் கூடாது என்று நினைத்து, 'ராக்ஷஸ்தலுக்கும் போக வேண்டும்' என்று முன் கூட்டியே நாங்கள் திட்ட மிட்டிருந்தோம். எனவே ஜெய்தி முகாமைச் சென்றடைவதற்கு முன்னால் ராக்ஷஸ்தல் நோக்கி எங்கள் ஜீப்புகள் சென்றன.

மானசரோவருக்கும் ராக்ஷஸ்தாலுக்கும் இடை யில் 'குர்லா பாஸ்' என்ற ஓர் இடம் வருகிறது. இது சிறிய சிறிய குன்றுகளைக் கொண்ட மலைத் தொட ராகும். மானசரோவருக்கும் ராக்ஷஸ்தாலுக்கும் இடையிலுள்ள தூரம் மூன்று கி.மீ. முதல் எட்டு கி.மீ. ஆகும்.

நாங்கள் மானசரோவரையும் ராக்ஷஸ்தலையும் ஒரே சமயத்தில் பார்ப்பதற்கு வசதியாக இரண்டு ஏரிகளுக்கும் நடுவில் எங்கள் ஜீப்புகளை நிறுத்தி னோம். அங்கிருந்து மானசரோவரை இந்தப் பக்கமும், அந்தப் பக்கம் ராக்ஷஸ்தலையும் பார்த்தோம். மானசரோவரில் அலைகள் இருந்தன. ஆனால் ராக்ஷஸ்தால் அலைகளே இல்லாமல் அமைதியாக இருந்தது. ராக்ஷஸ்தல் ஏரியின் சுற்றளவு சுமார் 125 கி.மீ. ஆகும். ராக்ஷஸ்தலிலிருந்து வடக்குத் திசையில் சமார் 40 கி.மீ. தூரத்தில் கயிலாயம் இருக்கிறது. இந்த ஏரி மானசரோவருக்கு மேற்கில் சுமார் 10 கி.மீ. தொலை வில் உள்ளது. 'காற்றில்லாத நாட்ளில் இந்த ஏரியில் கயிலாயத்தின் பிரதிபிம்பத்தை மிக நன்றாகப் பார்க்க முடியும்' என்று கேள்விப்பட்டேன்.

ராக்ஷஸ்தல் ஏரிக்கரையில் எங்கள் ஜீப் சென்று கொண்டிருந்தபோதே எங்களுக்குக் கைலாஸ் தரிசனம் நன்றாகக் கிடைத்தது. அங்கு சிவபெருமான் நெஞ்சை நிமிர்த்திக்கொண்டு, ''கைலாஸ் - மானசரோவர் தரிசனம் நன்றாக ஆயிற்றா?'' என்று எங்களைக் கேட்பது போல் கயிலாயத்தின் காட்சித் தெரிந்தது.

'குர்லா பாஸ்' அருகில் ராக்ஷஸ்தலின் முடிவிடம் அல்லது ஆரம்பிக்கும் இடம் இருக்கிறது. நாங்கள் அங்கு சென்றபோது அந்தப் பகுதியைச் சேர்ந்த ராக்ஷஸ்தல் நீரின் பெரும்பகுதி பனி காரணமாக உறைந்து போயிருந்தது. இவ்விதம் ராக்ஷஸ்தலின் முக் கால் பாகம் பனியால் உறைந்திருந்ததைப் பார்த்தோம்.

ராக்ஷஸ்தலின் நடுவில் மிகவும் நெருக்கமாக மூன்று தீவுகள் போன்ற மூன்று திட்டுகள் அமைந் துள்ளன. அவற்றைத் தூரத்திலிருந்து பார்த்தபோது நான் ஒரு தீவு என்றே நினைத்தேன். ராக்ஷஸ்தல் நடுவில் தீவு போல் அமைந்திருக்கும் இந்த இடத்தில் ராவணன் தவம் செய்ததாக ஐதீகம். எனவே இந்த இடம் 'ராவணன் திட்டு' என்று அழைக்கப்படுகிறது. ராக்ஷஸ்தலுக்கு 'ராவணன் ஏரி' என்றும் ஒரு பெயர் உண்டு.

'ராக்ஷஸ்தல் என்பது அசுரர்கள் தவம் செய்த இடம். அதில் மக்கள் நீராடும் வழக்கமில்லை. இங்கு தங்கள் கைகளை வெட்டிப் போட்டுக்கொள்ளுதல், தங்கள் உடலைப் பல விதங்களிலும் வருத்திக்கொள்ளு தல் போன்ற பல கொடிய தவங்களை அசுரர்கள்

செய்திருக்கிறார்கள். 'மாமிசம் தின்னும் அரக்கர்கள் இன்னும் இந்த ஏரியின் அடியில் இருக்கிறார்கள். எனவே பயபக்தியோடு ஒருமுறை பார்த்துவிட்டு, உடனடியாக அங்கிருந்து சென்றுவிட வேண்டும்' என்று திபெத்தியர்களின் பழமையான நூல்கள் கூறுகின்றன.

கைலாஸ் செல்லும் யாத்திரிகர்கள் ராக்ஷஸ்தலில் நீராடும் வழக்கம் கிடையாது. யாத்திரிகர்கள் பொதுவாக இந்த ஏரியைத் தூரத்திலிருந்துதான் பார்க்கிறார்கள். எவரும் அதன் அருகில் செல்வதில்லை. ராக்ஷஸ்தலின் நீரைப் பரிசோதித்தபோது ஆராய்ச்சி முடிவுகளும் இதை ஆமோதிப்பதுபோலவே உள்ளன. இந்தத் தண்ணீர் உப்பு நீராக இருப்பதுடன், மெக்னீசியம் அதிகமாக இருப்பதால் குடிப்பதற்கு ஏற்றதல்ல என்பது கண்டுபிடிக்கப்பட்டது. எங்கள் யாத்திரைக் குழுவில் வந்தவர்கள் அனைவருமே ராக்ஷஸ்தல் அருகில் சென்று அதைப் பார்த்தோம்.

ராக்ஷஸ்தலில் தாமரை, அல்லி மலர்கள் போன்று பனித்துகள்கள் பனிமலர்கள் போன்று நிறைந்து காணப்பட்டன. இது போன்ற பனி மலர்களை வாழ்க்கையில் நாங்கள் பார்த்தது இதுவே முதல் தடவையாகும். பல வகையான மலர்களை நாம் பார்த்திருக்கிறோம். ஆனால் மலர்கள் போன்று பல வடிவங்களில் அமைந்த பனித்துகள்களை நாம் பார்த்ததில்லை அல்லவா?

ராக்ஷஸ்தல் வழியாக எங்கள் ஜீப்புகள் ஜெய்தி என்ற இடத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்தன. பகல் சுமார் இரண்டு மணிக்கு எங்கள் ஜீப்புகள் ஜெய்தி முகாமைச் சென்றடைந்தன. நாங்கள் அங்கு சென்று சேர்வதற்கு முன்பாகவே, ஈகோ டிரக்கைச் சேர்ந்த சமையல்காரர்கள் அங்கு சென்று சமையல் செய்து முடித்தார்கள். ஆதலால் நாங்கள் எங்கள் அறைகளுக் குள் சென்றதுமே, அவர்கள் எங்களுக்குப் பகலுணவு வழங்கினார்கள்.

அன்று மாலை எங்கள் குழுவினர் அனைவரும் ஜெய்தியிலுள்ள மானசரோவர் கரைக்குச் சென்றோம். அங்கு எங்கள் குழுவினர் சிலர் மானசரோவரில் நீராடினார்கள். நான் மானசரோவர் கரையில் நிறைய மூர்த்தங்கள் சேகரித்தேன்.

1.6.98 திங்கட்கிழமை காலை சுமார் 9.30 மணிக்கு ஜெய்தி முகாமிலிருந்து சூ கொம்பாவிற்குப் புறப்பட் டோம். சுமார் ஒரு மணிநேரம் ஜீப்பில் பிரயாணம் செய்த பின்பு, காலை 10.30 மணிக்கு சூ கொம்பா விடுதியைச் சென்றடைந்தோம். நாங்கள் சென்று தங்கிய விடுதியில் இர்ண்டு பெரிய அறைகள் இருந்தன. அந்த அறையின் உட்பகுதிகள் திபெத்திய பாணியில் அமைக்கப்பட்டிருந்தன.

மானசரோவர் பரிக்ரமம் வரும்போது சுகு, ஜெய்தி ஆகிய இரண்டு இடங்களிலும் ஓர் அரிய காட்சியை நாம் காண முடியும். அதாவது, இந்த இடங்களில் கயிலைமலையின் பிரதிபிம்பத்தை மானசரோவரில்

காண முடியும். இந்தப் பிரதிபிம்பம் 'சிவமும் சக்தியும் சேர்ந்த அர்த்தநாரீஸ்வரர் வடிவம்' என்ற கருத்தில் 'கௌரி சங்கர்' என்று அழைக்கப்படுகிறது. ஜெய்தி முகாமை நெருங்கும் இடத்தில், மானசரோவர் நீர் காற்றில் அசையாமல் இருந்தால், அங்கு கயிலாயத்தின் பிரதிபிம்பம் மிகவும் நன்றாகத் தெரியும். இது ஓர் அற்புதக் காட்சியாகும்.

அன்று முழுவதும் மானசரோவர் கரையிலுள்ள இந்த சூ கொம்பா விடுதியில் தங்கிவிட்டு, மறுநாள் அங்கிருந்து கயிலாயத்தின் அடிவாரமாகிய தார்ச்சன் செல்வது என்றுதான் திட்டமிட்டு அங்கு சென்றிருந் தோம். ஆனால் நாங்கள் தங்கிய அறையில் இருந்த மதுபான துர்நாற்றம் காரணமாக - 'இன்றைய தினமே எவ்வளவு விரைவில் முடியுமோ அவ்வளவு விரைவில் இங்கிருந்து சென்றுவிட வேண்டும்!' என்று எனக்குத் தோன்றியது. இந்த எண்ணத்தில் நான் இருந்தபோது, "அங்கு Toilet வசதி கிடையாது; Toilet செல்ல வேண்டுமானால் நீண்ட தூரம் செல்ல வேண்டும். இங்கு பெரிய பெரிய நாய்களின் நடமாட்டம் அதிகம். அதிலும் அந்த நாய்கள் இரவில் வெளியே செல்பவர் களைக் கடித்துக் குதறிவிடும்" என்று அந்த விடுதியின் அருகில் இருப்பவர்கள் கூறினார்கள்.

எனவே இதையெல்லாம் யோசித்துப் பார்த்து நான் எங்கள் வழிகாட்டியிடம், "சகிக்க முடியாத மதுபான துர்நாற்றம் அடிக்கும் இந்த அறையில் ஒருநாள் முழு வதும் நாம் தங்குவது என்பது அறவே இயலாத காரியம்.

இரவில் சிறுநீர் கழிக்க வெளியே சென்றால் கூட நாய்கள் கடித்துக் குதறிவிடும் ஆபத்து இருக்கிறது. ஆதலால் இன்றைய தினம் நாம் ஹோமம் செய்து முடித்தவுடனேயே தார்ச்சன் முகாமிற்குச் சென்று தங்குவதற்கு உரிய ஏற்பாடு செய்யுங்கள்'' என்று வற்புறுத்திக் கூறினேன். அதனால் அவர் உடனடியாக ஒரு ஜீப்பில் தார்ச்சனுக்குப் புறப்பட்டுச் சென்றார்.

சூ கொம்பாவில் நாங்கள் தங்கியிருந்த இடத்திற்கு அருகிலேயே வெந்நீர் ஊற்றுகள் இருக்கின்றன. இந்த வெந்நீர் ஊற்றுகள் தனிப்பட்ட ஒருவருக்குச் சொந்த மாக இருக்கின்றன. அவர் இந்த வெந்நீர் ஊற்றைக் குழாய்களுடன் இணைத்து வைத்திருக்கிறார். அதனால் இங்கு யாத்திரிகர்கள் குழாயைத் திறந்து நீராடுவது போன்று நீராடுவதற்கு வசதி இருக்கிறது. இந்த வெந்நீர் ஊற்றில் குளிப்பதற்கு நபர் ஒருவருக்கு ஏழு யுவான்[1] செலுத்த வேண்டும்; துணி துவைப்பதற்கு 10 யுவான் செலுத்த வேண்டும். அங்கு எங்கள் குழுவைச் சேர்ந்த எல்லோருமே நீராடினோம்; மூன்று, நான்கு பேர் தங்கள் துணிகளையும் துவைத்தார்கள். ஆனால் இந்த வெந்நீர் ஊற்றுக் குழாயில் வரும் வெந்நீர் கந்தகம் நிறைந்தது. அதனால் அதில் அதிக நேரம் நீராடுவது உடம்புக்கு நல்லதல்ல.

கந்தகம் உள்ள இந்த வெந்நீர் ஊற்றுகள் உண்மை யில் மானசரோவரின் ஒரு பகுதிதான். ஆனால் இது ஒரு

1. யுவான் என்பது சீன நாணயம். இது இந்தியாவின் சுமார் 6 ரூபாய்க்குச் சமமானது.

சிறிய ஓடை போன்று மானசரோவருடன் இணைந் திருக்கிறது. எனவே பார்ப்பதற்கு அதுவே ஒரு தனி யான சிறிய குளம் போன்று காணப்படுகிறது. அந்தக் குளத்தின் மீது ''உமா, உமா'' என்று கூவியபடி சில பறவைகள் பறந்து சென்றுகொண்டிருந்தன.

சூ கொம்பா என்று அழைக்கப்படும் இந்த இடம் மானசரோவர் கரையிலுள்ள முக்கியத்துவம் வாய்ந்த ஓர் இடமாகும். காரணம், ''சூ கொம்பா பகுதியிலுள்ள மானசரோவரில் பகவான் புத்தரின் தாய் மாயாதேவி நீராடி, 'எனக்கு நல்ல ஒரு மகன் பிறக்க வேண்டும்' என்று பிரார்த்தனை செய்தாள். அதனால் பகவான் புத்தர் மாயாதேவிக்கு மகனாகப் பிறந்தார்'' என்று பௌத்த நூல்கள் குறிப்பிடுகின்றன. அத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த சூ கொம்பா மானசரோவர் கரையில் நாங்கள் பார்வதிதேவியைக் குறித்து ஹோமம் செய்தோம்.

நாங்கள் தங்கிய விடுதிக்கு அருகில் ஹோமம் செய்வதற்கு ஓர் இடத்தைத் தேர்ந்தெடுத்தோம். இந்த இடம் கைலாஸ்பதியே ஹோமத்தை நேரில் பார்ப்பது போன்று அமைந்திருந்தது. ஹோமத்தின் முடிவில் கௌரி அஷ்டோத்திரத்திலுள்ள பெயர்களை 'நம:' என்பதற்குப் பதிலாக 'ஸ்வாஹா' என்று சொல்லி ஆஹுதி அர்ப்பணித்தோம்.

அங்கு நாங்கள் ஹோமம் செய்ய ஆரம்பித்த திலிருந்து ஹோமம் நிறைவுபெறும் வரையில் காற்று பயங்கரமாக அடித்துக்கொண்டிருந்தது. என்றாலும் ஹோமகுண்டம் காற்றினால் அதிகம் பாதிக்கப்படாமல்

இருக்கும் பொருட்டு சிரமப்பட்டு பெரிய Card Board, தகர டிரம், பெரிய கற்கள், பெரிய பலகை போன்ற வற்றைத் தடுப்புபோல் வைத்து ஒருவாறு ஹோமத்தை இறைவன் திருவருளால் செய்து முடித்தோம்.

ஹோமம் முடிந்ததும் ஹோமத்தின்போது நைவேத் தியம் செய்யப்பட்ட பேரீச்சம்பழம், கற்கண்டு போன்ற வற்றை அங்கிருந்தவர்களுக்குப் பிரசாதமாக விநி யோகித்தோம். அப்போது அங்கே எங்கள் குழுவினரைத் தவிரவும் திபெத்தியர்கள் பலர் இருந்தனர். அவர் களுக்கும் தாராளமாகப் பிரசாதம் வழங்கும் வாய்ப்பு கயிலைநாதனின் கிருபையால் எங்களுக்குக் கிடைத்தது. மானசரோவர் கரையில் வாழும் இந்தத் திபெத்தியர்கள் தான் எவ்வளவு பாக்கியசாலிகள்! அவர்களை தேவர்கள் என்றே சொல்ல வேண்டும். ஹோமம் நடந்த இடத்தில் இருந்த திபெத்திய பெண்களுக்குப் பூஜையின்போது தேவிக்கு அர்ப்பிக்கப்பட்ட வளையல்கள், குங்குமம் மற்றும், பரிசுப் பொருட்களாக வேலைப்பாட்டுடன் கூடிய ஹேர் க்ளிப்ஸ், ஸ்டிக்கர் பொட்டுகள் ஆகிய வற்றைக் கொடுத்தோம். வளையல்களைப் பெற்றுக் கொண்ட திபெத்திய சிறுமிகள் கைகளில் அவற்றை அணிந்துகொண்டும், நெற்றியில் பொட்டு வைத்துக் கொண்டும் தங்கள் குடும்பத்தைச் சேர்ந்த பெரியவர் களிடம் சென்று காட்டிச் சந்தோஷப்பட்டார்கள்.

தார்ச்சன்: கயிலாயத்தின் அடிவாரம்

தார்ச்சன் என்ற இடம் கயிலாயத்தின் அடிவாரம் ஆகும். ஜீப்புகள் தார்ச்சன் வரையில் மட்டும்தான்

செல்லும். இங்கிருந்துதான் கைலாஸ் பரிக்ரமம் ஆரம்பிக்கிறது. இங்கிருந்து கயிலாயத்தைத் தெளி வாகத் தரிசிக்க முடியும். 'தார்ச்சன்' என்ற திபெத்தியச் சொல்லுக்குப் 'பிரார்த்தனை, பிரார்த்தனை கொடி' என்று பொருள்.

சூ கொம்பாவிலிருந்து அன்று மாலை 5.30 மணிக்கு நாங்கள் தார்ச்சனுக்குப் புறப்பட்டோம். வழி முழுவதும் எங்களுக்குக் கைலாஸ் தரிசனம் கிடைத்தபடியே இருந்தது. வழியில் ஓர் இடத்தில் கைலாஸ்பதிக்கு நெற்றி, கண்கள், மூக்கு, வாய், கழுத்தில் ருத்திராட்ச மாலை போன்றவை இருப்பது போன்று தோன்றியது. இத்தகைய ஒரு காட்சியை எங்கள் ஜீப்பில் வந்த நாங்கள் அனைவரும் பார்த்தோம்.

தார்ச்சனை நாங்கள் நெருங்கிக்கொண்டிருந்த சமயத்தில் இரண்டு, மூன்று சிற்றாறுகளை நாங்கள் கடந்து சென்றோம். அவை சிற்றாறுகள்தான் என்றா லும், அந்த ஆறுகளில் நீரின் வேகம் மிகவும் அதிக மாகவே இருந்தது. இந்த ஆறுகள் கயிலாயத்திலிருந்து வருபவை.

நாங்கள் தார்ச்சன் விடுதிக்கு மாலை 6.30 மணிக்குப் போய்ச் சேர்ந்தோம். எங்கள் விடுதியின் திறந்த வெளியிலிருந்து பார்த்தாலே நாங்கள் கைலாஸ் பதியை நன்றாகத் தரிசிக்கும் வகையில் எங்களுக்கு விடுதி அமைந்திருந்தது.

எங்கள் குழுவில் ஒருவருக்கு உடல் நலம் சரி யில்லை. அவர் வாந்தி எடுத்தார். அவரைத்

தார்ச்சனிலிருந்த சீன மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார்கள். மருத்துவமனையிலிருந்த சீன டாக்டர் நோயாளியின் உடல் நலக்குறைவு பற்றிய காரணங்களைக் கேட்டுத் தெரிந்துகொண்டார். பிறகு அவர் ஒரு மருந்தைக் கொடுத்து, ''முதலில் இந்த மருந்தை இவருக்குக் கொடுங்கள். இன்றிரவு நானே உங்கள் விடுதிக்கு வந்து இவருக்கு டிரிப்ஸ் கொடுக்கிறேன்'' என்றார். அதன்படி அவர் இரவு எங்கள் முகாமிற்கு வந்து நோயாளிக்கு டிரிப்ஸ் அரைபாட்டில் கொடுத்தார். டிரிப்ஸ் கொடுத்து முடிந்தவுடன் அவர், ''நாளைக் காலையில் வந்து பார்க்கிறேன்'' என்று கூறிவிட்டு சென்றார். டாக்டர் சென்ற ஐந்து நிமிடத்திற்கெல்லாம் நோயாளி மீண்டும் வாந்தி எடுத்தார்.

2.6.98 செவ்வாய்க்கிழமை காலையில் எங்கள் முகாமிற்குச் சீன டாக்டர் வந்தார். அவர் மீண்டும் நோயாளிக்கு அரைபாட்டில் டிரிப்ஸ் கொடுத்தார். பிறகு அவர், ''நீங்கள் நோயாளியை Low Altitude-க்குக் கட்டாயம் அழைத்துச் செல்ல வேண்டும்!'' என்று திட்டவட்டமாகக் கூறினார். தார்ச்சன் கடல் மட்டத்திலிருந்து 17,000 அடி உயரத்தில் இருக்கிறது. அந்த High Altitude நோயாளியின் உடல்நலனுக்கு ஏற்றதல்ல என்பதால், கடல் மட்டத்திலிருந்து 12,000 அடி உயரத்தில் இருக்கும் 'தக்கள்கோட்' என்ற இடத்திலுள்ள மருத்துவமனைக்கு அவரை அனுப்ப நாங்கள் முடிவு செய்தோம். அதன் பின்பு நோயாளியுடன் எங்கள் வழிகாட்டி, வேறு இருவர்

ஆகிய நான்கு பேரும் சீனப் போலீஸ்காரர் ஒருவரின் பாதுகாப்புடன் பகல் 12.30 மணிக்குத் தக்கள்கோட்டிற்குப் புறப்பட்டனர்.

அஷ்டபத்

3.6.98 புதன்கிழமை காலையில் அஷ்டபத் என்ற இடத்திற்கு மலைகளின் மீது நீண்ட தூரம் நாங்கள் ஏறிச் செல்ல இருந்தோம். இது கைலாசபதிக்கு மிக அருகிலுள்ள இடமாகும்.

எங்கள் ஒவ்வொருவருக்கும், மலையின் மீது ஊன்றி நடந்து செல்வதற்கு வசதியாக அடிபாகத்தில் பூண் போட்ட ஒரு கைத்தடியைக் கொடுத்தார்கள். காலை 9.30 மணிக்கு நாங்கள் தார்ச்சனிலிருந்து அஷ்டபத் நோக்கிப் புறப்பட்டோம்.

நாங்கள் விடுதியிலிருந்து புறப்பட்டு சிறிது தூரம் சென்றதும், மிகவும் சிறிய ஒரு கோயில் போன்ற கட்டிடம் தென்பட்டது. அதற்குள் திபெத்தியர்கள் ஸ்தூபியைக் குறிக்கும் விதத்தில் அடுக்கி வைத்திருந்த கற்கள் இருந்தன. அதன் பக்கத்திலேயே கயிலை மலையிலிருந்து வரும் உமாநதி ஓடிக்கொண்டிருந்தது. எங்கள் விடுதிக்கு அருகிலேயே இந்த நதி ஓர் ஓடைபோல் சென்றுகொண்டிருந்தது. இந்த உமாநதி நீரையும் கைலாஸ் செல்லும் யாத்திரிகர்கள் சிலர் கங்கை நீரைப்போல் - மானசரோவர் நீரைப் போல் - புனித நீராகக் கருதி கயிலையிலிருந்து தங்கள் ஊருக்கு எடுத்தும் வருகிறார்கள். அத்தகைய

திவ்ய உமாநதியைக் கடந்ததும் அஷ்டபத் நோக்கி நடக்க ஆரம்பித்தோம். கைத்தடிகளை ஊன்றி மெல்ல மெல்ல மலையின் மீது ஏறினோம். ஓர் இடத்தில் திபெத்தியர்கள் தங்கள் மத வழிபாட்டின் ஓர் அங்க மாகப் பல வண்ணக் கொடிகளைக் கட்டியிருந்ததைப் பார்த்தோம். அங்கு அமர்ந்து சிறிது நேரம் நாங்கள் ஓய்வெடுத்துக்கொண்டோம்.

முதல் சுமார் ஒரு மணி நேரப் பிரயாணம் சரி யாகவே இருந்தது. சுமார் இரண்டு மணி நேரம் ஆகி யிருந்த சமயத்தில், ஈகோ டிரக் வழிகாட்டி ஒருவர் ஓடோடி வந்து என்னிடம், ''நீங்கள் அனைவரும் தவறான வழியில் வந்திருக்கிறீர்கள். முக்கால் மணி நேரத்திற்கு முன்பே நீங்கள் வேறு வழியாகச் சென் றிருக்க வேண்டும். இந்த வழியாகவும் அஷ்டபத் செல்லலாம். ஆனால், அது சுற்றி வளைத்து நீண்ட தூரம் செல்லும் கடினமான பாதையாகும். முக்கால் மணி நேரத்திற்கு முன்பே நீங்கள் பாதை மாறிச் சரியான வழியில் சென்றிருந்தால், குறுக்கு வழியில் சீக்கிரமாக அஷ்டபத்தை அடைந்திருக்க முடியும்'' என்று கூறி னார். அவர் சொன்னதைக் கேட்டதும், எங்கள் குழு வினர் அனைவரும் ஒரே இடத்தில் வந்து சேரட்டும் என்று நான் ஓர் இடத்தில் காத்திருந்தேன். அங்கு அனை வரும் ஒன்றுசேர்ந்த பிறகு, ''இனிமேல் ஒவ்வொரு வரும் தனித்தனியாக அவரவர்களுக்குப் பிடித்த வழியில் செல்வது என்று இருக்கக் கூடாது. ஏற்கெனவே மூன்று பேர் சென்ற வழியிலேயே நாமும் செல்வோம்'' என்று அனைவரும் சேர்ந்து முடிவு செய்தோம்.

இந்தப் பயணத்தின்போது நாங்கள் அவ்வப்போது வழியில் சிறிது நேரம் தங்கி ஓய்வெடுத்துக் கொண்டோம். நாங்கள் சென்ற பாதையில் இரண்டு சிறிய புத்தர் கோயில்கள் இருந்தன.

மேல்மூச்சு கீழ்மூச்சு வாங்க நாங்கள் பல மலைகளைக் கடந்து சென்றோம். இவ்விதம் நாங்கள் எத்தனை மலைகள் ஏறி இறங்கினோம் என்று எங்களுக்குத் தெரியாது.

மாலை சுமார் 3.15 மணி இருக்கும்போது எங்களுக்குக் கயிலாயத்தின் மேற்பகுதியின் முதல் தரிசனம் கிடைத்தது. ஆதலால் நான் வழிகாட்டியிடம், ''இப்போதே 3.15 மணி ஆகிவிட்டது. எங்கள் குழுவினரைத் தார்ச்சன் விடுதிக்குத் திரும்பவும் அழைத்துச் சென்று சேர்ப்பதற்கு இரவு எவ்வளவு நேரம் ஆகுமோ தெரியவில்லை. பகலிலேயே மிகவும் சிரமப்பட்டு தான் இந்த மலைகளில் ஏறி வந்திருக்கிறோம். 'திரும்பும்போது இரவாகிவிடும்!' என்று எங்களுக்கு முன்பே நீங்கள் யாரும் சொல்லாததால், எங்கள் குழுவினர் யாரும் கையில் டார்ச் எடுத்து வரவில்லை. பகலிலேயே ஆங்காங்கு வரும் கால்வாய் நீரில் பூட்ஸ் நினையாமல் இருப்பதற்கு நாங்கள் மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டியிருந்தது. வழுக்கல் நிறைந்த பாதைகளில் இது வரையில் எப்படியோ தட்டுத்தடுமாறி வந்திருக்கிறோம். மலையின் ஏற்றம் எங்கள் எல்லோருக்குமே மூச்சுத் திணறலை ஏற்படுத்தியிருக்கிறது. 'திரும்பும்போது இருட்டில் எப்படி

போகப் போகிறோம்!' என்று நினைத்தால் இப்போதே எங்களுக்கு மிகவும் அச்சமாக இருக்கிறது. ஆதலால் கயிலாயத்தின் இந்தத் தரிசனமே எங்களுக்குப் போதும். இனி நாம் இங்கிருந்து திரும்பிப் போய்விடலாம்'' என்று கூறினேன்.

அதற்கு எங்கள் வழிகாட்டி, ''இங்கிருந்து பார்த்தால் நமக்குக் கயிலாயத்தின் மேல்பகுதி மட்டும்தான் தெரிகிறது. இந்த மலையிலிருந்து இன்னும் சிறிது தூரம் கீழே இறங்கிச் சென்று பார்த்தால் — கயிலாயத்தின் அடிப்பகுதியிலிருந்து உச்சி வரையில் — கயிலாயம் முழுவதையுமே விஸ்வரூபமாகப் பார்க்கலாம்'' என்று தெரிவித்தார். என்றாலும் நான், ''இப்போதே நாங்கள் தார்ச்சன் விடுதியை விட்டுக் கிளம்பி சுமார் ஆறு மணி நேரம் ஆகிவிட்டது. இந்த ரீதியில் சென்றால் நாம் இன்றிரவு தார்ச்சன் விடுதிக்கு எப்போது போய்ச் சேர்வது? இப்போதே குளிரடிக்க ஆரம்பித்திருக்கிறது. 'மாலையில் நேரம் ஆக ஆக இந்தப் பகுதியில் தாங்க முடியாத அளவிற்குக் குளிர்காற்று அதிகமாக அடிக்க ஆரம்பித்துவிடும்' என்று பலரும் சொல்லக் கேள்விப் பட்டிருக்கிறேன். அப்படி குளிரடிக்க ஆரம்பித்தால் எங்கள் நிலை என்ன ஆவது? 'இப்படிப்பட்ட வழிகளில்தான் நீங்கள் அஷ்டபத்திற்குச் செல்ல வேண்டியிருக்கும்; அதற்கு இவ்வளவு நேரமாகும்; இத்தகைய ஆபத்துக்கள் நிறைந்த பாதை வழியாகத்தான் நீங்கள் போக வேண்டியிருக்கும்' என்பதையெல்லாம் நீங்கள் ஏன் முன்பே எங்களுக்குச் சொல்லவில்லை?

''இந்தப் பிரயாணத்தின்போது எங்களில் பலரும் சோர்வின் உச்சிக்கே, களைப்பின் எல்லைக்கே சென்றிருக்கிறோம். எல்லோருமே மூக்கு - வாய் ஆகிய இரண்டின் மூலமாகவும் சிரமப்பட்டு மூச்சுவிட்டுக் கொண்டு வந்து கொண்டிருக்கிறோம்'' என்று வழி காட்டியிடம் கூறினேன்.

அதற்கு அந்த வழிகாட்டி, ''தார்ச்சன் விடுதி யிலிருந்து சுமார் மூன்று மணி நேரத்திற்குள் குறுக்கு வழியில், அஷ்டபத்திற்குச் செல்ல முடியும். அப்படி அழைத்துச் செல்ல வேண்டும் என்றுதான் எங்கள் திட்டம் இருந்தது. ஆனால் உங்கள் குழுவைச் சேர்ந்த சிலர் எங்களிடம் யோசனை கேட்காமல் தாங்களாகவே, தவறான பாதையில் முன்னதாகவே விரைந்து போய் விட்டார்கள். அவர்களைத் தொடர்ந்து நீங்கள் அனை வரும்கூட அவர்கள் சென்ற அதே தவறான வழியைப் பின்பற்றி வந்தீர்கள். அதுவே இப்போது ஏற்பட் டிருக்கும் துன்பங்கள் அனைத்துக்கும் மூலகாரணம். போகட்டும், அஷ்டபத் பார்த்துவிட்டு திரும்பும்போது, நாம் இப்போது வந்த இந்தச் சுற்று வழியில் சுற்றி வளைத்து செல்ல வேண்டிய அவசியம் இல்லை. அஷ்டபத் தரிசனம் முடிந்தபிறகு சுலபமான வழியில் இரண்டரை மணி நேரத்திற்குள் உங்களைத் தார்ச்சன் விடுதிக்குக் கொண்டு போய்ச் சேர்க்க வேண்டியது என் பொறுப்பு'' என்று கூறினார். அவ்விதம் அவர் அப் போது கூறியது எனக்கு மிகவும் ஆறுதலாக இருந்தது. அதன் பிறகு பயணத்தைத் தொடர்ந்தோம்.

நாங்கள் சென்ற மலைச்சரிவுகளில் சில மிகவும் ஆபத்தானவை. ஒற்றையடிப் பாதை போன்ற மலையின் ஏற்றத்தில் சில இடங்களில் நாங்கள் செல்ல வேண்டியிருந்தது. மாலை மணி 3.30 இருந்த சமயத்தில் ஒற்றையடிப் பாதை உள்ள - அந்தப் பாதையும் சரியாக இல்லாத - சுமார் 50 அடி தூரத்தை நாங்கள் கடக்க வேண்டியிருந்தது. அந்த இடத்திற்கு என்னை வழி காட்டி தாங்கிப் பிடித்தபடி தன்னுடைய பாதுகாப்பில் அழைத்துச் சென்றார்.

அந்த இடத்திற்கு முதலில் வந்து சேர்ந்த எங்கள் குழுவைச் சேர்ந்த ஒருவர் மற்றவர்களை நோக்கி, "இந்த இடம் மிகவும் ஆபத்தானது. இங்கே வராதீர்கள்! இங்கே வராதீர்கள்!! இங்கே வராதீர்கள்!!! திரும்பிப் போய்விடுங்கள்! திரும்பிப் போய்விடுங்கள்" என்று சத்தம் போட்டு அலறினார். அந்தச் சமயத்தில் ஏற்கெனவே நாங்கள் ஆறு மணி நேரம் நடந்து வந்திருந்தோம்; இன்னும் அரை மணி நேரத்தில் அஷ்டபத் போய்ச் சேர்ந்துவிடுவோம் என்ற நிலை இருந்தது. 'சுமார் ஆறு மணி நேரம் நடந்து வந்துவிட்டு, இன்னும் அரைமணி நேரத்தில் அஷ்டபத்தைப் பார்க்காமல் திரும்பிச் செல்வதா?' என்ற கேள்வி, எங்கள் குழுவைச் சேர்ந்த ஒவ்வொருவர் உள்ளத்திலும் எழுந்தது. மேலும், வந்த வழியிலேயே திரும்பிச் சென்றாலும் தார்ச்சன் விடுதியைச் சென்றடைவதற்கு இரவு 12 மணி ஆகிவிடும். பகலிலேயே அந்த வழியில் வருவதற்கு நாங்கள் எங்கள் உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு படாத பாடுபட்டு வந்திருக்கிறோம். இந்த நிலையில்

கையில் டார்ச் கூட இல்லாமல் - இருட்டில் முன்பின் பழக்கமில்லாத வழி தெரியாத இடத்தில் - மலைச் சரிவுகளில் ஏறி இறங்க வேண்டும் என்ற நிலை, எங்கள் எல்லோரையும் அச்சுறுத்தியது.

இந்த நிலையில் நான் வழிகாட்டியிடம், ''நீ சென்று ஒவ்வொருவரையும் பாதுகாப்பாக இங்கு அழைத்துக்கொண்டு வந்துவிடு. அவ்விதம் எல்லோரும் இங்கு பாதுகாப்பாக வந்து சேர்ந்த பிறகு மேற்கொண்டு நாம் பயணத்தைத் தொடரலாம்'' என்று கூறினேன். அதன்படியே வழிகாட்டி மலைச்சரிவில் மேலே ஏறிச் சென்று, எங்கள் குழுவைச் சேர்ந்த ஒவ்வொருவரையும் தன் பாதுகாப்பில் நான் இருந்த இடத்திற்குக் கொண்டு வந்து சேர்த்தார்.

அன்றைய தினம் அப்படி எங்கள் வழிகாட்டி அந்த உதவியைச் செய்யாமல் இருந்திருந்தால், நான்கு அல்லது ஐந்து பேர் மலைச்சரிவில் உருண்டு விழுந்து இறந்துகூட போயிருப்பார்கள். எங்கள் குழுவைச் சேர்ந்தவர்கள் சிலர் ஆபத்து நிறைந்த அந்த இடத்தைக் கடந்து சென்றபோது நான், ''இவர்களைக் காப்பாற்றி அருள் புரியுங்கள்'' என்று ஸ்ரீராமகிருஷ்ணரிடம் பிரார்த்தனை செய்தபடியே கண்களை அப்படியே மூடிக்கொண்டேன். அன்று அனைவரும் உயிர் தப்பியது, பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர் திருவருளாலேயே நிகழ்ந்தது.

அதன் பிறகு 25 நிமிட பிரயாணத்திற்குப் பிறகு நாங்கள் அஷ்டபத் என்ற இடத்தைச்

சென்றடைந்தோம். கைலாஸ்பதியைச் சுமார் 80 கி.மீ. தூரத்தில் இருந்தும் கூட யாத்திரிகர்கள் தரிசிக்க முடியும். ஆனால் கைலாஸ்பதியை மிகவும் அருகிலிருந்து - கயிலையின் அடிவாரத்திலிருந்து உச்சி வரையில் - தரிசிக்கக் கூடிய முக்கியத்துவம் வாய்ந்த இடம் அஷ்டபத்தான். இந்த இடத்தில்தான் நாம் பார்க்கும் கயிலாயத்தின் மிகவும் சிறந்த புகைப்படங்கள் எடுக்கப் படுகின்றன.

அஷ்டபத்திலிருந்து யாத்திரிகர்கள் தரிசிக்கும் கயிலாயத் தரிசனத்திற்குத் 'தென்முக கயிலாய தரிசனம்' என்று பெயர். தெற்கு திசையை நோக்கி இருப்பதால் கயிலாயத்தின் இந்த வடிவம் 'தட்சிணாமூர்த்தி கோலம்' என்றும் அழைக்கப்படுகிறது. அங்கு எங்கள் குழுவைச் சேர்ந்தவர்கள் பலரும் கைலாஸ்பதியை சாஷ்டாங்கமாக விழுந்து வணங்கினோம்; அனைவரும் பிரார்த்தனை செய்தோம். சிலர் சிவஸ்துதிகள் கூறினார்கள்; சிலர் சைவத்திருமுறைகளிலிருந்து பதிகங்கள், சிவ புராணம் போன்றவற்றைக் கூறினார்கள்.

அங்கு கர்ப்பூர ஆரதி செய்து கைலாஸ்பதியை அனைவரும் வழிபட்டோம்.

எங்கள் குழுவைச் சேர்ந்த ஒருவர் தன் மருமகள் கொடுத்த இரண்டு பெரிய நோட்டுப் புத்தகங்களைத் தன்னுடன் எடுத்து வந்திருந்தார். அவற்றில் ஒரு நோட்டுப் புத்தகத்தில் திருவாசகம் முழுவதும் எழுதப்பட்டிருந்தது; இன்னொரு நோட்டுப் புத்தகம் முழுவதும் 'ஓம் நமசிவாய' என்ற மந்திரம்

எழுதப்பட்டிருந்தது. அந்த இரண்டு நோட்டுப் புத்தகங்களையும் அவர் அஷ்டபத்தில் கைலாஸ்பதியின் முன்னால் பிரித்து வைத்து, அவற்றின் காகிதம் காற்றில் பறக்காமல் இருப்பதற்காக அவற்றின் மீது சிறிய கற்களை வைத்தார். மேலும் அவர் அங்கு நந்தியும், 'சிவ சிவ' என்ற எழுத்துக்களும் கொண்ட ஒரு சிவப்பு நிற பரிவட்டத்தையும் பிரித்து வைத்து, அது காற்றில் பறந்துவிடாமல் இருக்கும் பொருட்டு அதன் மீது சில சிறிய கற்களையும் வைத்தார்.

ஜைன சமயத்தின் முதலாவது தீர்த்தங்கரரின் பெயர் ஆதிநாதர். இவருக்கு ரிஷபதேவர் என்றும் வேறு ஒரு பெயர் உண்டு. இவர் இந்த அஷ்டபத் என்ற இடத்தில்தான் ஒரு மகா சிவராத்திரி நாளில் முக்தி பெற்றார் என்று சொல்லப்படுகிறது. எனவே ஜைனர்கள் இந்த இடத்தை ஆன்மிகச் சிறப்பு வாய்ந்த இடமாகக் கருதுகிறார்கள்.

கைலாசத்தைத் தரிசிக்கும்போது, அதற்கு வலப்புறம் நந்தி பர்வதமும், இடப்புறம் மகா கால மலையும் தெரிகின்றன. மகா கால மலை 'சிவபெருமானின் கோட்டை' என்றும் கூறப்படுகிறது. நந்தி பர்வதத்தின் முகடு காளையின் தலைபோலவே அமைந்திருப்பது குறிப்பிடத் தக்கது.

நந்தி பர்வதத்திற்கு வலப்புறம் அஷ்டபர்வத மலை உள்ளது. இதில் பல குகைகள் இருப்பதாகவும், இன்றும் முனிவர்கள் பலர் இங்கு தவம் செய்து வருவதாகவும் கூறப்படுகிறது. கேட்டதைக் கொடுக்கும் கற்பக மரம்

இந்த மலையில்தான் உள்ளது என்றும், எனவே இங்கிருந்து யார் எதைப் பிரார்த்தித்தாலும் அது நிறைவேறுகிறது என்றும் கூறப்படுகிறது.

அஷ்டபர்வதத்திற்கு அருகில் உள்ள மலையை திபெத்தியர்கள் 'புத்தரின் அரியணை' என்று போற்று கிறார்கள்.

அஷ்டபத்தில் நாங்கள் சுமார் 40 நிமிடம் இருந்தோம்.

பிறகு அங்கிருந்து நாங்கள் புறப்பட்டு, உமாநதி யின் கரை ஓரமாக நடந்து, குறுக்கு வழியில் இரண்டு மணி நேரத்தில் தார்ச்சன் விடுதிக்குத் திரும்பினோம்.

தீர்த்தபுரி

தீர்த்தபுரி என்ற இடம் பஸ்மாசுரன் கதையுடன் தொடர்புடைய இடமாகும். சிவபெருமானை நோக்கி பஸ்மாசுரன் கடுந்தவம் புரிந்து, ''நான் யார் தலையில் கை வைத்தாலும் அவர்கள் எரிந்து சாம்பலாக வேண்டும்!'' என்று வரம் பெற்றான். திருமால் மோகினி அவதாரம் எடுத்து பஸ்மாசுரனை, அவன் தலைமீதே கை வைக்கும்படி செய்தார். அவ்விதம் செய்ததால் பஸ்மாசுரன் அங்கேயே எரிந்து சாம்பலா னான். இந்த நிகழ்ச்சி நடந்த இடம் தீர்த்தபுரி என்று சொல்லப்படுகிறது.

ஆணவத்தின், அகங்காரத்தின் அடையாளமாக பஸ்மாசுரன் விளங்குகிறான். பஸ்மாசுரனின் அழிவு அகங்காரத்தின் அழிவைக் குறிக்கும். ஆன்மிக

வாழ்க்கைக்கு முதல் எதிரியாக இருப்பது அகங்காரம். ''கைலாஸ் யாத்திரை செல்பவர்கள் அகங்காரத்தை விட்டுவிட வேண்டும்'' என்பதைத் தீர்த்தபுரி உணர்த்துகிறது. அதனால்தான், ''தீர்த்தபுரிக்குச் செல்லாமல் கைலாஸ் யாத்திரை முற்றுப் பெறாது'' என்று கூறப்படுகிறது.

4.6.98 வியாழக்கிழமை காலை சுமார் பத்து மணிக்கு நாங்கள் தார்ச்சன் விடுதியிலிருந்து தீர்த்த புரிக்கு ஜீப்புகளில் கிளம்பினோம். தார்ச்சன் முகாமிலிருந்து தீர்த்தபுரி சுமார் 70 கி.மீ. தூரத்தில் இருக்கிறது. காலை சுமார் பத்து மணிக்குத் தார்ச்சனிலிருந்து புறப்பட்ட நாங்கள், சுமார் பன்னிரெண்டு மணிக்குத் தீர்த்தபுரியை அடைந்தோம்.

தீர்த்தபுரி ஒரு சிறிய ஆற்றின் கரையில் அமைந்திருக்கிறது. நாங்கள் அங்கு சென்றபோது ஆற்றில் நீர் மிகவும் வேகமாக ஓடிக்கொண்டிருந்தது. அந்த ஆற்றின் கரையில் திபெத்தியர்கள் சிலர் சாஷ்டாங்கமாக வீழ்ந்து, தங்கள் மதச் சம்பிரதாயதின்படி நமஸ்காரப் பிரதட்சிணம் செய்தபடியே சென்றுகொண்டிருந்தார்கள்.

இப்படி கயிலை மலையைத்தான் திபெத்தியர்கள் வலம் வருவார்கள் என்று கேள்விப்பட்டிருந்தேன். ஆனால் அவர்கள் இப்படி தீர்த்தபுரியையும் நமஸ்காரப் பிரதட்சிணம் செய்து வலம் வந்தது எனக்குப் புதுமையாக இருந்தது. அவர்கள் அவ்விதம் தீர்த்தபுரியை வலம் வரும் காட்சியைப் பார்த்தபோது,

'திபெத்திய மொழியிலுள்ள புராணத்தில் தீர்த்த புரிக்கும் ஆன்மிக ரீதியில் மிகவும் பெரிய முக்கியத் துவம் இருக்க வேண்டும்!' என்று நான் நினைத்துக் கொண்டேன்.

திபெத்தியர்கள் சிலர், தீர்த்தபுரியில் ஓடிக்கொண் டிருந்த நதியின் கரையில் ஜபமாலைகளை உருட்டி ஜபம் செய்தபடியே சென்றுகொண்டிருந்தார்கள். இன்னும் சில திபெத்தியர்கள், தங்கள் கையில் சிறிய பிரார்த்தனைச் சக்கரத்தைச் சுழற்றி ஜபம் செய்தபடியே சென்றுகொண்டிருந்தார்கள்.

நாங்கள் சென்ற ஜீப்புகள் தீர்த்தபுரியை நெருங்கியபோதே, அங்கு சுற்றியிருந்த மலைகளில் சில பகுதிகள் சாம்பல் போன்று அல்லது விபூதி போன்று வெண்மையாக இருந்ததைப் பார்த்தோம். பஸ்மாசுரன் தீர்த்தபுரியில் எரிந்து சாம்பலானதால், அவன் எரிந்த சாம்பல், விபூதி போல் தீர்த்தபுரி மலைகளில் ஆங்காங்கே இருப்பதாக ஐதீகம்.

தீர்த்தபுரியை அடைந்ததும் அனைவரும் ஒரு குன்றின்மீது ஏறிச் செல்ல ஆரம்பித்தோம். நாங்கள் ஏறிச் சென்ற பாதை சற்று செங்குத்தாகவும், கற்கள் நிறைந்ததாகவும் இருந்தது. இப்படிப்பட்ட ஒரு பாதை வழியாக நாங்கள் செல்ல வேண்டியிருக்கும் என்று எங்களுக்கு முன்பே தெரியாது! தெரிந்திருந்தால் குன்றின்மீது ஏறுவதற்கு வசதியாக நாங்கள் எங் களுடைய கைத்தடிகளைத் தார்ச்சனிலிருந்து எடுத்துச் சென்றிருப்போம். கையில் கைத்தடி எடுத்துச்

செல்லாததால், குன்றின்மீது ஏறுவதற்கு எங்களில் பலரும் சிறிது சிரமப்பட்டோம்.

குன்றின் மீது ஒரு புத்தர் கோயில் இருக்கிறது. குன்றின் உச்சியில் இருக்கும் புத்தர் கோயிலுக்குச் சென்று எல்லோரும் வழிபட்டோம். அங்குள்ள லாமாக் களைச் சந்தித்து அவர்களுடன் பேசிக்கொண்டிருந் தோம். அவர்களுடன் இந்தியாவைச் சேர்ந்த பௌத்தத் துறவி ஒருவரும் இருந்தார். அவர் நன்கு கல்வி கற்றவர், நன்றாக ஆங்கிலம் பேசக் கூடியவர். அவர் இந்தியா விலிருந்து வந்து அங்கு தங்கி கடந்த ஆறு மாதமாக ஜபம், தியானம் செய்து வருகிறாராம். அவர் அங் கிருக்கும் லாமாக்கள் தரும் சத்துமாவை உட்கொண்டு அவர்களுடன் தங்கி ஆன்மிக சாதனையில் ஈடுபட் டிருக்கிறார். அங்கிருந்த லாமாக்களும் தீர்த்தபுரி தொடர்புடைய பஸ்மாசுரன் கதையை எங்களிடம் கூறினார்கள்.

அதன் பின்பு நாங்கள் வேறொரு பாதை வழியாகக் குன்றின் மேலிருந்து தரை மட்டத்திற்குக் கீழே இறங்கி வந்தோம். இந்தப் பாதை செங்குத்தாக இல்லாமல் ஒரு கார் கூட போக முடியும் என்பதுபோல் சற்று அகல மாக இருந்தது. எனவே, நாங்கள் குன்றிலிருந்து இறங்குவதில் ஒரு கஷ்டமும் இல்லாமல் சுலபமாகவே குன்றைவிட்டுச் சமதளத்திற்கு இறங்கினோம்.

குன்றின் அடிவாரத்திற்கு வந்ததும், அங்கு ஒரு பகுதியில் பாறையின் அடியில் ஒரு சிறிய வெந்நீர் ஊற்று இருந்தது. சீன வழிகாட்டி அந்த வெந்நீர் ஊற்று

இருந்த இடத்திற்கு எங்களை அழைத்துச் சென்று காட்டினார். எங்களில் பலரும் அந்த வெந்நீர் ஊற்று வரும் இடத்தில் கை வைத்துப் பார்த்தனர். அங்கு வந்துகொண்டிருந்த சூடான நீரைத் தங்கள் தலைகளில் தெளித்துக்கொண்டனர்.

தீர்த்தபுரியில் ஆறு பாய்ந்து செல்லும் இடத்தைச் சுற்றிலும் பல குன்றுகள் உள்ளன. இந்தக் குன்றுகளில் திபெத்தியர்கள் தங்கள் வழிபாட்டின் ஓர் அங்கமாகப் பல வண்ணத் துணிகளைப் பெரிய தோரணங்கள் போல் கட்டியிருந்தார்கள். இவ்விதம் தீர்த்தபுரியில் நிறைய தோரணங்கள் கட்டப்பட்டிருந்ததைப் பார்த்தோம். ஒரு குன்றையும், மற்றொரு குன்றையும் இணைத்தும்கூட நீளமான சில தோரணங்களைக் கட்டியிருந்தார்கள்.

தீர்த்தபுரியிலிருந்து எங்கள் ஜீப்புகள் புறப்பட்ட சுமார் பத்து நிமிடத்தில், "இங்குதான் வெந்நீர் ஊற்று இருக்கிறது.வண்டியை நிறுத்துங்கள்!" என்று அவசர அவசரமாக என்னுடன் இருந்த ஒருவர் கூறினார். அவர் அப்படி கூறிய இடத்தில் நீராவிபுகைமண்டலம் மாதிரி வேக வேகமாகக் கிளம்பி வந்து கொண்டிருந்தது. எங்கள் ஜீப் டிரைவர் வண்டியை நிறுத்தினார். அதைத் தொடர்ந்து வந்த மற்ற ஜீப்புகளும் நின்றன. நாங்கள் நீராவி வந்துகொண்டிருந்த இடத்தை அருகில் சென்று பார்த்தோம். "அங்கு அரிசி வைத்தால் வெந்துவிடும்" என்று சொல்லத்தக்க வகையில், தொட்டுப் பார்க்கவே முடியாது என்று சொல்லும் வகையில் அவ்வளவு

சூடான நீர் வந்து கொண்டிருந்தது! அதன் நீராவிதான் அங்கு புகைமண்டலம் போன்று குபு குபுவென்று வந்துகொண்டிருந்தது.

அதன்பிறகு தீர்த்தபுரியிலிருந்து புறப்பட்டோம். வழி முழுவதும் எங்களுக்குக் கயிலாயத்தின் காட்சி கிடைத்தபடியே இருந்தது. அப்போது கயிலாயத்தில் அங்கும் இங்கும் பனி சூழ்ந்திருந்தது. அது ஒரு கோட்டையின் மீது கைலாஸ் இருப்பது போல் தோன்றியது. தமிழ்நாட்டில் பல கோயில்களின் மதில் சுவற்றில் பட்டைப் பட்டையாக நீண்ட சுண்ணாம்புக் கோடும், காவி நிறக்கோடும் அடித்திருப்பதைப் பார்க்கலாம். அதுபோல் தீர்த்தபுரியிலிருந்து நாங்கள் திரும்பி வந்துகொண்டிருந்தபோது - கயிலையில் மிகவும் உயர்ந்த வானளாவிய மதில் சுவரில் வெள்ளைச் சுண்ணாம்புக்கோடுகளும், கருப்புக்கோடு களும் அமைந்த - கோயில்மீது கயிலாயத்தின் மேல் பகுதி தெரிவது போன்ற அரிய காட்சியைப் பார்த்தோம். இவற்றில் வெள்ளைக்கோடு என்பது பனி உறைந்திருந்ததாலும், கருப்புக்கோடு என்பது பனி இல்லாத கயிலாயத்தின் இயல்பான பாறையாலும் ஏற்பட்ட தோற்றமாகும்.

பின்னர் எங்கள் ஜீப் நாங்கள் தங்கியிருந்த தார்ச்சன் விடுதிக்கு வந்து சேர்ந்தது. மறுநாள் காலையில் நாங்கள் கைலாஸ் பரிக்ரமம் செய்ய ஆரம்பிப்பதாக இருந்தோம். அதன் பொருட்டு ஏற்கெனவே எங்களை அழைத்துச் செல்ல வேண்டிய திபெத்திய வழி

காட்டியையும் உதவியாளர்களையும் 'ரிசர்வ்' செய் திருந்தோம்.

இன்று தீர்த்தபுரி சென்று வந்ததைத் தொடர்ந்து அனைவரும் மிகவும் களைத்திருந்தோம். அதனால் ஒருநாள், அதாவது ஜூன் 5-ஆம் தேதி தார்ச்சனிலேயே தங்கி ஓய்வெடுத்துக்கொள்ள முடிவு செய்தோம். ஆனால் தேவையான போர்ட்டர்கள் கிடைக்காததால் 6–ஆம் தேதியும் பரிக்ரமாவை ஆரம்பிக்க முடியவில்லை. ஜூன் 7-ஆம் தேதி காலையில்தான் பரிக்ரமா மேற் கொள்ள முடியும் என்ற நிலை ஏற்பட்டது. எனவே இந்த நாட்களில் அருகிலுள்ள வேறு ஓரிரு இடங் களுக்குச் சென்று வர முடிவு செய்தோம்.

தேவர்களின் பள்ளத்தாக்கு

5.6.98 வெள்ளிக்கிழமை தார்ச்சன் விடுதியிலிருந்து 12 கி.மீ. தூரத்திலுள்ள தேவர்களின் பள்ளத் தாக்கு (Valley of Gods) என்ற இடத்திற்குச் சென்று பூஜையும் ஹோமமும் செய்வது என்று திட்டமிட் டிருந்தோம்.

அன்றைய தினம் என் காலில் சுளுக்குப் பிடித்திருந்ததால், நான் தார்ச்சன் விடுதியில் தங்கிவிட்டேன். எங்கள் குழுவினர் தேவர்களின் பள்ளத்தாக்கிற்குப் புறப்பட்டுச் சென்றார்கள். பூஜையும் ஹோமமும் முடிந்த பிறகு, பகல் சுமார் ஒரு மணிக்கு தார்ச்சன் விடுதிக்குத் திரும்பி வந்தார்கள். அன்றைய தினம் தேவர்களின் பள்ளத்தாக்கில் நடந்ததைப்பற்றி

சுருக்கமாக எங்கள் குழுவைச் சேர்ந்த ஒருவர் என்னிடம் பின்வருமாறு கூறினார்:

''நாங்கள் இங்கிருந்து ஜீப்பில் புறப்பட்ட அரை மணி நேரத்தில் தேவர்களின் பள்ளத்தாக்கைச் சென்றடைந்தோம். அங்கு ஓர் இடத்தில் மிகவும் உயரமான ஒரு கம்பம் நடப்பட்டிருந்தது. அதைச் சுற்றிலும் திபெத்தியர்களின் பிரார்த்தனை கொடிகள் தோரணம் போன்று பல நிறங்களில் கட்டப்பட்டிருந்தன. அங்கு சென்று கைலாஸ் பரிக்ரமா பாதையில் செல்பவர்கள் அனைவரும் வணங்கிவிட்டு சென்றார்கள். நாங்களும் அந்தக் கம்பத்தின் அருகில் சென்று வணங்கிவிட்டு வந்தோம்.

''அங்கு ஓர் இடத்தைத் தேர்ந்தெடுத்து அங்கே ஹோமம் செய்தோம். நாங்கள் ஹோமம் செய்துகொண்டிருந்தபோது அதைத் திபெத்தியர்கள் சிலரும், வெளி நாட்டுக்காரர்கள் சிலரும் ஆச்சரியமாகப் பார்த்தபடியே புகைப்படங்கள் எடுத்தார்கள்.

''நாங்கள் அங்கு சென்றபோது ஆகாயத்தில் மேக மூட்டம் இருந்துகொண்டிருந்தது. அதனால் கயிலை நாதனின் மேனி முழுவதையும் மேகம் மூடியிருந்தது. ஆனால் ஹோமம் செய்துகொண்டிருந்தபோது கயிலாயத்தில் மேகமூட்டம் விலகியது. அது கைலாஸ்பதி, பாதி கண்கள் மூடிய யோக நிலையிலிருந்து எங்களைப் பார்த்து ஆசீர்வதிப்பது போன்று இருந்தது. ஹோமம் முடிந்ததும் அங்கிருந்தவர்கள் அனைவருக்கும் வடை, பாயாசம், உலர்ந்த

பழங்கள், விபூதி பிரசாதம் போன்றவற்றை விநியோகித்தோம்.''

6.6.1998, சனிக்கிழமை. மறுநாள் எங்கள் கைலாஸ் பரிக்ரமாவிற்கான சில ஏற்பாடுகளை நாங்கள் செய்து கொண்டோம்.

பொதுவாக கைலாஸ் யாத்திரை வருபவர்களில் பலர் வாடகைக்கு யாக் (காட்டெருமை) வைத்துக் கொண்டு பரிக்ரமா செய்வது வழக்கம். ஆனால் விதி விலக்காக இந்த ஆண்டு இங்கு குளிர் வழக்கத்திற்கும் அதிகமாக இருந்தது. அதனால் இந்த ஆண்டு சில யாக்குகள் குளிர் - பனி காரணமாக இறந்தும் விட்டன. அவ்விதம் இறந்து போன யாக்குகளைச் சமீபத்தில் தொலைக்காட்சியிலும் காட்டினார்கள். இந்த ஆண்டு யாக் வைத்திருப்பவர்கள், 'யாக்கிற்கு ஏதாவது அடிபட்டால் அல்லது உயிர்சேதம் ஏற்பட்டால் யாக்கின் முழுத் தொகையையும் சம்பந்தப்பட்ட யாத்திரிகர் கொடுக்க வேண்டும்' என்று யாத்திரிகர்கள் அக்ரிமெண்ட் போட்டுக்கொள்ளச் சம்மதித்தால், யாக் உரிமையாளர்கள் யாத்திரிகர்களுக்கு யாக்கை வாடகைக்குக் கொடுப்பார்கள் என்று நாங்கள் கேள்விப்பட்டோம்.

இந்திய அரசு மூலம் கைலாஸ் யாத்திரை செல்பவர்கள் நான்கு பக்கங்கள் கொண்ட Indeminity Bond எழுதித் தர வேண்டும். மறுநாள் நாங்கள் கைலாஸ் பரிக்ரமம் செய்ய இருந்ததால், எங்கள் குழுவினர் ஒவ்வொருவரிடமும் Indeminity Bond போன்ற ஒன்றை எழுதி வாங்கிக்கொள்வது எதற்கும் பாதுகாப்பானது

என்று எனக்குத்தோன்றியது. அதற்கேற்ப எங்கள் குழுவைச் சேர்ந்த ஒவ்வொருவரும் அவரவர்களின் பெயர், ஊர் போன்ற விவரங்களுக்கு ஏற்ப பின்வருமாறு எழுதிக் கொடுத்தனர்:

''இன்னாரின் மகனாகிய இன்னார் என்ற பெயருடைய, இன்ன முகவரியில் இருக்கும் நான், இப்போது என்னுடைய சொந்த விருப்பத்தின் பெயரில் கைலாஸ் யாத்திரை வந்திருக்கிறேன். யாருடைய கட்டாயத்தின் பேரிலும் இல்லாமல் என்னுடைய சொந்த விருப்பத்தின் பேரில் 1998 ஜுன் 7,8,9 ஆகிய தேதிகளில் கைலாஸ் பரிக்ரமம் மேற்கொள்ள இருக்கிறேன். இந்தப் பரிக்ரமாவின்போது எனது உயிருக்கோ, உடலுக்கோ, உடைமைகளுக்கோ ஏதேனும் ஆபத்து ஏற்படுமானால் அதற்கு யாரும் பொறுப்பல்ல என்பதை என் சுயநினைவுடன் இந்த Indeminity Bond மூலம் எழுதிக் கொடுக்கிறேன்.''

கைலாஸ் பரிக்ரமம்: முதல் நாள்

கைலாஸ் பரிக்ரமம் (கிரி பிரதட்சிணம், கிரி வலம்) என்பது மூன்று நாட்கள் கொண்டது. இந்த மூன்று நாட்களில் திரபுக், டோல்மா பாஸ், ஜுதுல்புக் ஆகிய மூன்று இடங்களையும் யாத்திரிகர்கள் நடந்து செல்ல வேண்டும். இந்த இடங்களில் ஜீப், லாரி போன்ற வண்டிகள் எதுவும் செல்வதற்கு ரோடு வசதி கிடையாது. எனவே இந்த மூன்று நாட்களுக்கு யாத்திரிகர்கள் தங்களுக்குத் தேவையான எல்லாச் சாமான்களையும் யாக் எருமைகளின் மூலமும், போர்ட்டர்கள்

மூலமும்தான் எடுத்துச் செல்ல வேண்டும். இந்த ஆண்டு இப்போது எங்களுக்கு யாக்குகள் கிடைக்காததால், மூன்று நாள் பரிக்ரமாவிற்கு எங்களுக்குத் தேவையான எல்லாச் சாமான்களையும் நாங்கள் போர்டர்களின் உதவியோடு எடுத்துச் சென்றோம். இந்தப் பரிக்ரமாவின் போது எங்கள் சாமான்களையும், சமையல் சாமான் களையும் தூக்கிச் செல்வதற்காக 15 போட்டர்கள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தனர்.

7.6.98. ஞாயிற்றுக்கிழமை. இன்று நாங்கள் கைலாஸ் பரிக்ரமம் செய்ய ஆரம்பித்த முக்கியத்துவம் வாய்ந்த நாளாகும். இந்தப் பரிக்ரமா பாதையில் தேவர்களின் பள்ளத்தாக்கு வரையில் ஜீப் செல்வதற்குக் கரடு முரடான பாதை இருக்கிறது. அதற்கு மேல் ஜீப் செல்வதற்குப் பாதை கிடையாது. நாங்கள் தேவர்களின் பள்ளத்தாக்கு வரையில் ஜீப்பில் சென்று, அங்கிருந்து நடந்து பரிக்ரமா செல்ல திட்டமிட்டிருந்தோம். ஆனால் எங்கள் குழுவினர் சிலர் தார்ச்சனிலிருந்து தேவர்களின் பள்ளத்தாக்கு வரையில் நடந்தே வந்தார்கள்.

காலை பதினொரு மணிக்குத் தேவர்களின் பள்ளத் தாக்கிற்குப் போய்ச் சேர்ந்தோம். இந்த இடத்தில்தான் இரண்டு நாட்களுக்கு முன்பு எங்கள் குழுவினர் ஹோமம் செய்திருந்தார்கள். அங்கிருந்து பார்த்தால் கைலாஸ்பதியின் கம்பீரமான காட்சி கிடைக்கிறது.

அங்கு கயிலைமலையின் ஓர் இடத்தில் மண் சரிந்து லேசாக விழுந்து கொண்டிருந்தது. அவ்விதம் மண் சரிந்து குவிந்திருக்கும் இந்த இடத்தை, ஜைனர்கள்

ஆன்மிக முக்கியத்துவம் வாய்ந்த இடமாகக் கருது கிறார்கள். அங்கு அவர்கள் சுமார் 35 அடி உயரத்திற்கு மண் சரிந்து குவிந்திருக்கும் இடத்திலிருந்து, பிரசாதம் போன்று சிறிது மண்ணைப் பக்தி சிரத்தையுடன் தங்கள் ஊருக்கு எடுத்துச் செல்கிறார்கள்.

இந்தத் தேவர்களின் பள்ளத்தாக்கில்தான் திபெத்தி யர்கள் ஒன்றுகூடி, தங்களின் முக்கியமான மத விழாக் களைக் கொண்டாடுவது வழக்கம். நாங்கள் சென்ற போது இந்தப் பள்ளத்தாக்கில் சற்று தூரத்தில், ஆங் காங்கே வெளிநாட்டவர்கள் சிலர் கூடாரங்கள் அமைத்து தங்கியிருந்தனர்.

தேவர்களின் பள்ளத்தாக்கில் நாங்கள் சுமார் அரை மணி நேரம் இருந்தோம். தேவர்களின் பள்ளத்தாக்கு உள்ள இடத்தில் ஒரு சிறிய கட்டிடம் இருக்கிறது. இந்தக் கட்டிடத்திற்கு 'யம த்வார்' என்று பெயர். அதாவது 'யமனின் நுழைவாயில்' என்பது இதன் பொருள். இந்த இடத்தில் திபெத்தியர்கள் தங்களின் உடைகள், கையுறைகள் (glores), கால் உறைகள், தொப்பி, செருப்பு, பூட்ஸ் போன்றவற்றை விட்டுச் செல்கிறார்கள். இவ்விதம் செய்வதற்கு, 'எங்கள் ஸ்தூல உடலை இங்கேயே விட்டுவிட்டோம். இனி நாங்கள் புதிய மனிதர்களாக உயர்ந்த ஆன்மிக வாழ்க்கை வாழ்வோம்' என்பது உட்பொருள். 'இந்த யமத்வாரில் நுழைந்து சென்று கைலாஸ் பரிக்ரமம் செய்பவர்களுக்கு யமனால் மரண பயம் ஏற்படாது' என்றும் ஒரு கருத்து நிலவுகிறது.

இந்த இடத்தில் அன்றைய தினம் பரிக்ரமா செய்வதற்காக வந்த வெளிநாட்டவர்கள் சிலரையும் சந்தித்துப் பேசினோம்.

நாங்கள் இங்கிருந்து கைலாஸ் பரிக்ரமாவை ஆரம்பிப்பதற்கு முன்பு, கர்ப்பூரம் ஏற்றி எங்களுக்கு எதிரில் தரிசனம் தந்துகொண்டிருந்த கயிலைநாதனை வழிபட்டோம். ''ஜெய்ஸ்ரீ குருமகராஜ் ஜீ கீ ஜெய், ஜெய்ஸ்ரீ மகாமாயி கீ ஜெய், ஜெய்ஸ்ரீ சுவாமிஜி மகராஜ் ஜீ கீ ஜெய், ஜெய்ஸ்ரீ கைலாஸ்நாத் பகவான் கீ ஜெய்'' என்று நாங்கள் எல்லோரும் சேர்ந்து முழக்கம் செய்துவிட்டு, பின்னர் அங்கிருந்து பரிக்ரமா புறப்படுவதற்குத் தயாரானோம்.

எங்கள் வழிகாட்டி குழுவினர் ஒவ்வொருவருக்கும், பரிக்ரமாவின்போது ஊன்றி நடந்து செல்வதற்காக ஆளுக்கொரு கைத்தடி (walking stick) கொடுத்தார். நாங்கள் யம த்வாரின் ஒரு பக்கம் நுழைந்து அதன் மறுபக்கம் வெளியே வந்து, முதல் நாள் பரிக்ரமாவை ஆரம்பித்தோம். அப்போது காலை மணி 11.30.

நாங்கள் நடக்கத் துவங்கிய பத்து, பதினைந்து நிமிடங்களுக்குள் ஆற்றின் குறுக்கே சிறிய ஒரு பாலம் இருந்த இடத்தை அடைந்தோம். அதன் வழியாக ஆற்றைக் கடந்து, நதியின் இடப்புறம் எங்கள் பயணத்தைத் தொடர்ந்தோம். திபெத்திய லாமாக்கள் சிலர் நதியின் வலக் கரையில் சாஷ்டாங்க நமஸ்காரம் முறையில் பரிக்ரமா செய்தகொண்டிருந்தார்கள்.

அவர்களைத் தவிர வேறு சில திபெத்தியர்களும் ஆற்றின் வலக் கரையில் கயிலாயத்தையொட்டி நடந்து பரிக்ரமா செய்துகொண்டிருந்தார்கள்.

நாங்கள் பரிக்ரமா சென்ற பாதையில் கைலாஸ்பதி யின் தரிசனம் தொடர்ந்து எங்களுக்குக் கிடைத்தபடியே இருந்தது. வழி முழுவதும் கயிலைமலையில் எங்களுக்குக் கிடைத்த காட்சிகளுக்கு ஒரு கணக்கே இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். அப்போது கயிலைநாதனை நினைத்து, ''கைலாஸ்பதி! இந்தப் பரிக்ரமா சமயத்தில் கயிலாயத்தில் நான் காணும் இந்தக் காட்சிகளெல்லாம் என் மனதில் நன்றாகப் பதியும்படி அருள் புரியுங்கள்'' என்று அடிக்கடி பிரார்த்தனை செய்தேன்.

நாங்கள் பரிக்ரமா சென்ற நாள் முழுவதும் நல்ல வெயில் இருந்தது.

கயிலாயத்தின் மேற்குமுக தரிசனமும் எங் களுக்குக் கிடைத்தது.

பரிக்ரமாவின்போது கயிலாயத்தின் சில இடங் களில் பெரிய அரண்மனைக்குள் கைலாஸ்பதி வீற்றிருப்பது போன்ற தோற்றம் காணப்பட்டது. வேறு சில இடங்களில், கோயில்களில் ஆயிரங்கால் மண்டபங்கள் இருப்பது போன்ற காட்சிகள் தென் பட்டன. பரிக்ரமா முழுவதும் பிரம்மாண்டமான பெரிய பெரிய கோட்டைக் கொத்தளங்கள் போன்ற காட்சிகள் கயிலாயத்தில் எங்களுக்குக் கிடைத்தபடியே இருந்தன. அவை எத்தனை என்று எங்களால் சொல்ல

முடியாது; எண்ணற்றவை என்று மட்டும்தான் சொல்ல முடியும்.

சுவாமி சித்பவானந்தர் தமது 'திருக்கயிலாயகிரி யாத்திரை' என்ற நூலில், கயிலாயத்தின் அமைப்பைப் பற்றி பின்வருமாறு கூறியுள்ளார்:

''மனிதனால் கட்டப்பட்ட கோயில் எதுவும் கயிலாயத்தில் இல்லை. ஆனால் கோயில்களுக் கெல்லாம் மாதிரியாக கயிலாயம் இயற்கையாகவே அமைந்திருக்கிறது. சில பாகங்களில் அது வெறும் சுவராகவும், வேறு சில இடங்களில் சித்திரங்களும் உருவங்களும் அமைக்கப்பெற்றது போலும் காணப் படுகிறது. மூடப்பட்ட வாயில் போன்றவைகளும் ஆங்காங்கு தென்படுகின்றன. பிராகாரத்தின் மீது ஒரு பெரிய மேடை; அதன் சுவர் ஐந்நூறு அடி முதல் ஆயிரம் அடி வரையில் ஒரே செங்குத்தாக இருப்பதால் அந்த மேடைக்கு யாரும் போக முடியாது. அந்த மேடையின்மீது நூற்றுக்கணக்கான சிறு மலைகள் கோபுரங்கள் போன்று அமைந்திருக்கின்றன. அவை களில் சித்திர வேலைப்பாடுடையவை, சாதாரணமாக இருப்பவை, சதுரமாக இருப்பவை, வட்டமாக இருப் பவை, முட்டை போன்று இருப்பவை, முக்கோண முடையவை, தூண் போன்றவை, ஒடுங்கிய நுனியை உடையவை, இன்னும் பல விதமான வடிவங்களை உடையவைகள் பல இருக்கின்றன. அவைகளின் நிறங் களும் பல வகைப்படும். இந்தியாவில் தென்முனை யிலிருந்து இமயம் வரையில் எத்தனை விதமான

கோபுரங்கள் இருக்கின்றனவோ, அத்தனைக்கும் மாதிரிகள் கயிலையில் இருக்கின்றன. இன்னும் புதிதாக எதாவது கட்ட வேண்டுமென்றாலும் அதற்கும் மாதிரி அங்கே கிடைக்கும். அண்டநாயகனின் அரண்மனை போன்றது கயிலை. அதற்கு அகழி, பிராகாரம், கோட்டை, கொத்தளம், கோபுரம், கூடம், மாடம், கொலுமண்டபம், அந்தப்புரம் ஆகிய மாட்சிகள் அனைத்தும் ஒருங்கே அமைந்திருக்கின்றன.

''தென்புறம் தவிர மற்ற மூன்று பக்கங்களிலும் அணி அணியாக மலைகள் இருக்கின்றன. ஆனால் அவைகள் வெறும் மலை போன்று தென்படுவதில்லை. விசுவேசுவரன் வீற்றிருக்கும் கொலுமண்டபத்திற்கு அருகில் அவனுடைய கணங்கள், சிப்பந்திகள் முதலானவர்கள் வசிப்பதற்கான குடியிருப்புகளாக அவைகள் விளங்குகின்றன. முக்கியத்துவம் வாய்ந்த அமைச்சர்கள் முதல் சாதாரண வேலைக்காரர்கள் வரை பல படித்தரங்களில் இருக்கும் இலட்சக் கணக்கான பேர்களுக்கு என்னென்ன விதமான மாளிகைகள், உப்பரிகைகள், சாதாரண வீடுகள் தேவையோ அவை அனைத்தும் அங்கு இருக்கின்றன. தேவலோகத்துக்கேற்ற ஓர் ஒப்பற்ற நகரம் போன்று அவைகள் காட்சிக் கொடுக்கின்றன.''

இவ்விதம் சுவாமி சித்பவானந்தர் கூறியது முற்றிலும் உண்மை என்பதை, கைலாஸ் பரிக்ரமா சமயத்தில் எங்களுக்குக் கிடைத்த காட்சிகள் உறுதிப் படுத்தின.

இந்த முதல் நாள் பரிக்ரமாவின்போது வலப் பக்கம் இருந்த கயிலை மலையிலிருந்து சுமார் இருபது இடங்களில் சிறிய, பெரிய நீர்வீழ்ச்சிகள் விழுந்து கொண்டிருந்தைப் பார்த்தோம். அந்த அருவிகளின் காட்சிகள் சிவனின் திருமுடியிலிருந்து கங்கை வந்துகொண்டிருப்பதுபோல் தோன்றியது.

கயிலாயத்திற்கும் நாங்கள் பரிக்ரமா சென்ற பாதைக்கும் நடுவில் ஒரு சிறிய ஆறு ஓடிக்கொண் டிருந்தது. நாங்கள் சென்ற பாதையின் இடப் பக்கம் இருந்த மலைகளிலிருந்தும்கூட, ஆங்காங்கே சில இடங்களில் நீர்வீழ்ச்சிகள் விழுந்து கொண்டிருந்தன. அவை நாங்கள் சென்ற பாதைக்கும், கயிலைக்கும் நடுவில் இருந்த ஆற்றில் சென்று கலந்தபடி இருந்தன.

நாங்கள் பரிக்ரமா புறப்பட்டபோது எங்களுக்குக் கயிலையின் மேற்குபுற தரிசனம் கிடைத்தது. அது சில கிலோ மீட்டர் தூரம் வரையில் எங்களுக்குத் தெரிந்து கொண்டிருந்தது.

பகலுணவு சாப்பிடும் நேரத்தில் ஓர் இடத்தில் நாங்கள் அனைவரும் தங்கி உலர்ந்த பழங்கள், பிஸ்கெட் போன்றவற்றை உட்கொண்டோம்.

இந்தப் பரிக்ரமாவின்போது நமது சிதம்பரம் கோயிலின் மேல் விதானம் போன்று இருந்த கயிலாயத் தின் ஒரு பகுதியைப் பார்த்தோம். இதுவே இந்தப் பரிக்ரமாவில் நாங்கள் பெற்ற முதல் முக்கியத்துவம் வாய்ந்த காட்சியாகும். இந்தச் சிதம்பரம் கோயிலின் மேல் விதானக்காட்சி - கைலாஸ் பரிக்ரமா செய்யும்

எல்லோருக்குமே கிடைக்கிறது. காரணம், வடமேற்கு திசையில் கயிலைமலையே அவ்விதம்தான் அமைந்துள்ளது.

எங்கள் பயணம் தொடர்ந்தபோது ஓர் இடத்தில் கயிலையின் வடமேற்கு தரிசனமும், வடக்கு தரிசனமும் ஒன்றாகக் கிடைத்தது. மாலை நெருங்கியபோது ஆற்றில் ஆங்காங்கே பனிப் பாறைகள் தெரிய ஆரம்பித்தன.

அன்றிரவு சுமார் 7.30 மணிக்கு நாங்கள் அனைவரும் திரபுக் என்ற இடத்திலுள்ள முகாமிற்குப் போய்ச் சேர்ந்தோம். 'புக்' என்ற திபெத்திய சொல்லுக்கு 'குகை' என்று பொருள்.

கைலாஸ் - மானசரோவர் யாத்திரை செல்பவர்கள் தங்கும் விடுதிகளில் மின்சார விளக்கு வசதி அறவே கிடையாது.[1] ஆதலால் நாங்கள் சென்னையிலிருந்து எங்களுடன் Portable Generator எடுத்துச் சென்றிருந்தோம். அதனால் நாங்கள் தங்கிய எல்லா முகாம்களிலும் ஜெனரேட்டர் மூலம் மின்சார விளக்கிற்கு ஏற்பாடு செய்து கொண்டோம். எனவே மானசரோவரிலும் கயிலாயத்தின் ஒரு பகுதியான தார்ச்சனிலும் இரவில் எங்களுக்கு மின்விளக்கு பிரச்சனை இல்லாமல் இருந்தது. அதிக பளுவைச் சுமந்து செல்ல இயலாது என்பதால், எங்களோடு ஜெனரேட்டரை எடுத்துச் செல்லாமல் தார்ச்சனிலேயே விட்டுச் சென்றோம். எனவே அன்றிரவு நாங்கள் தங்கிய திரபுக் முகாமில்

---


1. தற்போது (2002) ஜெனரேட்டர்மூலமாக தினமும் சில மணி நேரம் மின்சார விளக்கு வசதி தரப்படுகிறது.




முதல் நாள் கைலாஸ் பரிக்ரமத்தின்போது திருக்கயிலாயக் காட்சி



முதல் நாள் பரிக்ரமப் பாதை




2-ஆம் நாள் பரிக்ரமத்தில்
மிகக் கடினமான ஏற்றம்
'டோல்மா பாஸ்'



3-ஆம் பரிக்ரமப் பாதை:
ஒரு காட்சி



திருக் கயிலாயம்
(மேற்கு முகம்)




திருக் கயிலாயம்
(வடக்கு முகம்)



மகாகால பர்வதம் மற்றும் நந்திபர்வதங்களுக்கிடையில் திருக்கயிலாயக் காட்சி (தெற்கு முகம்)
(அஷ்டபத்திலிருந்து)



குர்லா மாந்தாதா மலையின் பின்னணியில் மானசரோவர்



'காவாய் கனகத் திரளே போற்றி, கயிலை மலையானே போற்றி போற்றி'

பொதுவாக வெண்ணிறமாகத் தெரிகின்ற திருக் கயிலாயம்
உதய வேளையில் பொன் மலையாய்ப் பொலியும் காட்சி

எங்களுக்கு மின்விளக்குகள் இல்லை. மெழுகுவர்த்தி களை ஏற்றி வைத்தும், டார்ச் உபயோகித்தும் அன்றைய இரவைச் சிறிது சிரமத்துடன் கழித்தோம். திரபுக் முகாமில் நாங்கள் மின்விளக்கு இல்லாமல் இருந்தது, மற்ற கைலாஸ் யாத்திரிகர்கள் மின்விளக்கு இல்லாமல் எவ்வளவு சிரமப்படுவார்கள் என்பதை ஒருவாறு எங்களுக்கு உணர்த்தியது.

திரபுக் முகாமில் 7-ஆம் தேதி இரவு தங்கிவிட்டு, மறுநாள் 8-ஆம் தேதி காலையில் இரண்டாம் நாள் பரிக்ரமாவைத் தொடர்வது என்று நாங்கள் முடிவு செய்திருந்தோம். ஆனால் 7-ஆம் தேதி முதல் நாள் பரிக்ரமாவின்போது நடந்து வந்தது, எங்கள் குழுவினர் அனைவரையும் மிகவும் களைப்படையச் செய் திருந்தது. அதனால், 'மறுநாள் 8-ஆம் தேதி திரபுக் முகாமிலேயே தங்கி ஓய்வெடுத்துக்கொள்வது' என்று நாங்கள் அங்கு சென்ற இரவே முடிவு செய்தோம். மறுநாள் டோல்மாபாஸ் என்ற இடத்தில் நாங்கள் செய்ய இருந்த ஹோமம் முதலான வற்றை, திரபுக்கில் மறுநாள் காலையில் கைலாஸ்பதி யின் லிங்க தரிசனத்திற்கு எதிரில் செய்வது என்றும் முடிவாயிற்று.

திரபுக் கடல் மட்டத்திலிருந்து 19,000 அடி உயரத் தில் இருக்கிறது. திரபுக்கில் நாங்கள் தங்கிய விடுதி, கயிலாயத்தை நேராக நன்றாகத் தரிசிக்கும் வகை யில் கயிலாயத்திற்கு எதிரிலேயே அமைந்திருந்தது. திரபுக்கில் யாத்திரிகர்கள் தங்குவதற்கு இந்த ஒரே ஒரு

விடுதிதான் இருக்கிறது. ஆதலால் இதற்கு முன்பு கைலாஸ் சென்றவர்கள் எல்லோரும் இந்த விடுதியில்தான் தங்கியிருக்கிறார்கள். இந்த விடுதியில் அதிக பட்சம் இருபது பேர்தான் தங்க முடியும்.

திரபுக் விடுதியிலிருந்து பார்த்தால் கயிலாயத்தின் வடக்கு முக தரிசனம் கிடைக்கிறது. இங்கிருந்து கயிலாயத்தைத் தரிசிப்பது 'லிங்க தரிசனம்' என்ற சிறப்புப் பெயரால் அழைக்கப்படுகிறது. இந்த இடத்தைத்தான் ராவணன் பெயர்த்தெடுக்க விரும்பினான்; அவன் பெயர்த்தெடுக்க முயற்சி செய்தபோது சிவபெருமான் தன் கால் பெருவிரலை ஊன்றியதால், ராவணன் மலையின் அடியில் சிக்கிக் கதறினான். பின்னர் நாரதரின் யோசனையின் பேரில், தனது ஒரு தலையைக் கிள்ளி அதையே யாழாகப் பயன்படுத்தி சாமகானம் பாடினான். அதனால் மகிழ்ந்த சிவபெருமான் மலையின் அடியில் சிக்கித் துன்பப்பட்டுக் கொண்டிருந்த ராவணனை அந்தத் துன்பத்திலிருந்து விடுவித்தார் என்பது புராண வரலாறு.

திரபுக் எதிரில் கயிலாயத்தின் லிங்க தரிசனம் காணப்படும் இடத்துக்கு அருகில், ராவணன் தன் தடியை ஊன்றிய இடம் என்ற பொருளில் 'ராவணன் தடி' என்று சொல்லப்படும் ஒரு பாறையும் இருக்கிறது என்று கேள்விப்பட்டேன். கயிலையின் இந்த லிங்க தரிசனத்திற்கு முன்னால் இரண்டு மலைகள் இருக்கின்றன. இவை 'துவார பாலக மலைகள்' என்று அழைக்கப்படுகின்றன.

நாங்கள் திரபுக் முகாமில் இன்று ஒரு நாளைக் கழித்தது, உண்மையில் எங்களுக்கு ஒரு பெரும் வரப்பிரசாதமாகவே அமைந்தது. நான் தங்கியிருந்த அறையிலிருந்து வெளியே வந்து நாற்காலியில் அமர்ந்து, கயிலையின் லிங்க தரிசனத்தை நீண்ட நேரம் பார்த்துக்கொண்டிருந்தேன்.

நாங்கள் தங்கியிருந்த விடுதிக்கும், கயிலைநாத னின் லிங்க தரிசனத்திற்கும் இடையில் உள்ள சிறிய ஆற்றங்கரையில் ஒரு ஹோம குண்டம் அமைத்து ஹோமம் செய்தோம். காலை 11 மணிக்கு ஆரம்பித்த இந்த ஹோமம் பகல் 12.30 மணி வரையில் நடை பெற்றது. எங்கள் சக யாத்திரிகர்களைத் தவிர ஆண் களும் பெண்களுமாக சுமார் 35 திபெத்தியர்களும் இந்த ஹோமத்தில் கலந்துகொண்டார்கள். சக யாத்திரிகர்கள் அனைவரும் கொண்டு வந்திருந்த சுமார் மூன்று கிலோ கர்ப்பூரம் ஹோம ஆஹுதியில் அர்ப்பணம் செய்யப் பட்டது. இந்த ஹோமத்தின் முடிவிலும் புனித சாம்பலை அங்கேயே விட்டுவிடாமல் பிரசாதமாகச் சேகரித்துக்கொண்டோம்.

அன்று பகல் ஒரு மணிக்கு எங்கள் குழுவினர் அனைவரும் சேர்ந்து ஒரு கலந்துரையாடல் நிகழ்த்தினோம். அதில், ''இரண்டாம் நாள் கைலாஸ் பரிக்ரமத்தில் எந்த இடத்திற்குச் செல்ல வேண்டும்? செல்லும் பாதை எப்படியிருக்கும்? மலையின் ஏற்ற இறக்கங்கள் பற்றி விவரம் - அதற்கு நாம் செய்ய வேண்டிய முன்னேற்பாடுகள் யாவை?'' என்பது பற்றி எல்லோரும் விரிவாக ஆராய்ந்தோம்.

''இந்த ஆண்டு - 12 ஆண்டுகளுக்குப் பிறகு - வழக்கத்திற்கும் மாறாக டோல்மா பாஸில் பனி மிகவும் அதிகமாக உறைந்திருக்கிறது. 'அங்கு, தரையோ பாறையோ இருப்பதுகூட கண்ணுக்குத் தெரிய வில்லை; எங்கே பார்த்தாலும் பனி உறைந்து மூடி யிருக்கிறது' என்று இரண்டு நாட்களுக்கு முன்பு பரிக்ரமா செய்து திரும்பியவர்கள் கூறியிருக்கிறார்கள். அதையேதான் இந்தப் பகுதியிலுள்ள உள்ளூர்வாசி களான திபெத்தியர்களும் கூறுகிறார்கள். இந்தப் பரிக்ரமாவின்போது மலையின் ஏற்றத்தில் கடுமையான குளிரில், சுமார் 10 கி.மீ. தூரம் வரையில் முழங்கால் அளவு உள்ள பனி மீதே நடந்து செல்ல வேண்டி யிருக்கும்'' போன்ற விவரங்களை எங்கள் குழுவி னருக்கு சீன மற்றும் நேபாள வழிகாட்டிகள் விளக்கிப் பேசினார்கள்.

இரண்டாம் நாள் பரிக்ரமா பாதையில் வரும் 'டோல்மா பாஸ்' என்ற இடம் கடல் மட்டத்திலிருந்து சுமார் 19,500 அடி உயரத்தில் இருக்கிறது. இங்கு பகல் ஒரு மணிக்குமேல் எப்போதும் பனிப்புயல் வீசுகிறது. இரண்டாம் நாள் பரிக்ரமா செல்லும்போது 'எங்கள் உயிருக்கே ஆபத்து ஏற்படலாம்!' என்ற ஒரு நிலைதான் அப்போது இருந்தது. மேலும் நாங்கள் திரபுக் முகாமில் தங்கிய முதல் நாள் இரவு குளிரும் -20 டிகிரியாக இருந்தது. ''இரண்டாம் நாள் பரிக்ரமாவின்போது, பனிப் பாறைகளின் மீது குறைந்தது பத்து கி.மீ. தூரமாவது மலைமீது ஏறிச் செல்ல வேண்டியிருக்கும்''

என்று எங்கள் உரையாடலில் கலந்துகொண்ட திபெத்திய போர்ட்டர்களும் கூறினார்கள்.

''இந்த இடம் கடல் மட்டத்திலிருந்து அதிக உயரத்தில் இருப்பதால் அங்கு ஆக்ஸிஜன் குறைவு. அதனால் மூச்சு விடுவதற்குச் சிலருக்கு அங்கு சிரமம் ஏற்படுவதும் உண்டு; சிலர் சுயநினைவு இழந்து மயக்கம் அடைவதும் உண்டு. ஒரு வேளை அங்கு மூச்சு விடுவதற்கு நமக்குச் சிரமம் ஏற்படு மானால் பயன்படுத்துவதற்காக ஆக்ஸிஜன் சிலிண்டர் களையும் நம்மோடு நாம் எடுத்துச் செல்ல இருக் கிறோம்.

''டோல்மா பாஸைக் கடக்கும்போது சில சமயங்களில் பூண்டு சாப்பிடுவது நல்லது - என்று இங்குள்ள திபெத்திய லாமாக்கள் கூறுகிறார்கள். டோல்மாவில் நமக்கு ஆக்ஸிஜன் குறைவு என்ற உணர்வு ஏற்பட்டால், சாப்பிடுவதற்குக் கொஞ்சம் பூண்டை நம்முடன் எடுத்துச் செல்லலாம்.

''சிலர் டோல்மா பாஸ் பகுதியைக் கடக்கும்போது கைகுட்டையில் அல்லது சிறிய பிளாஸ்டிக் டப்பாவில் கர்ப்பூரம் போட்டு எடுத்துச் செல்கிறார்கள். மூச்சு விடுவதற்குச் சிரமம் தோன்றினால் அந்தக் கர்ப்பூரத்தை அவ்வப்போது எடுத்து முகர்ந்து கொள்வது நமக்கு உதவியாக இருக்கும்.''

இவ்விதம் பல கருத்துக்கள் எங்கள் கலந்துரை யாடலின்போது கூறப்பட்டன.

8.6.98. திங்கட்கிழமை. எங்கள் குழுவினருள் ஐந்து பேர்களைத் தவிர, மற்றவர்கள் பதினான்கு பேரும் திரபுக்கிலிருந்து வந்த வழியே தார்ச்சனுக்குத் திரும்பிச் செல்வது என்று முடிவு செய்தனர். அதற்கேற்ப பரிக்ரமா செல்ல இருந்த எங்கள் ஐந்து பேருக்கும் தேவையான வழிகாட்டியையும் போர்ட்டர்களையும் சீன வழிகாட்டி ஏற்பாடு செய்தார்.

அதுபோலவே திரபுக்கிலிருந்து தார்ச்சன் முகாமிற்குத் திரும்ப இருந்த எங்கள் குழுவைச் சேர்ந்த பதினான்கு பேருக்கும், வழிகாட்டியையும் போர்ட்டர்களையும் நேபாள வழிகாட்டி ஏற்பாடு செய்தார்.

இரண்டாம் நாள் பரிக்ரமாவில் வரும் டோல்மா பாஸ் பகுதியின் காவல் தெய்வம் தாரா. இவள் காளி தேவியின் அல்லது பார்வதிதேவியின் ஓர் அம்சமாவாள். வங்காளத்தில் காளி தேவியின் ஓர் அம்சமாக தாரா வழிபடப்படுகிறாள். 'தாரா' என்ற சொல்லுக்குப் 'பிறவிக் கடலிலிருந்து கரையேற்றி முக்தி வழங்குபவள்' என்பது பொருள். அதனால் டோல்மா பாஸ் பகுதி 'தாரா பீடம்' என்றும் அழைக்கப்படுகிறது. திபெத்திய பௌத்தர்கள் தாராவைத் தங்கள் பெண் தெய்வமாகக் கருதுகிறார்கள்.

எங்கள் குழுவைச் சேர்ந்த ஒருவர் இதற்கு முன்பு மூன்று முறை கைலாஸ் பரிக்ரமம் செய்திருந்தார். அந்த அனுபவத்தின் அடிப்படையில் அவர், இரண்டாம் நாள் பரிக்ரமா செய்ய இருந்த எங்கள் ஐந்து பேரிடமும் அன்றிரவு பின்வருமாறு கூறினார்:

''இந்த இரண்டாம் நாள் பரிக்ரமாவின்போது - டோல்மா பாஸில் பரிக்ரமா செய்யும்போது - ஒவ்வோர் அங்குலத்தைக் கடப்பதும் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த விஷயமாகும்; கைகளை வீசிக்கொண்டு உடலுக்கு எந்த விதத்திலும் சிரமம் (Strain) ஏற்படாமல் நீங்கள் கவனமாக நடந்து செல்ல வேண்டும். விடியற் காலையிலேயே புறப்பட்டுச் செல்வதால் பனிப்பாறை யில் கடக்க வேண்டிய தூரம் எவ்வளவு என்று தெரி யாமலேயே சுலபமாகக் கடந்து சென்றுவிடுவீர்கள். பகல் வெளிச்சமாக இருந்தால் - கடந்து செல்ல வேண்டிய மலைகள், அவற்றின் ஏற்ற இறக்கங்கள் ஆகியவை சிலருக்குப் பயத்தை ஏற்படுத்திவிடும். எனவே செல்ல வேண்டிய தூரம் பற்றி தெரியாமல் இரவில் அந்த இடங்களை நீங்கள் கடந்துவிடுவதுதான் உங்களுக்கு நல்லது. வழியில் களைப்புத் தோன்றி னாலும் பனியில் எங்கும் உட்காராதீர்கள். இடையில் எங்காவது பாறை தென்பட்டால் அங்கு நின்று, உங்கள் கையில் உள்ள ஊன்றுகோலை ஊன்றி நன்றாகக் களைப்பு நீங்க மூச்சு விட்டு ஓய்வெடுத்துக் கொள்ளுங்கள்.

''தூரத்தில் ஆங்காங்கே பனிப்பாறைகள் உருண்டு விழுவதை நீங்கள் பார்ப்பீர்கள்; அந்தப் பனிப்பாறைகள் விழும் சப்தமும் 'டமார், டமார்' என்று அவ்வப்போது பெரிதாகக் கேட்கும். ஆனால் அவற்றையெல்லாம் கேட்டு பயந்துவிடாதீர்கள். காரணம், நீங்கள் பரிக்ரமா செல்லும் பாதையில் அந்தப் பனிப்பாறைகள் விழுவதற்கு வாய்ப்பே கிடையாது; அவை தூரத்தில்தான் விழும். எனவே அவை

விழுவதைப் பார்த்தோ, அவை விழும் சப்தத்தைக் கேட்டோ நீங்கள் பயப்பட வேண்டிய அவசியமே இல்லை.

"டோல்மா பாஸில் ஆக்ஸிஜன் குறைவு. அங்கு ஒருவேளை உங்களுக்குச் சிரமம் ஏற்பட்டால் மட்டும் நீங்கள் உங்களுடன் எடுத்துச் செல்லும் ஆக்ஸிஜன் சிலிண்டரைப் பயன்படுத்துங்கள். ஆனால் கூடிய வரையில் ஆக்ஸிஜன் சிலிண்டர்களைப் பயன்படுத் தாமல் இருப்பதற்கு முயற்சி செய்வதுதான் நல்லது. ஏனென்றால், ஆக்ஸிஜன் சிலிண்டரைப் பயன்படுத்தி நமக்கு மூச்சு விட்டு பழக்கம் கிடையாது. அதனால் அதைப் பயன்படுத்துவதும் உங்களுக்குச் சிரமமாக இருக்கும். மேலும் அதை ஒரு முறை பயன்படுத்தி னால், திரும்பத் திரும்ப அதையே பயன்படுத்த வேண்டும் என்ற எண்ணமும் தோன்றும்.

"நீங்கள் உங்களுடன் எடுத்துச் செல்லும் ஃபிளாஸ்க் வெந்நீரில் குளுகோஸ் கலந்து எடுத்துச் செல்லுங்கள். அதை அடிக்கடி டோல்மா பாஸைக் கடக்கும்போது குடிப்பது நல்லது."

பரிக்ரமா செல்ல இருந்த எங்களிடம் வழிகாட்டி, "விடியற்காலையில் இரண்டு மணிக்கே உங்கள் ஐந்து பேரையும் எழுப்பிவிடுகிறேன். உடன் எடுத்துச் செல் வதற்கு ஃபிளாஸ்கில் வெந்நீர் போட்டுத் தருகிறேன். உங்களுக்கு ஹார்லிக்ஸ், காபி, டீ எது வேண்டுமோ அதைப் போட்டுத் தருகிறேன். எப்படியும் இந்திய நேரப்படி விடியற்காலை இரண்டு மணிக்குள் நாம் இந்த

இடத்திலிருந்து புறப்பட்டுவிட வேண்டும். அப்போது தான் டோல்மா பாஸை விரைவில் நம்மால் சுலபமாகக் கடக்க முடியும்.

''சூரியன் உதித்த பிறகு நாம் சென்றால் பனி உருக ஆரம்பித்துவிடும். பனி உருக ஆரம்பித்துவிட்டால் ஆங்காங்கே நாம் சறுக்கி விழ வேண்டிய நிலை ஏற்படும். மேலும், பகல் பன்னிரண்டு மணிக்கு மேல் அந்தப் பகுதிகளில் பனிப்புயல் வீச ஆரம்பித்துவிடும். இதையெல்லாம் கருத்தில்கொண்டு இரண்டாம் நாள் கைலாஸ் பரிக்ரமாவை நாம் சுலபமாகச் செய்ய வேண்டுமானால், இந்திய நேரப்படி இரண்டு மணிக்கே நீங்கள் ஐந்து பேரும் பௌர்ணமி நிலவு வெளிச்சத்தில் நடக்க ஆரம்பித்துவிட வேண்டும்'' என்று விளக்க மாகக் கூறினார்.

கைலாஸ் பரிக்ரமம்: இரண்டாம் நாள்

9.6.98. செவ்வாய்க்கிழமை. மறுநாள் பௌர்ணமி என்பதால், இன்றிரவே நிலா வெளிச்சம் நன்றாக இருந்துகொண்டிருந்தது.

இன்று விடியற்காலையில் இந்திய நேரப்படி இரண்டு மணிக்குப் பரிக்ரமா செல்ல இருந்த எங்கள் ஐந்து பேரையும் வழிகாட்டி வந்து படுக்கையிலிருந்து எழுப்பிவிட்டார். விடியற்காலை 2.15 மணிக்கு அறையை விட்டு வெளியே வந்தபோது, நீண்ட தூரத்தில் பரிக்ரமா பாதையில் சிலர் வரிசையாக டார்ச் அடித்தபடி சென்றுகொண்டிருந்தார்கள்.

பரிக்ரமா செல்ல இருந்த நாங்கள் ஐந்து பேரும் ஆளுக்கொரு தோள்பை (shoulder bag) எடுத்துக்கொண் டோம். அதில் அன்றைய பரிக்ரமாவின்போது உண வுக்கு வேண்டிய உலர்ந்த பழங்கள் போன்றவைகள், மழை வந்தால் அணிந்துகொள்வதற்கு வேண்டிய ரெயின் கோட், பிளாஸ்கில் குளுகோஸ் கலந்த வெந்நீர், பிஸ்கெட், மாங்காய் வற்றல், வெள்ளைப்பூண்டு, கர்ப்பூரம், பூஜைப்பொருள்கள் ஆகியவற்றை எடுத்து வைத்துக்கொண்டோம்.

நாங்கள் திரபுக் முகாமிலிருந்து புறப்படுவதற்கு முன்பு, எங்களுடன் வந்த எங்கள் திபெத்திய உதவி யாளர்களிடம் எங்கள் தோள் பைகளைக் கொடுத்து விட்டோம். இரவு 2.30 மணிக்குப் புறப்பட்டோம். அப்போது எங்கள் குழுவைச் சேர்ந்த மற்றவர்கள் அனைவரும், ''ஜெய்ஸ்ரீ குருமகராஜ்ஜீ கீ ஜெய், ஜெய்ஸ்ரீ மகாமாயி கீ ஜெய், ஜெய்ஸ்ரீ சுவாமிஜி மகராஜ் ஜீ கீ ஜெய், ஜெய்ஸ்ரீ கைலாஸ்நாத் பகவான் கீ ஜெய்!'' என்று முழக்கமிட்டு எங்களை வழியனுப்பி வைத்தார்கள்.

எங்களுடன் இரண்டு வழிகாட்டிகளும் வந் தார்கள். திரபுக் முகாமிலிருந்து எங்களோடு ஒரு கருப்பு நாயும் உடன் வந்தது.

பௌர்ணமிக்கு முதல் நாள் இரவு என்பதால், நிலவு வெளிச்சத்தில் - டார்ச் உதவியும்கூட இல்லாமல் - நாங்கள் பரிக்ரமா பாதையில் செல்ல ஆரம்பித்தோம். அப்போது கடுமையான குளிர் இருந்தது.

பொழுது புலரும் சமயத்தில் நாங்கள் 'சிவ ஸ்தல்' என்ற இடத்தை அடைந்தோம். அந்த இடத்தைத் திபெத்தியர்கள் 'மயானம்' என்று கருதுகிறார்கள். ஆனால் அங்கு சடலங்களைத் தகனம் செய்வதோ புதைப்பதோ கிடையாது. இந்த இடத்தில் பரிக்ரமா செல்லும் திபெத்தியர்கள் தங்கள் ஆடைகள், தொப்பிகள், செருப்புகள், பூட்ஸ் போன்றவற்றில் எதையாவது விட்டுச் செல்கிறார்கள்; அது மட்டு மின்றி, அங்கு அவர்கள் தங்களின் ஒரு பிடி தலை முடியையும், தங்கள் உடலைக் கத்தியால் கீறி ஒரு சில இரத்தத் துளிகளையும் விட்டுச் செல்கிறார்கள். இவ் விதம் செய்வதால் தங்களுக்கும் அந்த இடத்திற்கும் ஒரு சூட்சுமமான ஆன்மிக உறவு ஏற்படும்; அதனால் மரணத்திற்குப் பிறகு தங்கள் ஆத்மா பரம்பொருளுடன் ஐக்கியமடையும் என்று திபெத்தியர்கள் நம்புகிறார்கள்.

சிவஸ்தலைத் திபெத்தியர்கள் ஜபம் செய்தபடியே வலம் வருகிறார்கள். நாங்கள் சென்றபோது அங்கு திபெத்தியர்கள் சிலர் அமர்ந்து தங்கள் மத நூல்களைப் படித்துக் கொண்டிருந்தார்கள்.

பின்னர் நாங்கள் அங்கிருந்து எங்கள் பரிக்ரமா பயணத்தைத் தொடர்ந்தோம். டோல்மா பாஸை அடைவதற்கு சுமார் இரண்டு கி.மீ. தூரத்திற்கும் முன்பே, நாங்கள் பார்க்கும் இடமெங்கும் பனி மட்டுமே இருந்த பனிப் பாறைகளின் மீது நடந்து செல்ல வேண்டியிருந்தது. நாங்கள் சென்ற பனிப் பாதையில் பூமி வெடிப்பு போன்ற சில இடங்களில் -

பனிப் பாறைகளின் அடியில் ஆங்காங்கே சிறிய அளவிலும், பெரிய அளவிலும் - தண்ணீர் வேகமாகப் பாய்ந்து சென்றுகொண்டிருந்தது.

இங்கு சில பகுதிகள் மேலே பார்ப்பதற்குப் பனிப்பாறைகள் போன்று தென்பட்டன. ஆனால் நாம் கொண்டு செல்லும் ஊன்றுகோலை ஊன்றும்போது, பனி மிருதுவாக இருந்தால் ஊன்றுகோல் உள்ளே சென்று விடுகிறது; பனி Solid-ஆக இருந்தால் பனியின் மீது நம் ஊன்றுகோல் உறுதியாக நிற்கிறது. 'எந்த இடத்தில் பனி உறுதியாக இருக்கிறது? எந்த இடத்தில் பனி உறுதியில்லாமல் இருக்கிறது?' என் பதை இங்கு வசிக்கும் திபெத்தியர்களால்தான் துல்லிய மாகப் புரிந்துகொள்ள முடிகிறது. எனவே இங்குள்ள திபெத்திய போர்ட்டர்களின் உதவியால் மட்டுமே நாம் இந்தப் பனிப்பகுதிகளைக் கடந்து செல்ல முடியும். அவர்களின் உதவியில்லாமல் நாமாகச் சென்றால் - கால் வைக்கக் கூடாத இடத்தில் காலை வைத்து - ஆபத்தில் சிக்கிக்கொள்வதற்கு அதிக வாய்ப்பிருக்கிறது.

டோல்மா பாஸுக்கு முன்பும் சரி - பின்பும் சரி; ஏற்கெனவே பரிக்ரமா சென்றவர்கள் சென்றிருந்த பனிப்பாதை, ஒற்றையடி பாதை போன்று பனிப்பாறைகளுக்கிடையில் சென்றுகொண்டிருந்தது. பெரும்பாலும் நாங்கள் அந்த ஒற்றையடிப் பாதை யிலேயே ஊன்றுகோலை ஊன்றி நடந்து சென்றோம்.

எங்கே பார்த்தாலும் பனிப் பாறைகள் சூழ்ந்திருந்த நிலையில், இடையில் எங்கேயாவது கற்பாறையைப்

பார்ப்பதற்கே மகிழ்ச்சியாக இருந்தது. காரணம், அது போன்ற பாறை இருந்த இடங்களில் நின்று அல்லது அமர்ந்து அவ்வப்போது சிறிது ஓய்வெடுத்துக்கொள்ள முடியும்.

நாங்கள் டோல்மா பாஸ் நோக்கிச் சென்றுகொண்டிருந்த முக்கால்வாசி தூரத்தில், வழிகாட்டி என்னிடம் வந்து வாயைத் திறக்கச் சொல்லி, நாக்கின் அடியில் சிறிய ஒரு பச்சைக் கர்ப்பூரத் துண்டை வைத்து, ''இதை அப்படியே வைத்திருங்கள்'' என்று கூறினார். எனக்கு மூச்சுத் திணறல் ஏற்படாமல் இருக்கும் பொருட்டு அவர் அவ்விதம் செய்தார்.

கண்ணுக்கெட்டிய தூரம் வரையில் டோல்மா பாஸைச் சுற்றிலும் சுமார் 15 கி.மீ. முதல் 20 கி.மீ. தூரம் வரையில் பல மலைகள் சூழ்ந்திருந்தன. அந்த மலைப் பகுதிகளிலும் பெரும்பாலான இடங்களில் பனி மூடியிருந்தது.

அந்தப் பகுதியில் நடந்து சென்றபோது, அருகிலும் தூரத்திலும் கண்ட பனி மலைகளின் காட்சிகள் 'கந்தர்வலோகம், தேவலோகம்' என்று சொல்லத்தக்க வகையில் ஓர் அதிசய காட்சியாகவே இருந்தன. 'டோல்மா பாஸ்' என்பது ஏறத்தாழச் செங்குத்தாகவே மலை மீது ஏறிச் செல்ல வேண்டிய பனி சூழ்ந்த பகுதியாகும்.

நாங்கள் டோல்மா பாஸ் பரிக்ரமா சென்றபோது, ஒரு யாத்திரிகர்கூட அன்றைய தினம் யாக் மூலம்

டோல்மா பாஸில் பரிக்ரமா செய்யவில்லை. நாங்கள் டோல்மா பாஸைக் கடந்து சென்றுகொண்டிருந்த போது, எங்களுடன் திபெத்தியர்கள் சிலரும் சிறு சிறு குழுக்களாகப் பரிக்ரமா சென்றுகொண்டிருந்தார்கள். அவர்களில் பெண் ஒருத்தி போதிய அளவு ஆக்ஸிஜன் இல்லாததால் சுயநினைவிழந்து விழுந்துவிட்டாள். அவளுடன் வந்த மற்ற திபெத்தியர்கள் ஒரு கனமான போர்வையில் அந்தப் பெண்ணைப் படுக்க வைத்து, அந்தப் போர்வையை நான்கு பக்கங்களிலும் பிடித்த படியே அவளைச் சுமந்து வந்தார்கள்.

இதை எனது போர்ட்டர் பார்த்தார். அவர் நாங்கள் எடுத்துச் சென்றிருந்த ஆக்ஸிஜன் சிலிண்டரை அந்தப் பெண்ணுக்குக் கொடுத்து, சுயநினைவு இல்லாமல் இருந்த அவள் நன்றாக மூச்சு விடுவதற்கு உதவி செய்தார். அதனால் அந்தப் பெண்ணுக்குச் சுயநினைவு திரும்பியது. பின்னர் அவள் குணமடைந்து சிரித்த படியே நடந்து சென்றாள்.

ஆங்கிலத்தில் ‘டோல்மா பாஸ்’ எனப்படுகின்ற இந்த இடம் திபெத்திய மொழியில் ‘டோல்மா லா’ என வழங்குகிறது.

‘‘டோல்மா பாஸ் என்ற இந்தப் பகுதியில் ஒருவர் செல்லும்போது அவரது மனித சரீரம் தேவ சரீரமாக மாறுகிறது’’ என்று கூறப்படுகிறது.

நாங்கள் டோல்மா பாஸை அடைந்தபோது காலை சுமார் ஒன்பது மணி இருக்கும். இந்த டோல்மா பாஸ்

பகுதியில் ஒரு பாறை இருக்கிறது. அது சுமார் 8 அடி உயரமும், 12 அடி நீளமும், 5 அடி அகலமும் கொண்டது. இந்தப் பாறையை, பரிக்ரமா செல்லும் திபெத்தியர்களும் இந்துக்களும் தேவியாகவே கருதி வழிபடுகிறார்கள். பரிக்ரமா செல்பவர்கள் அனைவரும் அந்தப் பாறையில் தலை வைத்து வணங்குகிறார்கள்; அதை வலம் வந்து வழிபடுகிறார்கள்; தூபம், தீபம், நைவேத்தியம் போன்றவற்றைச் சமர்ப்பித்து பூஜை செய்கிறார்கள்.

நாங்கள் அங்கு சென்றபோது அந்தப் பாறையின் மேலும் கீழும் சீன ரூபாய் நோட்டுகள், நேபாள ரூபாய் நோட்டுகள், இந்திய ரூபாய் நோட்டுகள், பல நாட்டு நாணயங்கள் போன்றவை ஏராளமாக இறைந்து கிடந்தன. ஆனால் அவ்விதம் அங்கு தேவிக்கு அர்ப்பிக்கப் பட்ட ரூபாய் நோட்டுக்களையோ நாணயங்களையோ யாரும் அங்கிருந்து எடுத்துச் செல்வதாகத் தெரிய வில்லை. மேலும் அந்தப் பாறையில் ஆங்காங்கே பல வண்ணங்களிலும், பல அளவுகளிலும் ஆன காகிதப் படங்களையும், ரூபாய் நோட்டுகளையும் யாக் வெண்ணெய் தடவி ஒட்டியிருந்தார்கள். அவற்றில் பலவற்றில் குதிரையின்மீது ஒருவர் அமர்ந்திருப்பது போன்ற உருவம் காணப்பட்டது.

இது போன்று அங்கு தேவிக்குத் திபெத்தியர் களால் அர்ப்பிக்கப்பட்ட ஏதேதோ பொருள்கள் ஏராளமாக அங்கும் இங்கும் சிதறிக் கிடந்தன. எங்கள் குழுவின் சார்பாக அங்கு தேவிக்கு அர்ப்பிப்பதற்காக

நாங்கள் ஒரு புடவையை எடுத்துச் சென்றிருந்தோம். அதை அந்தப் பாறையைச் சுற்றி அணிவித்தோம். அந்தப் பாறையைப் பார்த்தபடியே நாங்கள் அதன் அருகில் சுமார் அரை மணி நேரம் அமர்ந்திருந்தோம். அங்கிருந்த கொடிக் கம்பங்களில் திபெத்தியர்கள் அதிக எண்ணிக்கையில் தங்களுடைய பிரார்த்தனைக் கொடி களைச் சிறியதும் பெரியதுமாகப் பல நிறங்களில் கட்டியிருந்தார்கள்.

அங்கு எங்கள் குழுவைச் சேர்ந்த ஒருவர் தமிழிலும், ஆங்கிலத்திலும் நாங்கள் சென்னையிலிருந்து எடுத்துச் சென்ற 'கைலாஸ் - மானசரோவர் யாத்திரை - 1998, பக்தர்கள், ஸ்ரீராமகிருஷ்ண மடம், சென்னை - 600 004, தென் இந்தியா' என்ற இரண்டு துணி பேனர்களைக் கட்டினார். மேலும், எங்கள் குழுவைச் சேர்ந்த மற்றொருவர் கொடுத்தனுப்பிய 'சிவ சிவ' என்ற எழுத்துக்கள் கொண்ட பரிவட்டம், ஸ்ரீராமகிருஷ்ண விஜயம் வாசகர்கள் கொடுத்தனுப்பிய 'ஓம் நமசிவாய' மந்திரம் எழுதப்பட்ட காகிதங்கள், ஸ்ரீராமகிருஷ்ண விஜயம் வாசகர்கள் கொடுத்தனுப்பிய பன்னீர் இலையில் எழுதப் பட்ட 'ஓம் நமசிவாய' மந்திரங்கள் ஆகியவற்றை டோல்மாலா பாறையின் அருகில் அவற்றை வைக்க வேண்டிய இடத்தில் வைத்து பிரார்த்தித்தோம்.

அங்கு நான் 1998 பிப்ரவரி (காசி விஸ்வநாதர் அட்டைப் படம் கொண்ட சிவராத்திரி இதழ்), ஏப்ரல் (ஸ்ரீராமர் அட்டைப் படம் கொண்ட ஸ்ரீராமநவமி சிறப் பிதழ்) ஆகிய ஸ்ரீராமகிருஷ்ண விஜயம் பத்திரிகையின்

இரண்டு இதழ்களை வைத்தது பிரார்த்தனை செய்தது எனக்கு மனநிறைவைத் தந்தது.

இந்த டோல்மா பாஸ் பகுதியில் பல வண்ணத் துணிகளில், கனமான கயிற்றால் கட்டப்பட்ட திபெத்தியர்களின் பிரார்த்தனை கொடிகள் தோரணங்கள் போன்று இருந்தன. அவற்றைக் காலால் யாரும் அங்கு தாண்டிச் செல்வதில்லை. அவை போன்ற தோரணங்கள் வரும் இடங்களில், பனிப்பாறைகள் மீது கிடக்கும் தோரணத்தைத் தலைக்கு மேலே தூக்கி அதில் நுழைந்து பரிக்ரமா செல்பவர்கள் சென்றார்கள். நாங்களும் அவ்விதமே செய்தோம்.

திபெத்தியர்கள் மிகவும் ஏழைகள், படிப்பில்லாதவர்கள், நாகரிமற்றவர்கள் என்பதெல்லாம் உண்மைதான். ஆனால் இந்தத் திபெத்தியர்கள் டோல்மா பாஸில் உள்ள பாறையைத் தங்கள் தேவியாகவே கருதி வழிபடுவதை நேரில் பார்க்கும்போது, அவர்களின் பக்தி அபாரமானது என்பதை நாம் தெள்ளத் தெளிவாக புரிந்துகொள்ள முடிகிறது. அதை மற்றவர்கள் எழுதியோ, சொல்லக் கேட்டோ புரிந்துகொள்ளவும் முடியாது. அந்த எளிய உள்ளம் கொண்ட திபெத்தியர்களின் பக்தியை, அங்கு நேரில் சென்று பார்ப்பவர்கள் மட்டுமே சரியாகப் புரிந்துகொள்ள முடியும். அவர்கள் அந்தப் பாறையை, அம்பாளையே ஊனக் கண்ணால் பார்ப்பது போன்று பார்க்கிறார்கள்; வழிபடுகிறார்கள்; அதனிடம் பிரார்த்தனை முதலானவற்றைச் செய்கிறார்கள். அந்தப் பாறையில் தலை

வைத்தபடியே திபெத்தியர்கள் பிரார்த்தனை செய்வதைப் பார்த்து நாங்களும் அவ்விதமே செய்தோம்.

அந்த டோல்மாலா பாறையில் எங்கள் வழிபாடுகளை முடித்துக்கொண்டு - அந்தப் பாறையை வலம் வந்து வணங்கிவிட்டு - அங்கிருந்து புறப்பட்டோம்.

கௌரி குண்டம்

டோல்மா பாஸிலிருந்து இறங்கும்போதும் செங்குத்தாகவே அந்தப் பனி மலையில் நாங்கள் இறங்கி வந்தோம்.

வழியில் பிரசித்தி பெற்ற 'கௌரி குண்டம்' என்ற குளம் தென்பட்டது. இந்தக் குளம்தான் உலகிலேயே கடல் மட்டத்திலிருந்து அதிக உயரத்தில் அமைந்துள்ள குளம். கடல் மட்டத்திலிருந்து இந்த கௌரி குண்டம் 18,600 அடி உயரத்தில் அமைந்துள்ளது. அந்த கௌரி குண்டத்தைச் சுற்றிப் பனி மலைகள் இருந்தன. பெரிய நகரங்களில் நான்கு சாலைகள் கூடும் இடம் போன்று, ஏறத்தாழ மலைகளின் அடிவாரத்தில் இந்த கௌரி குண்டம் அமைந்திருந்தது. 'சிவபெருமானைக் கணவனாக அடையும் பொருட்டு பார்வதிதேவி இந்தக் குளத்தில் நீராடி தவம் செய்தாள்' என்று கூறப்படுகிறது. இதன் நீர் எப்போதுமே பச்சை நிறமாகத்தான் இருக்கும். நாங்கள் சென்றபோதும் அது பச்சை நிறத்தில்தான் இருந்தது.

இந்த கௌரி குண்டத்தில் தினமும் பார்வதிதேவி வந்து நீராடுவதாக ஐதீகம். பார்வதிதேவியின் நிறம்

பச்சை. அவர் நீராடும் இந்தக் குளமும் பச்சை நிறத்தில் இருக்கிறது. இந்தக் குளத்தின் மத்தியில் பார்வதிதேவி, சிவபெருமானை எப்போதும் பூஜித்துக் கொண்டிருக்கிறாள் என்பது ஐதீகம்.

நாங்கள் சென்றபோது கௌரி குண்டம் குளத்தின் பெரும் பகுதியில் பனி உறைந்திருந்தது. அந்தப் பனியின் இடையில் ஆங்காங்கே சிறிது தண்ணீர் இருப்பதும் தெரிந்தது. எனவே நாங்கள் கௌரி குண்டத்தை நேரில் பார்த்தபோது அதன் அருகில் செல்லவோ, தீர்த்தம் எடுக்கவோ முடியாது என்பது புரிந்தது. அங்கு மலையின் இறக்கத்தில் இறங்கி கௌரி குண்டத்தை அடையும் பகுதி முழுவதையுமே அப்போது பனி மூடியிருந்தது.

அதில் இறங்கிக் கால் வைத்தால், வழுக்கிக் கொண்டே போய் கௌரி குண்டத்தில்தான் விழநேரிடும். கௌரி குண்டத்தைப் பார்த்தபடியே நாங்கள் டோல்மா பாஸிலிருந்து கீழே இறங்கி வர ஆரம்பித்தோம்.

கௌரிகுண்டத்தின் இடப் பக்கத்தில் தூரத்தில் ஹயக்ரீவ மலை அமைந்துள்ளது.

டோல்மா பாஸைக் கடந்த பிறகும்கூட பனி மூடிய பாறைகளின் மீது நாங்கள் சுமார் 4 கி.மீ. தூரம் நடக்க வேண்டியிருந்தது.

எனக்குச் சற்று முன்னால் திபெத்தியர்கள் சிலர் ஒரு சிறு குழுவாகப் பரிக்ரமம் செய்துகொண்டிருந்தார்கள். அவர்களில் ஒருவர், தன் கையிலிருந்த

ஊன்றுகோலைத் தவறுதலாகப் பனிப்பாறையில் ஓர் இடத்தில் ஊன்றியபோது தடுக்கிப் பனிப் பாறையில் விழுந்துவிட்டார். உள்ளூர்வாசியான திபெத்தியர் ஒருவரே கால் தடுக்கி இப்படி தவறி விழுந்தது, அவருக்குப் பின்னால் சுமார் 10 அடி தூரத்தில் வந்து கொண்டிருந்த என் பார்வையில் பட்டது. அதனால் நான் மேலும் எச்சரிக்கையாக பனி மீது நடக்க ஆரம்பித்தேன்.

இவ்விதம் நாங்கள் மலை இறக்கத்தைக் கடந்து, ஒரு வழியாகச் சமவெளிக்கு வந்து சேர்ந்தோம். பகல் ஒரு மணிக்கு நாங்கள், பரிக்ரமா பாதையிலுள்ள ஓர் ஆற்றின் கரையில் பகல் உணவுக்காகத் தங்கினோம்.

அப்போது திரபுக் முகாமிலிருந்து பரிக்ரமா முழுவதும் எங்களோடு வந்து கொண்டிருந்த கருப்பு நாயும் எங்களுடன் இருந்தது. அங்கு நாங்கள் சுமார் 45 நிமிடம் இருந்தோம். அங்கிருந்து நாங்கள் பரிக்ரமாவைத் தொடர ஆரம்பித்தபோது, அது வரையில் என்னுடன் வந்துகொண்டிருந்த கருப்பு நாய் அங்கிருந்து எங்கோ எங்களை விட்டுப் பிரிந்து சென்றுவிட்டது.

பகலுணவிற்குப் பிறகு பரிக்ரமாவைத் தொடர்ந் தோம். பெரும்பாலும் எங்கள் பரிக்ரமா பாதை ஓர் ஆற்றின் கரையை ஒட்டியே சென்றுகொண்டிருந்தது.

வழியில் சுமார் பத்து, பதினைந்து இடங்களில் நீர் ஓடிக்கொண்டிருந்த பெரிய கால்வாய்கள்

குறுக்கிட்டன. என்னால் தாண்ட இயலாத கால்வாய் களை நான் கடப்பதற்கு உதவியாக, என்னுடன் வந்த போர்டர் பெரிய கற்களைக் கொண்டு வந்து போட்டார். அதனால் கால்வாய் நீரில் என் கால்கள் நினையாமல் அந்தக் கால்வாய்களை நான் கடந்து சென்றேன்.

சமவெளியாக இருந்த ஓர் இடத்தில் சில யாக்குகம் மேய்ந்துகொண்டிருந்தன. அதை எங்கள் வழிகாட்டி கவனித்தார். அவர் யாக் உரிமையாளர்களிடம் கலந்து பேசி, மேற்கொண்டு எங்கள் வழிகாட்டி எங்களில் சிலர் பயணம் செய்வதற்கு யாக் எருமைகள் ஏற்பாடு செய்தார்.

எனக்கு ஏற்பாடு செய்யப்பட்ட யாக்கின் மீது அமர்ந்து நான் சுமார் ஒரு மணி நேரம் பயணம் செய்தேன். முதல் அரை மணி நேரம் நன்றாக இருந்தது என்றுதான் சொல்ல வேண்டும். ஆனால் அதற்கடுத்த அரை மணி நேரப் பயணம் சுகமான அனுபவமாக இல்லை. யாக் சமவெளியில் சென்றபோது அந்தப் பயணம் சுகமாகவே இருந்தது; ஆங்காங்கே மலையின் ஏற்றத்திலும் இறக்கத்திலும் தன் விருப்பம்போல் அது ஓடியபோது, அந்தப் பயணம் மிகவும் கஷ்டமாக இருந்தது. அது போன்ற சமயங்களில் யாக் உரிமையாளன் எழுப்பிய விசில் சத்தத்தைக் கூட யாக் பொருட்படுத்தாமல் ஓடியபோது, ''இந்த யாக்குகள் மனிதர்கள் யாருக்கும் கட்டுப்பட்டவை அல்ல; இவை சிவபெருமான் ஒருவருக்கு மட்டுமே கட்டுப் பட்டவை'' என்று தோன்றியது.

கைலாஸ் செல்லாதவர்களும் செல்ல விரும்பு பவர்களும், 'யாக்மீது அமர்ந்து பயணம் செய்வது சுகமான அனுபவமாக இருக்கும்' என்று நினைக்கக் கூடும். ஆனால் அது உண்மையல்ல. அரை மணி நேரம் யாக்கில் பிரயாணம் செய்வது, அரை மணி நேரம் நடப்பது என்று வேண்டுமானால் கைலாஸ் யாத்திரி கர்கள் தங்கள் பரிக்ரமாவை வைத்துக் கொள்ளலாமே தவிர, முழு பரிக்ரமா பயணத்தையும் யாக்கிலேயே செய்வது என்பது பெரிதும் துன்ப அனுபவமாகவே இருக்கும்.

பல சமயங்களில், நான் பயணம் செய்த யாக் பரிக்ரமாவின்போது யாத்திரிகர்கள் நடந்து செல்லும் ஒற்றையடிப் பாதையிலிருந்து விலகி தன் போக்கில் சென்றது. ஐந்தாறு இடங்களில் பனித் தரைகள் இருந்த இடங்களை யாக் கடந்து சென்றது. அது அப்படி சென்றபோது, சில இடங்களில் யாக்கின் கால்கள் அரை அடி அல்லது முக்கால் அடி கூட பனிக்குள் சென்றன. அப்போது யாக்கிற்கு எவ்வளவு சிரமம் இருந்திருக்கும் என்பதை என்னால் ஒருவாறு புரிந்துகொள்ள முடிந்தது. சில இடங்களில் யாக் சாதாரணமாக நடந்து சென்றது. அது போன்ற சமயங்களில் யாக் தனது உரிமையாளரின் 'விசில்' சப்தத்திற்கேற்ப பொறுப்புடன் நடந்து கொண்டது. யாக்கின் சொந்தக்காரர் யாக்கின் அருகில்தான் வந்து கொண்டிருந்தார். என்றாலும் அது சில இடங்களில் தன் போக்கில் கட்டுமீறி மிகவும் வேகமாக ஓடியது. அப்படி அது ஓடும்போது - வழியில்

பாறைகள் தென்பட்ட போதெல்லாம் அவற்றில் என் கால் மோதிவிடாமல் இருப்பதற்காக - அவ்வப்போது கால்களை மேலே தூக்கி ஜாக்கிரதையாக வைத்துக் கொள்ள வேண்டியிருந்தது.

சுமார் ஒரு மணி நேரம் யாக்கில் பயணம் செய்து ஜுதுல்புக் என்ற இடத்தை அடைந்தோம். இந்த இடத்திற்கு ஜாங்ஜிரபு (Zongzerebu) என்ற இன்னொரு பெயரும் உண்டு. நாங்கள் அங்கு தங்கிய விடுதி மண் கட்டிடம் ஆகும். இந்த விடுதியின் உரிமையாளரும் அந்த விடுதியின் ஒரு பகுதியிலேயே குடியிருக்கிறார்.

அன்றிரவு, பரிக்ரமா சென்ற நாங்கள் ஐந்து பேரும் ஒரே அறையில் தங்கினோம்.

கைலாஸ் பரிக்ரமம்: மூன்றாம் நாள்

10.6.98. புதன்கிழமை. இன்று காலையில் சுமார் ஒன்பது மணிக்கு நாங்கள் ஐந்து பேரும் மூன்றாம் நாள் பரிக்ரமா பாதையில் நடக்க ஆரம்பித்தோம். மூன்று நாள் பரிக்ரமத்திலும் கடப்பதற்கு இது சுலபமான பகுதியாகும். பொதுவாக பெரிய ஏற்ற இறக்கங்கள் இல்லாமல் சமதளத்திலேயே நாங்கள் நடந்து சென்றோம். பரந்த சமவெளிகளும் சிற்றாறுகளும் உயர்ந்த மலைகளும் பல வண்ணக் குன்றுகளுமாக இந்தப் பாதை கண்களுக்கு அற்புத விருந்தளித்தது.

இந்தப் பரிக்ரமாவின்போது பர்மியர்களின் கட்டிடக் கலையை நினைவுபடுத்தும் விதத்தில், அடுக்கடுக்காக அமைந்த கோபுரங்கள் போன்ற ஒரு

காட்சி கயிலைக்குச் சற்று தூரத்திலிருந்த ஒரு மலையில் தென்பட்டது.

ஜுதுல்புக் விடுதியிலிருந்து சுமார் இரண்டு கி.மீ. தூரம் நடந்திருப்போம். அப்போது லேசாகப் பனி மழை பெய்ய ஆரம்பித்தது. அந்தப் பனி மழை சர்க்கரை அளவில் வெள்ளைப்பூ ஆகாயத்திலிருந்து சொரிவது போல் இருந்தது. அது எங்கள் துணிகளில் ஒட்டிக் கொண்டது. இந்தப் பனி மழை சுமார் அரை மணி நேரம் நீடித்தது.

நாங்கள் செல்லும் வழியில் அடுக்கடுக்காகக் கோட்டைகள் போன்றும், அழகிய அமைப்புடைய அஷ்டமேருகள் போன்றும் நாங்கள் கண்ட வானளாவிய பல மலைகளின் காட்சிகள் எங்களை வியக்க வைத்தன.

வழியில் ஒரு செக் போஸ்ட் வந்தது. அங்கு நாங்கள் சிறிது நேரம் தங்கியிருந்தோம். காலை பதினொரு மணிக்குச் செக் போஸ்ட் இருந்த இடத்திற்கு எங்கள் ஜீப் வந்தது. நாங்கள் ஜீப்பில் ஏறி தார்ச்சனுக்குப் புறப்பட்டோம். காலை 11.15 மணிக்கு நாங்கள் சென்ற ஜீப் தார்ச்சனைச் சென்றடைந்தது.

தார்ச்சன் முகாமிலிருந்த எங்கள் குழுவைச் சேர்ந்த அத்தனை பேரும் ஜீப் அங்கு சென்று நின்றதுமே, தங்கள் அறைகளைவிட்டு வெளியே வந்து - மிகுந்த குதுகலத்துடன் - பெரிய ஆரவாரத்துடன் - மகிழ்ச்சி வெள்ளம் கரை புரள ''ஓம் நமசிவாய, ஜெய்ஸ்ரீ

கைலாஸ்பதி கீ ஜெய், ஜெய்ஸ்ரீ குருமகராஜ்ஜீ கீ ஜெய், ஜெய்ஸ்ரீ மகாமாயீ கீ ஜெய், ஜெய்ஸ்ரீ சுவாமிஜி மகராஜ்ஜீ கீ ஜெய்'' என்று பெரிய முழக்கம் செய்தார்கள்.

மானசரோவரை நோக்கி...

அன்று மாலை 6.30 மணிக்குத் தார்ச்சன் முகாமிலிருந்து எங்கள் ஜீப்புகள் மானசரோவர் நோக்கிப் புறப்பட்டன.

பத்து நாட்கள் கயிலாயத்தில் இறைவன் திருவடியில் இருந்துவிட்டு அங்கிருந்து புறப்பட்டபோது 'கயிலாயத்தை விட்டு புறப்படுகிறோமே!' என்று உள்ளம் அழுது கொண்டிருந்தது. கயிலாயத்தில் கயிலைநாதனைத் தரிசிப்பது அதுவே கடைசி முறை என்பதால் - இனி அப்படி ஒரு வாய்ப்பு கிடைக்கப் போவதில்லை என்பதால் - ஜீப்பில் சென்றபடியே கழுத்தைத் திருப்பித் திருப்பி கயிலாயத்தைப் பார்த்துக்கொண்டே வந்தோம்.

வழியில் சீனர்களின் ஒரு பெரிய இராணுவ முகாம் இருப்பது தெரிந்தது. இந்த இடத்தில் நமது ஜீப்பை சீன இராணுவத்தினர் நிறுத்துவார்கள். இங்குள்ள இராணுவ அதிகாரியிடம் நாம் நம்முடைய பாஸ்போர்ட்டுகளைக் காட்ட வேண்டியிருக்கும். இந்த யாத்திரையில் பாஸ்போர்ட்டுகளைக் காட்ட வேண்டிய இரண்டாவது இடம் இந்த இராணுவ முகாம்தான். ஆனால் அந்த இராணுவ முகாமில் எங்கள் பாஸ் போர்ட்டுகளைப் பரிசோதிக்காமலேயே எங்கள் ஜீப்

மேற்கொண்டு செல்வதற்கு அனுமதித்துவிட்டார்கள். ஆனால் இந்த இரண்டு இடங்களைத் தவிரவும் எந்த இடத்தில் வேண்டுமானாலும், எப்போது வேண்டு மானாலும் இராணுவத்தினர், இந்தியாவிலிருந்து செல்லும் கைலாஸ் யாத்திரிகர்களின் பாஸ்போர்ட்டு களைக் கேட்பதற்கு வாய்ப்பு இருக்கிறது. எனவே கைலமஸ் யாத்திரிகர்கள் எப்போதும் பாஸ்போர்ட், விசா போன்றவற்றை மிகுந்த கவனத்துடன் வைத் திருக்க வேண்டும்.

அன்றைய தினம் இரவு சுமார் 7.15 மணிக்கு மானசரோவர் கரையிலுள்ள ஹோரரே என்ற இடத்தை எங்கள் ஜீப் சென்றடைந்தது. இந்த ஹோரரே என்ற இடம் நாங்கள் மானசரோவரில் மே 27-ஆம் தேதி இரவு முதலில் வந்து தங்கிய இடமாகும். மீண்டும் இரண்டாம் முறையாக இப்போது இங்குள்ள விடுதியில் வந்து தங்கினோம்.

நாங்கள் ஹோரரேவை அடைந்த நாள் பௌர்ணமி ஆகும். பௌர்ணமி நாளில் கயிலாயத்தின் சிறப்பை மேலும் அங்கு அதிகமாகக் காணவும் உணரவும் முடியும். பௌர்ணமியின் நிலா வெளிச்சத்தில் கயிலாயத்தைத் தரிசிப்பது மிகவும் அரிய ஒரு தெய்விகக் காட்சியாகும். நாங்கள் ஹோரரேவில் தங்கிய நாளன்று இரவு கயிலை மீதுள்ள பனியின் மீது நிலவொளிபட்டதால் கைலாஸ் மேலும் தெய்விகப் பொலிவுடன் பிரகாசித்தது. பௌர்ணமி நாளில் கயிலையைத் தரிசிப்பது மிகவும் விசேஷம்; மிகவும்

பாக்கியம். கயிலைநாதனைப் பௌர்ணமி நாளில் மனம் நெகிழ, கண்ணாரத் தரிசிப்பவர்கள் கண் பெற்ற பயனைப் பெற்றுவிட்டார்கள் என்றே சொல்ல வேண்டும்.

11.6.98. காலையில் நாங்கள் புறப்படும்போது, தக்ளகோட் மருத்துவமனைக்குச் சென்றிருந்த எங்கள் குழுவைச் சேர்ந்த நோயாளி, இன்று நலமாக வந்து எங்களுடன் சேர்ந்துகொண்டார்.

இன்று எங்கள் குழுவினருக்காக மானசரோவரில் தீர்த்தம் எடுத்துக்கொண்டு காட்மாண்டு நோக்கிப் புறப்பட திட்டமிட்டிருந்தோம். அதன்படி காலைச் சிற்றுண்டிக்குப் பிறகு தீர்த்தம் எடுப்பதற்கு வேண்டிய பிளாஸ்டிக் வாட்டர் கேன்களுடன் எங்கள் குழுவைச் சேர்ந்த சிலர் மானசரோவருக்குச் சென்றார்கள். அவர்கள் மானசரோவரில் தண்ணீர் ஐஸ் போன்று இருந்ததால், அதிலிருந்து தண்ணீர் எடுப்பதற்கு மிகவும் சிரமப் பட்டு போனார்கள். எங்கள் வழிகாட்டி பல முறை மானசரோவர் சென்றவர். அதனால் மானசரோவரின் குளிர் அவருக்கு மிகவும் பழகிப் போயிருந்தது. அவர்தான் எங்கள் குழுவினருக்காக மானசரோவரில் இறங்கித் தண்ணீர் எடுத்தார். ஆனால் அவராலேயே மானசரோவரின் ஐஸ் போன்ற குளிர்ச்சியைத் தாங்க முடியவில்லை. அதனால் அவரது கால்கள் மானசரோவருக்குள் இறங்கியதுமே நடனமாட ஆரம்பித்துவிட்டன என்றே சொல்ல வேண்டும். அவர் மிகவும் சிரமப்பட்டு எங்கள் குழுவினரிடமிருந்து சில

காலி வாட்டர் கேன்களைப் பெற்று, அவற்றில் மானசரோவர் தீர்த்தம் நிரப்பிக் கொடுத்தார்.

எங்கள் குழுவினர் அனைவரும் மானசரோவர் கரைக்குச் சென்றோம். அங்கு மானசரோவர் நீரை எங்கள் தலை மீது தெளித்துக்கொண்டோம். அப்போது மானசரோவரின் நீர் பனிக்கட்டியைத் தொடுவது போன்று அவ்வளவு குளிர்ச்சியாக இருந்தது.

நாங்கள் மானசரோவர் கரைக்குச் சென்றபோது கயிலாயத்தைப் பார்க்க முடியாதபடி பனிமூட்டம் இருந்தது. ஆனால் நாங்கள் அங்கு சென்ற அரை மணி நேரத்தில் பனிமூட்டம் விலகி, கயிலாயத்தின் தரிசனம் எங்களுக்கு நன்றாகக் கிடைத்தது. வாழ்க்கையில் இனி மீண்டும் கயிலாயத்தையும் மானசரோவரையும் நேரில் பார்க்க முடியாது என்பதால், கயிலாயத்தையும் மானசரோவரையும் நான் ஒரு வித ஏக்கத்துடன் பார்த்தோம். அதைத் தவிர வேறு அங்கு என்ன செய்ய முடியும்? மானசரோவர் கரையில் இருந்தபடியே கயிலாயத்தை சாஷ்டாங்கமாக விழுந்து வணங்கினோம். பிறகு மானசரோவர் கரையில் அமர்ந்து அனைவரும் பிரார்த்தனை செய்தோம்.

மானசரோவர் அலைகள், பந்து போன்ற ஒரு வகைப் புல்கற்றைகள் சிலவற்றைக் கரையில் கொண்டு வந்து ஒதுக்கின. அவற்றையும், சிறிது மானசரோவர் மணலையும் மானசரோவரின் பிரசாதமாக எங்களில் சிலர் எடுத்து வைத்துக் கொண்டோம்.

அனைத்தும் முடிந்த பிறகு நாங்கள் எங்கள் ஜீப்புகளில் புறப்பட்டோம். ஓர் இடத்தில் எங்கள் ஜீப்பின் டயர்கள் மணலில் சிக்கிக்கொண்டன. அந்த டயர்களை டிரைவர் எவ்வளவு முயற்சி செய்தும் வெளியே எடுக்க முடியவில்லை. நாங்கள் கீழே இறங்கிக்கூட ஜீப்பைத் தள்ளிப் பார்த்தோம்; என்றாலும் பயனில்லை. அங்கிருந்து மானசரோவர் சுமார் 150 மீட்டர் தூரத்தில்தான் இருந்தது. ஆதலால், 'இப்படி இங்கு தாமதமாவதும் நல்லதுதான். அதனால் இங்கிருந்தே மானசரோவரையும் கயிலாயத்தையும் இன்னும் சிறிது நேரம் தரிசிக்கலாம்!' என்று தோன்றியது.

இதற்குள் ஜீப்பையும் லாரியையும் இரும்புக் கயிற்றால் பிணைத்து, ஜீப்பையும் லாரியையும் ஒரே நேரத்தில் ஓட்டச் செய்ததும், மணலில் சிக்கியிருந்த ஜீப் வெளியே வந்துவிட்டது. அதோடு மானசரோவரை விட்டு நாங்கள் பிரிய வேண்டியதாயிற்று.

மானசரோவரையும் மாந்தாதா மலையையும் பார்த்தபடியே ஜீப்பில் கடந்து சென்றோம். வழியில் எத்தனையோ மலைகளையும், மலைத்தொடர்களை யும் பார்த்தபடியே சென்றோம். இவற்றில் ஜீப் சென்ற இடப் பக்கத்திலிருந்த மலைகளில் பனி சூழ்ந்திருந்தது. வழியில் காற்றினால் மணல் குவிந்து சிறிய சிறிய குன்றுகள் போல் சில இடங்கள் காட்சி தந்தன. இவ்விதம் குவிந்த மணல் குன்றுகளின் உயரம் முப்பது, முப்பத்தைந்து அடிகள்கூட இருந்தன. வழி முழுவதும்

சாலையின் இரண்டு பக்கங்களிலும் - அருகிலும் தொலைவிலும், சிறியதும் பெரியதுமாக - மலைகளும் மலைத் தொடர்களும் இருந்துகொண்டே இருந்தன.

அன்றிரவு 10.30 மணிக்குப் பர்யாங் என்ற இடத்திலுள்ள யாக் ஹோட்டலை எங்கள் ஜீப்புகள் சென்றடைந்தன. இந்தப் பர்யாங் விடுதியில் 27.5.98 தேதியில் நாங்கள் தங்கிய அதே அறைகளில் இப்போதும் தங்கினோம்.

பர்யாங் – சாகா

12.6.98. வெள்ளிக்கிழமை. இன்று காலை 10.45 மணிக்குப் பர்யாங்கிலிருந்து நாங்கள் அவரவர்களுக்குரிய ஜீப்புகளில் ஏறி சாகா என்ற இடம் நோக்கிப் புறப்பட்டோம். சுமார் இரண்டு மணிக்கு 'டோங்பா' என்ற ஊரில் பகலுணவு சாப்பிட்டோம். இந்த 'டோங்பா' கொஞ்சம் பெரிய கிராமம். ஆனால் இப்போது பாழடைந்த நிலையில் மிகவும் பரிதாப மாகக் காணப்பட்டது. சீனர்கள் இந்த இடத்தை ஆக்கிரமிப்பதற்கு முன்பு, இந்த ஊர் நல்ல நிலையில் இருந்து திபெத்தியர்கள் நிறைய பேர் வாழ்ந்திருந் தார்கள் என்பதற்கான பல அடையாளங்கள் அங்கிருந்தன.

'குட்டிச்சுவர்' என்பார்களே, அந்தச் சொல்லுக்கு ஏற்ப பெரும்பாலான வீடுகள் அங்கிருந்ததைப் பார்த்தோம். இந்த ஊரில் ஒரு மேட்டில் ஒரு புத்தர் கோயில் இருக்கிறது. அந்தக் கோயில் ஒன்றுதான் இந்த

ஊரிலுள்ள உருப்படியான ஒரே கட்டிடம் என்று சொல்ல வேண்டும். இந்த ஒரு கோயிலைத் தவிர அந்த ஊரிலுள்ள மற்ற எல்லா வீடுகளுமே அலங்கோலமாக இருந்தன.

பகலுணவிற்குப் பிறகு 80 கி.மீ. வேகத்தில் பயணம் செய்து மாலை 6.30 மணிக்கு சாகாவைச் சென்றடைந்தோம். அங்கு, நாங்கள் கயிலாயம் செல்வதற்கு முன்பு 25.5.1998-ஆம் தேதி இரவு தங்கிய அதே விடுதியில் இப்போதும் தங்கினோம்.

சாகா – நியாலம் ———

13.6.98 காலை சுமார் 8.30 மணிக்கு சாகா விடுதியிலிருந்து நியாலம் நோக்கி எங்கள் பயணம் துவங்கியது. வழியில் பிரம்மபுத்திரா நதியைக் கடந்து சென்றோம். அதைத் தொடர்ந்து சுமார் இரண்டு மணிநேரப் பிரயாணத்திற்குப் பிறகு, நாங்கள் 23.5.98, 24.5.98 ஆகிய தேதிகளில் கூடாரம் அடித்துத் தங்கிய ஆற்றங்கரை வந்தது. அதைப் பார்த்தபடியே எங்கள் பயணத்தைத் தொடர்ந்தோம்.

ஓர் ஆற்றின் கரையோரமாக எங்கள் வண்டிகளை நிறுத்தினோம். அங்கிருந்து சற்று தொலைவிலிருந்த ஆறு, ஏழு திபெத்திய வீடுகளிலிருந்து சிறு குழந்தையிலிருந்து பெரியவர்கள் உட்பட, நாய் வரையில் 'சாப்பிடுவதற்கு ஏதாவது உணவு கிடைக்குமா?' என்று எதிர்பார்த்து ஓடி வந்த காட்சி - எங்கள் உள்ளத்தில் ஆழப் பதிந்து வேதனைப்படுத்தியது. இது

போன்ற நிலைதான் திபெத்தில் பல இடங்களில் நிலவுகிறது என்று நாம் ஊகித்துக்கொள்ளலாம்.

அன்று மாலை சுமார் ஐந்து மணிக்கு நியாலம் வந்து சேர்ந்தோம். இதே நியாலம் ஹோட்டலில் மே 26-ஆம் தேதி நாங்கள் காட்மாண்டிலிருந்து மானசரோவருக்குச் சென்றபோது தங்கினோம். இன்றிரரவு இங்கு குளிர் மிகவும் கடுமையாக இருந்தது.

நியாலம் – ஜாங்மூ

இன்று 14.6.98 காலை 9.30 மணிக்கு நியாலத்திலிருந்து ஜாங்மூ நோக்கி எங்கள் பயணம் ஆரம்பித்தது.

ஜாங்மூ வரும் வழியில் ஏராளமான பசுமையான மரங்களையும், நீர்வீழ்ச்சிகளையும் பார்த்தோம். பச்சைக் கம்பளம் விரித்த, போர்த்திய மலைகள்; ஆங்காங்கே அந்தக் கம்பளத்தைப் பிரிக்கும் எல்லைக் கோடுகள் போன்ற சிறிய, பெரிய பல நீர்வீழ்ச்சிகள்; இரண்டு மலைகளுக்கிடையில் பனி உருகத் துவங்கியதால் கரை புரண்டோடும் ஆறு - என்று இயற்கைப் பல விதங்களிலும் வழிநெடுகிலும் விந்தை செய்துகொண்டிருந்தது.

பகல் சுமார் 11 மணிக்கு ஜாங்மூ வந்து சேர்ந்தோம்.

ஜாங்முவில் சீன கஸ்டம்சில் எங்கள் பாஸ்போர்ட்டுகள் சரி பார்க்கப்பட்ட பின்பு, Friendship Bridge-யை நோக்கிச் சென்றோம். இந்த இடத்தில்

எங்கள் குழுவினர் தங்களிடமிருந்த யுவான்களை நேபாள நாட்டுப் பணமாக மாற்றிக்கொண்டார்கள்.

யாத்திரிகர்களுக்காகவே அங்கு ஜாங்மூவில் ஒரு கடை வீதி இருக்கிறது. அதில் பல கடைகள் சென்னையிலுள்ள பர்மா பஜார் போலவும், சூப்பர் மார்கெட் கடைகள் போலவும் இருந்தன. அங்கிருந்த கடைகளுக்கு எங்கள் குழுவினர் பலரும் சென்று தங்களுக்குத் தேவையான பொருள்களை வாங்கினார்கள்.

Friendship பாலத்தின் எல்லையில் எங்கள் ஜீப் டிரைவர்களுக்கும் சீன வழிகாட்டிக்கும் வழியனுப்பு விழா நடந்தது. பின்னர் எங்கள் லக்கேஜ்களை எடுத்துக் கொண்டு Friendship பாலத்தைக் கடந்து வந்தோம். இந்தப் பாலத்தின் மத்தியில் குறுக்காக ஒரு சிவப்பு கோடு போட்டிருக்கிறார்கள். இந்தக் கோடு சீன - நேபாள எல்லையைக் காட்டும் அடையாளமாகும்.

பாலத்தின் மறுகரையில், காட்மாண்டிலிருந்து ஈகோ டிரக் அனுப்பிய ஒரு பஸ் எங்கள் குழுவினரை அழைத்துச் செல்வதற்காக வந்து காத்திருந்தது. அதில் எங்கள் லக்கேஜ்களுடன் சென்று நாங்கள் ஏறிக்கொண்டோம்.

அப்போது சீன நேரப்படி பகல் இரண்டு மணி ஆகியிருந்தது. அடுத்து எங்கள் கைக்கடிகாரங்களில் இரண்டு மணி நேரம் பின்னே திருப்பி வைத்துக்கொண்டோம். அதன்படி பகல் 12 மணிக்கு 'தாத்தோபாணி' என்ற நேபாள கிராமத்திலிருந்து எங்கள் பஸ்

கிளம்பியது. பஸ் டிரைவர் மிகவும் மெதுவாக வண்டியைச் செலுத்தினர். நேற்று வரையில் எங்களுக்கு அதிக வேகமான ஜீப் பிரயாணம் இருந்தது. இன்றைக்கோ மிகவும் மெதுவான மினி பஸ் பிரயாணம்.

மாலை நான்கு மணிக்கு துலிகல் என்ற ஊரை அடைந்தோம். அங்கு துலிகல் ரெஸார்ட் என்ற நவீன வசதிகள் கொண்ட ஒரு ஹோட்டலில் நாங்கள் தங்குவதற்கு ஏற்கெனவே ஏற்பாடு செய்யப் பட்டிருந்தது. நாங்கள் தங்கிய துலிகல் ஹோட்டல் - காட்மாண்டிலிருந்து 30 கி.மீ. தூரத்தில் இமய மலையின் எழில் சூழ்ந்த பகுதியில் - ஒரு மலையின் உச்சியில் கட்டப்பட்டுள்ளது. இது எழில் கொஞ்சம் மிகவும் அழகான இடம். அங்கிருந்து பார்த்தபோது உயர்ந்த, வானத்தைத் தொட்டுவிடும் மலைச்சிகரங்கள், இமயமலையின் தொடர்கள் கண்களுக்கு விருந் தளித்தன.

அந்த ஹோட்டலில் சுமார் 25 நாட்களுக்குப் பிறகு நான் வெந்நீரில் நன்றாகச் சோப்பு போட்டு குளித்தேன்.

15.6.98. காலையில் அறையின் ஆளுயர கண்ணாடி ஜன்னல் கதவைத் திறந்தபோது, தூரத்தில் பனி மூடிய மலைகள் தென்பட்டன.

பகல் 11.30 மணிக்கு முதல் நாள் எங்களை அழைத்து வந்த பஸ்ஸில் துலிகல்லிருந்து புறப்பட்டு, 1.15 மணிக்குக் காட்மாண்டிலுள்ள கார்டன் ஹோட்டலைச் சென்றடைந்தோம்.

அன்று மாலை எங்கள் குழுவினரில் சிலர் காட்மாண்டிலுள்ள சூப்பர் மார்க்கெட்டிற்குச் சென்று தங்களுக்குத் தேவையான பொருள்களை வாங்கி வந்தார்கள்.

இன்று 16.6.98. காலை ஏழு மணிக்கு எங்கள் குழுவைச் சேர்ந்த சிலர் பசுபதிநாத் கோயிலுக்குச் சென்று பாக்மதி நதிக்கரையில் முடி எடுத்தார்கள்.

ஒரு வேனில் ஹோட்டல் கார்டனிலிருந்து பகல் 11 மணிக்குப் பாட்டன் (Patan) என்ற இடத்திற்குப் புறப்பட்டோம். காட்மாண்டிற்கும் பாட்டனிற்கும் இடையிலுள்ள தூரம் சுமார் 10 கி.மீ. இருக்கும். பாட்டனிலுள்ள காசி விஸ்வநாதர், கிருஷ்ணன், கும்பேஸ்வரர், பீமன் ஆகியவர்களுக்குரிய கோயில் களுக்குச் சென்று தரிசனம் செய்தோம்.

முன்னொரு காலத்தில் இன்றைய காட்மாண்ட் நகரத்தை மூன்று பிரிவாகப் பிரித்து அரசர்கள் ஆட்சி செய்து வந்தார்களாம். அவை முறையே 1. காட்மாண்ட், 2. பாட்டன், 3. லலித்பூர் ஆகியவை ஆகும். காட்மாண்டைச் சேர்ந்த அரசர்களும், பாட்டனை ஆண்ட அரசர்களும் அடிக்கடி ஒருவரோடு ஒருவர் சண்டை போட்டுக் கொண்டார்கள். பாட்டன் நகரம் 'மல்லர்கள்' என்ற அரசர்களால் ஆளப்பட்டு வந்தது. காட்மாண்ட் அரசர் காட்மாண்டில் ஏதாவது ஒரு கோயில் கட்டினால், அதைப் பார்த்து பாட்டன் அரசர் பாட்டனில் அது போன்ற ஒரு கோயில் கட்டுவாராம். Vice-Versa. இப்படி இரண்டு பகுதி அரசர்களும்

போட்டிப் போட்டுக்கொண்டு இந்த இரண்டு இடங்களிலும் கோயில்கள் கட்டியிருக்கிறார்கள்.

பாட்டனிலுள்ள ஒரு சிவன் கோயிலைச் சென்று தரிசித்தோம். மன்னர்களின் Court Yard, அரச மண்டபம் பார்த்தோம். இந்த அரச மண்டபத்தின் முற்றத்தில் துர்க்கைக்கு ஒரு கோயில் இருக்கிறது. தசரா (நவராத்திரி) சமயத்தில் இந்தக் கோயிலில் சிறப்பாகப் பூஜை நடைபெறும் என்று கேள்விப்பட்டோம்.

நேபாளத்தில் கோயில், அரண்மனை போன்ற இடங்களின் முன்னால் தெருவில் பெரும்பாலும் ஆஞ்சநேயரின் சிலையை வைத்திருக்கிறார்கள். இங்கு ஆஞ்சநேயர் வெற்றியின் அடையாளமாகக் (Symbol of Victory) கருதப்படுகிறார். இவர் இருக்கும் இடத்தில் தீமைகள், பொய், ஏவல், கொடுமைகள் போன்றவை நுழையாது என்பது இங்குள்ள மக்களின் நம்பிக்கை. இதன் அடிப்படையிலேயே இன்றும் அனுமன் சிலைகளை நேபாளத்தில் பிரதிஷ்டை செய்கிறார்களாம். ஆஞ்சநேயரை நேபாளத்தில் தாந்திரிகக் கடவுளாகவும் வழிபடுகிறார்கள்.

மல்ல வம்சத்தை ஆண்ட வீர நரேந்திர மன்னன் என்பவன் சிறப்பு வாய்ந்த மன்னன். இவனது காலத்தில் பாட்டன், காட்மாண்டை விட மிகவும் சிறப்பு பெற்று விளங்கியதாம். ஒரு சமயம் காட்மாண்ட், பாட்டனின் மீது படையெடுத்தது. அப்போது பகவான் ஸ்ரீகிருஷ்ணன் பாட்டன் அரசரின் கனவில் தோன்றி, ''எனக்குப் பாட்டனில் ஒரு கோயில் கட்டு'' என்று

கூறினார். மன்னன் அவ்விதமே கிருஷ்ணனுக்கு ஒரு கோயில் கட்டினான். அந்த முறை நடந்த போரில் காட்மாண்டிற்குப் பெரும் சேதம் ஏற்பட்டதாகவும் எங்களுக்கு வழிகாட்டியாக வந்த அத்வைத் விளக்கினார். பாட்டனில் கிருஷ்ணன் கோயில் கட்டப்பட்டதைப் பார்த்து, காட்மாண்ட் மன்னன் காட்மாண்டிலும் ஒரு கிருஷ்ணன் கோவில் கட்டினானாம்.

பாட்டனுக்கு நாங்கள் சென்றபோது, அங்குள்ள கிருஷ்ணன் கோயிலைப் புதுப்பிக்கும் திருப்பணி நடைபெற்றுக் கொண்டிருந்தது. அந்தக் கோயிலில் ஸ்ரீகிருஷ்ணனைத் தரிசிக்கும் பொருட்டு சிறிய படிகளின் வழியாக மேலே ஏறிச் சென்றோம். இங்கு மூலஸ்தானத்தில் குழலூதும் ஸ்ரீகிருஷ்ணன் கம்பீரமாக நின்றுகொண்டிருக்கிறார். அதன் வெளிப்புற மாடங்களில் மகாபாரதக் காட்சிகள் சிலவற்றை வடித்திருக்கிறார்கள். அவற்றில் திரௌபதி சுயம்வரக் காட்சி பார்த்தவுடன் நன்கு புரிந்துகொள்ளக் கூடிய வகையில் அமைந்திருந்தது. இந்தக் கோயிலின் அமைப்பு சென்னை, பெசன்ட் நகரிலுள்ள அஷ்டலட்சுமி கோயிலை நினைவுபடுத்தியது. மூலஸ்தானத்தின் வெளிச் சுற்றுப் பிராகாரத்தில் விஷ்ணுவின் பத்து அவதாரங்களையும் கல்லில் செதுக்கி வைத்திருந்ததைப் பார்த்தோம். அவற்றில் பகவான் புத்தரின் உருவமும் இருந்தது.

இந்த ஸ்ரீகிருஷ்ணன் கோயிலுக்கு அருகில் ஒரு பீமன் கோயில் அமைந்திருக்கிறது. அந்தக் கோயிலில்

பீமனின் உருவம் வீர தோற்றத்துடன் சுமார் 10 அடி உயரத்தில் இருக்கிறது. ''இந்த பீமன் கோயிலை முக்கியமாக இங்குள்ள வியாபாரிகள் சென்று வழிபடுகிறார்கள். தினமும் காலையில் வியாபாரிகள் தங்கள் கடைகளைத் திறப்பதற்கு முன்பு இந்தக் கோயிலுக்கு வந்து பீமனைத் தரிசனம் செய்துவிட்டு, இங்கு ஊதுபத்திகளை ஏற்றி அவற்றைத் தங்கள் கடைகளுக்கு எடுத்துச் சென்று வைத்து வியாபாரத்தை ஆரம்பிக்கிறார்கள். அப்படி செய்தால் வியாபாரம் நன்றாக நடக்கும் என்பது இங்குள்ள வியாபாரிகளின் உறுதியான நம்பிக்கை'' என்று எங்கள் வழிகாட்டி கூறினார்.

இந்தக் கோயிலை வெளியிலிருந்து பார்த்தபோது கோபுரத்திற்குக் கீழே தட்டு, கரண்டி போன்ற பல வீட்டு உபயோகச் சாமான்கள் கட்டித் தொங்கவிடப் பட்டிருந்தது தெரிந்தது. இந்தச் சாமான்களை இப்படி இங்கு கட்டித் தொங்கவிடுவதன் மூலம், தங்கள் வியாபாரம் நன்றாக நடக்கும் என்று இங்குள்ள வியாபாரிகள் நம்புகிறார்கள்.

இன்று 17.6.98. காலையில் பசுபதிநாத் கோயிலில் நாங்கள் ஹோமம் செய்வதற்கு முதல் நாளே ஏற்பாடு செய்திருந்தோம். காலை ஏழு மணிக்கு ஹோட்டல் கார்டனிலுள்ள புல்வெளியில் அமர்ந்து காலைச் சிற்றுண்டியை முடித்துக்கொண்டு, பசுபதிநாத் கோயிலுக்குப் புறப்பட்டோம். கோயிலுக்குச் சென்றதும் பசுபதிநாதரைச் சென்று வழிபட்டோம்.

பசுபதிநாத் கோயிலில் 1008 சிவலிங்கங்கள் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கும் இடத்திற்கு அருகில் ஒரு பெரிய ஹோமகுண்டம் இருக்கிறது. அங்கு காலை சரியாக ஒன்பது மணிக்கு ஹோமம் செய்ய ஆரம்பித்தோம். ஹோமத்தின் முடிவில் சிவ மந்திரங்களைச் சொல்லி ஆஹுதி சமர்ப்பித்தோம். ஹோமம் சுமார் இரண்டு மணி நேரம் நடைபெற்றது. ஹோமம் முடிந்ததும் ஹோமப் பிரசாதமான உலர்ந்த பழங்கள், கற்கண்டு போன்றவற்றை அங்கிருந்தவர்களுக்கு விநியோகித்தோம்.

பின்னர் அனைவரும் கோயில் கருவறைக்குச் சென்று பசுபதிநாதரைத் தரிசனம் செய்தோம்; 1008 சிவலிங்கங்களையும் பிரதட்சணம் செய்தோம்; பைரவர் முதலான எல்லாச் சந்நிதிகளுக்கும் சென்று வழிபட்டோம்.

இந்தியாவில் பழம் பெருமை வாய்ந்த எண்ணற்ற சிவாலயங்கள் உள்ளன. தமிழ்நாட்டிலும் எத்தனையோ சைவத்திருத்தலங்கள் உள்ளன. ஆனால் இந்த பசுபதிநாத் ஒரு கோயிலைத் தவிர வேறு எந்த ஒரு சிவாலயத்திலும் ஒரே இடத்தில் 1008 சிவலிங்கங்கள் பிரதிஷ்டை செய்யப்படவில்லை. ஆதலால் இந்தப் பசுபதிநாத் கோயில் 1008 சிவலிங்கங்கள் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கும் ஒரே சிவாலயம் என்ற தனிச் சிறப்பைப் பெற்றிருக்கிறது.

நாங்கள் பசுபதிநாத் கோயிலிலிருந்து வெளியே வந்ததும் எங்கள் குழுவினர் பலரும் ஸ்படிகமணி

மாலை, ருத்திராட்ச மாலை, ஸ்படிக லிங்கம், சாலக்ராமம் போன்றவற்றை வாங்கினார்கள். பின்னர் அங்கிருந்து நாங்கள் அனைவரும் வேனில் புறப்பட்டு கார்டன் ஹோட்டலுக்குப் போய்ச் சேர்ந்தோம். மறுநாளும் கார்டன் ஹோட்டலிலேயே தங்கினோம்.

மீண்டும் வாராணசியில்

இன்று 19.6.98. காலையில் கார்டன் ஹோட்டலைச் சேர்ந்த புல்வெளியில், எங்கள் காலைச் சிற்றுண்டிக்கு ஈகோ டிரக்கைச் சேர்ந்த ஜோதி அதிகாரி எற்பாடு செய்திருந்தார்.

இன்றைய தினம் நாங்கள் காட்மாண்டிலிருந்து வாராணசிக்குப் புறப்பட இருந்தோம்.

பகல் ஒரு மணிக்கு நாங்கள் வேனில், கார்டன் ஹோட்டலிலிருந்து காட்மாண்ட் விமான நிலையத்திற்குப் புறப்பட்டோம். பிற்பகல் 2.30 மணிக்கு வாராணசிக்குப் புறப்பட வேண்டிய விமானம் அன்றைய தினம் தாமதமாக 4.30 மணிக்குத்தான் புறப்பட்டது; மாலை 5.15 மணிக்கு வாராணசி விமான நிலையம் போய்ச் சேர்ந்தது.

எங்கள் குழுவினரிடம் – எங்கள் பிராயணம் நாற்பது நாட்களைக் கொண்டது என்பதால் – லக்கேஜ்கள் அதிகமாக இருந்தன. மேலும் இவற்றில் மானசரோவர் தீர்த்தம் கொண்ட பிளாஸ்டிக் கேன்கள், மானசரோவர் – கைலாஸ் மூர்த்தங்கள் ஆகியவையும் நிறையவே இருந்தன. ஆதலால் வாராணசி விமான

நிலையத்தில் எங்கள் லக்கேஜ்களைச் சரி பார்த்து வெளியே கொண்டு வருவதற்கு, அங்கேயே நாங்கள் சுமார் இரண்டு மணி நேரம் இருக்க வேண்டியதாயிற்று.

நாங்கள் வாராணசி ராமகிருஷ்ண மிஷன் சேவாசிரமத்திற்குப் போய்ச் சேர்ந்தபோது இரவு மணி ஒன்பது ஆகிவிட்டது.

20.6.98. இன்று விடியற்காலை 3.15 மணிக்கு ராமகிருஷ்ண மிஷன் சேவாசிரமத்திலிருந்து புறப்பட்டு காசி, விஸ்வநாதர் கோயிலுக்குச் சென்றோம். காசி விஸ்வநாதர் கோயிலை நெருங்கியபோது – அப்போது தான் டுண்டி விநாயகர் கோயிலைத் திறந்து –பண்டா, டுண்டி விநாயகருக்குக் கர்ப்பூர ஆரத்தி செய்துகொண் டிருந்தார். அங்கிருந்து காசி விஸ்வநாதர் கோயிலுக்குப் போய்ச் சேர்ந்தபோது விடியற்காலை மணி 3.50 ஆகி யிருந்தது. அங்கு சென்றதும் முதல் காரியமாக நான் எடுத்துச் சென்ற மானசரோவர் நீரைக் காசி விஸ்வநாத ருக்கு பக்தியுடன் அபிஷேகம் செய்தோம். ‘மானசரோ வரிலிருந்து நீர் கொண்டு வந்து காசி விஸ்வநாதருக்கு அபிஷேகம் செய்வது என்பதே ஒரு சாதனை’ என்று தோன்றியது.

இன்று எங்கள் குழுவினர் சிலர் இரண்டு டேக்சி களை ஏற்பாடு செய்து கொண்டு, திரிவேணி சங்கமத்தில் நீராடும் பொருட்டு அலகாபாத் புறப்பட்டுச் சென் றார்கள். அலகாபாத் சென்றவர்கள் தவிர எங்கள் குழு வைச் சேர்ந்த மற்றவர்கள் கங்கையில் நீராடி, காசியி லுள்ள கோயில்களைத் தரிசிப்பதற்குச் சென்றார்கள்.

நான் தசாஸ்வமேத காட்டிற்குச் சென்று கங்கையில் நீராடினேன். பின்னர் விசாலாட்சி கோயில்,காசி விஸ்வநாதர் கோயில், அன்னபூரணி கோயில், டுண்டி விநாயகர் கோயில் ஆகியவற்றைத் தரிசித்த பின்பு சேவாசிரமம் திரும்பினேன்.

சேவாசிரமத்தில் இருக்கும் லவேஸ்வர் சிவன் கோயிலுக்குச் சென்று வழிபட்டேன். இந்தச் சிவலிங்கம் ஸ்ரீராமபிரானின் பிள்ளைகளாகிய லவனும், குசனும் பிரதிஷ்டை செய்த சிவலிங்கம் என்பது ஐதீகம். காசியின் மகிமையைப் பற்றி சொல்லும் 'காசி கண்டம்' என்ற நூலும் இந்த லவேஸ்வர் சிவபெருமானைப் பற்றி குறிப்பிடுகிறது. காசியில் ஸ்ரீராமகிருஷ்ண மடம் தோன்றியதிலிருந்து, இந்த லவேஸ்வரருக்குப் பூஜை செய்யும் பணியை ஸ்ரீராமகிருஷ்ண மடத்தினர் செய்து வருகிறார்கள்.

மாலை மூன்று மணிக்கு எங்களில் சிலர் காசியிலுள்ள கோயில்களைத் தரிசிக்கச் சென்றோம். முதலில் நாங்கள் 'திலபாண்டேஸ்வர்' என்ற சிவன் கோயிலுக்குச் சென்றோம். திலம் என்றால் எள். இங்குள்ள சிவலிங்கம் ஒரு நாளைக்கு எள் அளவு வளர்கிறது என்பது ஐதீகம். அதனால் இதற்கு 'திலபாண்டேஸ்வர்' என்ற பெயர் எற்பட்டிருக்கிறது. அன்னை ஸ்ரீசாரதாதேவியார் காசி யாத்திரை செய்தபோது, இந்தத் திலபாண்டேஸ்வர் கோயிலுக்கும் சென்று தரிசித்திருக்கிறார்.

இங்குள்ள சந்நியாசிகள் சிலர் தென்னிந்தியாவிற்கு வரும்போது சென்னை, ஸ்ரீராமகிருஷ்ண மடத்தில் வந்து

தங்குவது வழக்கம். திலபாண்டேஸ்வர் கோயி லுக்குச் சென்ற எங்களை அந்த மடத்தின் தலைவர் அன்புடன் வரவேற்றார். நான் கொடுத்த மானசரோவர் தீர்த்தத்தை அவரே திலபாண்டேஸ்வரருக்கு அபிஷேகம் செய்தார்.

இந்தத் திலபாண்டேஸ்வரர் கோயிலில் கேரளா வைச் சேர்ந்த சந்நியாசிகள் இருக்கிறார்கள். எனவே இந்தக் கோயிலில் சபரிமலை ஐயப்பனுக்கும் நல்ல ஒரு சந்நிதி வைத்திருக்கிறார்கள். இந்தக் கோயிலைச் சேர்ந்த ஒரு பகுதியில் தரை மட்டத்திலிருந்து படிக்கட்டு களில் இறங்கிச் சற்று கீழே சென்றால் சனி பகவானுக்கு ஒரு சந்நிதி இருக்கிறது. அங்கு சென்று சனி பகவானைத் தரிசித்தோம்.

திலபாண்டேஸ்வர் கோயிலிலுள்ள எல்லாச் சந்நிதிகளுக்கும் சென்று தரிசித்த பின்பு ஜங்கம்வாடி என்ற கட்டிடத்திற்குச் சென்றோம். இது கோயில் என்ற சிறப்புக்கு உரிய பழமை வாய்ந்த இடம் அன்று; தற்காலத்தில் கட்டப்பட்ட ஒரு கட்டிடம்தான். இது வாராணசியிலுள்ள கோதோலியா என்ற பகுதியில் அமைந்துள்ளது. ஜங்கம்வாடி என்ற இந்த இடத்தில் கர்நாடக மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் இருக்கிறார்கள். கர்நாடக மாநிலத்திலிருந்து காசி யாத்திரை செல்பவர்கள் இங்கு சென்று தங்கு கிறார்கள்.

இந்த ஜங்கம்வாடி என்ற இடத்தின் சிறப்பு என்னவென்றால், சிறிய சிறிய சிவலிங்கங்கள் நூற்றுக்

கணக்கில் இங்கு பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கின்றன என்பதுதான். இங்கு கட்டை விரல் அளவு உள்ள சிவலிங்கங்கள் மட்டுமே எப்படியும் 5000-த்துக்குக் குறையாமல் இருக்கும் என்று நினைக்கிறேன். இவை தவிர இந்த ஜங்கம்வாடி கட்டிடத்தைச் சேர்ந்த பல இடங்களில் வெவ்வேறு அளவுகளில் சிவலிங்கங்கள் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளன. ஒன்று, இரண்டு என்று இங்குள்ள சிவலிங்கங்களை எண்ண ஆரம்பித் தால், எப்படியும் இந்த ஜங்கம்வாடியில் சுமார் எட்டாயிரம் சிவலிங்கங்கள் இருக்கும் என்று தோன்று கிறது. இந்தச் சிவலிங்கங்கள் அனைத்தும் காசிக்கு யாத்திரை சென்றவர்களால் பிரதிஷ்டை செய்யப்பட்ட சிவலிங்கங்களாகும்.

ஜங்கம்வாடியின் முக்கிய கட்டிடத்திற்கு வெளி யில் இருக்கும் சுமார் மூன்றாயிரம் சிவலிங்கங்களைப் பார்த்துவிட்டு, அதன் முக்கிய கட்டிடத்திற்குச் சென் றோம். அந்தக் கட்டிடத்தின் பல்வேறு பகுதிகளில் பல்வேறு அறைகளில் இருந்த சிவலிங்கங்களைச் சென்று தரிசித்தோம்.

பின்னர் ஜங்கம்வாடியிலிருந்து ஆட்டோக்கள் ஏற்பாடு செய்துகொண்டு, கங்கைக் கரையிலிருக்கும் 'ஹனுமான் காட்' என்ற இடத்திற்குச் சென்றோம். அங்கும், அதன் பக்கத்திலிருக்கும் கேதார் காட்டிலும் தமிழர்கள் அதிக எண்ணிக்கையில் வாழ்கிறார்கள். ஹனுமான் காட்டில் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் 'காமகோடீஸ்வரர்' என்ற பெயரில் ஒரு சிவன் கோயில்

கட்டியிருக்கிறார்கள். கோயில் கோபுரம், கோயிலி லுள்ள சந்நிதிகள் ஆகியவை அனைத்துமே இந்தக் கோயிலில் முழுக்க முழுக்கத் தமிழ்நாட்டு முறையில் அமைந்துள்ளன. இந்தக் கோயில் சந்நிதிகளில் உள்ள சுவாமி சிலைகளும் தமிழ்நாட்டில் செய்யப்பட்டு அங்கு பிரதிஷ்டை செய்யப்பட்டவையாகும். அங்கு பூஜை செய்யும் குருக்களும் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்.

காமகோடீஸ்வரர் கோயிலுக்குச் சென்று நாங்கள் தரிசனம் செய்தோம்.

கோயிலுக்கு வெளியில்,கோயிலை அடுத்து, நின்ற நிலையில் இருக்கும் மகாகவி பாரதியாரின் ஒரு சிலை நிறுவப்பட்டுள்ளது. மகாகவி பாரதியார் காசியில் சுமார் மூன்று ஆண்டுகள் ஹனுமான் காட்டில் இந்தக் கோயிலுக்கு அடுத்த தெருவில்தான் வசித்தார். இங்கு ஹனுமான் காட்டில் வாழ்ந்தபோதுதான் அவருக்குத் தலைப்பாகை கட்டும் வழக்கம் ஏற்பட்டது. இங்கு வாழ்ந்தபோது அவர் சம்ஸ்கிருதமும் கற்றார்.

அங்கிருந்து சற்று தூரம் நடந்து கேதார் காட்டிற்குச் சென்றோம். கேதார் காட் துவங்கும் இடத்தில், பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர் காசிக்குச் சென்றபோது தங்கிய ஒரு பெரிய வீடு இருக்கிறது. அந்த வீட்டின் மாடியிலுள்ள ஓர் அறையில் பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர் தங்கியிருந் தார். அவர் தங்கிய அறை இப்போது பகவான் ஸ்ரீராம கிருஷ்ணரின் பூஜையறையாக இருந்து வருகிறது. அங்கு சென்று நாங்கள் அனைவரும் ஸ்ரீராம கிருஷ்ணரை வழிபட்டோம். இந்த வீடு இப்போது

'ஸ்ரீராமகிருஷ்ண சரண பாதுகா' என்ற பெயரால் அழைக்கப்படுகிறது.

அங்கிருந்து கேதார்நாத் கோயிலுக்குச் சென்றோம்.

அன்றைய தினம் ஏகாதசி. ஆதலால் நாங்கள் சென்றபோது ராமகிருஷ்ண மிஷன் சேவாசிரமத்தில் ஸ்ரீராமநாம சங்கீர்த்தனம் நடந்துகொண்டிருந்தது.

அன்று காலையில் அலகாபாத் புறப்பட்டுச் சென்ற எங்கள் கைலாஸ் யாத்திரை குழுவினர், அன்றிரவு 9.30 மணிக்கு காசி ராமகிருஷ்ண மிஷன் சேவாசிரமம் திரும்பினார்கள்.

19.6.98. காலை எட்டு மணிக்கு ஓர் ஆட்டோவை ஏற்பாடு செய்துகொண்டு நானும் மடத்திலுள்ள மற்றொரு துறவியும் கால பைரவர், சங்கட்மோசன் ஹனுமான், துர்க்கைக் கோயில் ஆகியவற்றுக்குச் சென்றோம்.

அங்கிருந்து கௌடி மாயி கோயிலுக்குச் சென்றோம். இந்தக் கௌடிமாயி கோயில், துர்க்கை கோயிலிலிருந்து மேற்குத் திசையில் இரண்டு மூன்று தெருக்கள் தள்ளி ஒரு குடிசைப் பகுதியில் அமைந்துள்ளது. இந்தக் கோயில் முன்பு எப்போதோ ஒரு காலத்தில் காசிக்குள் இருந்ததாம். அப்போது இந்தத் தேவி, காசிக்கு யாத்திரையாக வருபவர்களின் காசி புண்ணிய பலனை எடுத்துக் கொண்டு விடுவாளாம். அதனால் கோபம் கொண்ட காசி விஸ்வநாதர் அவளிடம், 'நீ காசிக்கு யாத்திரை வருபவர்களின் புண்ணிய பலனை இப்படி

அபகரிக்கக் கூடாது. ஆதலால் நீ காசியின் எல்லையில் இருக்கும் சேரியில் போய் இரு' என்று கூறினாராம். தனது பிழையை உணர்ந்த கௌடிமாயி, 'என்னை மன்னித்து அருள் புரியுங்கள்' என்று காசி விஸ்வநாத ரிடம் பிரார்த்தனை செய்தாள். அவளது பிரார்த்தனைக் கிணங்கிய காசி விஸ்வநாதர், 'இனி மேல் நீ காசிக்கு வரும் பக்தர்களின் புண்ணிய பலனை அபகரிக்கக் கூடாது. காசி யாத்திரை வருபவர்கள் சேரியில் இருக்கும் உன்னைத் தங்கள் யாத்திரையின் முடிவில் வந்து தரிசிப்பார்கள். அவ்விதம் காசி யாத்திரையின் முடிவில் உன்னை வந்து தரிசித்தால்தான் அவர் களுக்குக் காசி யாத்திரையின் பலன் முழுமையாகக் கிடைக்கும்' என்று அருளினாராம்.

காசி யாத்திரை செல்லும் பலருக்கு இங்கு இப்படி ஒரு கோயில் இருக்கிறது என்பது தெரியாது. ஆதலால் காசிக்கு யாத்திரை வருபவர்களில் நூற்றுக்கு ஒருவர்கூட இந்தக் கோயிலுக்குச் செல்வதில்லை.

கோயிலுக்குப் பக்கத்திலேயே ஒரு கடை இருக் கிறது. அங்கு அகல் விளக்கு போன்ற சிறிய மண் தட்டில் சோழிகள் விலைக்குக் கிடைக்கும். அதை வாங்கி இங்குள்ள கௌடி மாயிக்கு நாம் காணிக்கை யாகச் செலுத்த வேண்டும். இந்தக் கோயிலின் தனித்துவம், இங்குள்ள கௌடிமாயிக்குச் சோழிகளைக் காணிக்கை செலுத்துவதுதான். இந்த கௌடிமாயி கோயிலும், சோழி விற்கும் கடையும் ஒருவருக்கே சொந்தமானவை. சில சமயங்களில் கடையில்

சோழியை நமக்கு விற்பனை செய்பவரே, கௌடிமா யிக்குப் பூஜையும் செய்வார். சில சமயங்களில் சோழி விற்கும் கடை, கௌடிமாயி கோயில் ஆகிய இரண்டிலுமே ஒருவர்கூட இருக்க மாட்டார்கள்.

கௌடி என்ற இந்தி சொல்லுக்குச் 'சோழி' என்று அர்த்தம். பக்தர்கள் சோழியைக் காணிக்கையாக செலுத்தும் இந்தத் தேவியை 'கௌடிமாயி (சோழி அம்மன்)' என்று அழைக்கிறார்கள். நாம் சோழியை வாங்கிச் சென்று, கௌடிமாயி கோயிலில் இருக்கும் பண்டாவிடம் கொடுக்க வேண்டும். அவர் நம்மிட மிருந்து சோழிகளைப் பெற்று,''காசீ பலம் ஹம்கோ (காசி யாத்திரையின் பலன் எங்களுக்கு),கௌடி பலம் தும்கோ (சோழியின் பலன் உனக்கு)'' என்று மூன்று தடவை சொல்வார். அவர் சொல்வதை நாமும் மூன்று முறை திருப்பிச் சொல்ல வேண்டும்.

பின்னர் அங்கிருந்து ஆட்டோவில் புறப்பட்டு காசியின் எல்லையாகிய 'அசி காட்' என்ற இடத்திற்குச் சென்றோம். 'அசி' என்ற பெயருள்ள ஒரு சிறிய ஆறு, இங்கு காசியில் தெற்கிலுள்ள கங்கையில் சென்று கலக்கிறது. காசியில் வடக்கில் 'வருணா' என்ற ஓர் ஆறு கங்கையில் சென்று கலக்கிறது. இந்த வருணா ஆறு கங்கையில் சென்று கலக்கும் இடத்திற்கும், அசி ஆறு கங்கையில் சென்று கலக்கும் இடத்திற்கும் இடையில் உள்ள இடமே வாராணசி என்று அழைக்கப்படுகிறது. வருணா, அசி ஆகிய இரண்டு ஆறுகளின் பெயர்களும் ஒன்று சேர்ந்து 'வாராணசி' என்றாயிற்று.

பகீரதன் செய்த தவம் காரணமாக ஆகாய கங்கை இந்தப் பூமிக்கு வந்தாள். கங்கை இந்த உலகில் வருவதற்கும் முன்பே காசி, முக்கியத்துவம் வாய்ந்த ஒரு திருத்தலமாக விளங்கியது. காசியின் மகிமையைப் பற்றி கேள்விப்பட்டு கங்கை, காசியைத் தரிசிப்பதற்காக இங்கு வந்ததாக ஐதீகம்.

நாங்கள் அசி காட்டிற்குச் சென்று கங்கையில் நீராடினோம். இந்த அசி காட்டில்தான் துளசி ராமாயணம் இயற்றிய துளசிதாசர் ஜல சமாதி ஆனார் என்று சொல்லப்படுகிறது.

அசி காட்டிலிருந்து கங்கைக் கரையில் ஐந்து நிமிடங்கள் நடந்து சென்றால் துளசி காட்டை அடையலாம். துளசி காட்டிலுள்ள கங்கைக்கரை படிக்கட்டுகளில் மேலே ஏறிச் சென்றால், அது துளசிதாசர் வாழ்ந்த வீட்டிற்குக் கொண்டுபோய்ச் சேர்க்கும். அந்த வீட்டில் இப்போது ஒரு சிறிய ராமர் கோயில் இருக்கிறது. அதில் துளசிதாசரின் மரப் பாதுகையும், அவர் கங்கையைக் கடப்பதற்குப் பயன்படுத்திய படகின் ஒரு சிறிய மரத்துண்டையும் வைத்து இப்போது வழிபட்டு வருகிறார்கள்.

பகல் இரண்டு மணிக்கு நானும் எங்கள் குழுவைச் சேர்ந்த ஒருவரும் ஒரு சைக்கிள் ரிக்ஷாவில் தசாஸ்வமேத காட் கங்கைக் கரையை அடைந்தோம். அங்கிருந்து நடந்து விசாலாட்சி கோயில் வழியாக மணிகர்ணிகா காட் சென்றோம்.

அங்கிருந்து 'சக்கர தீர்த்தம்' என்ற குளத்தின் வழியாக சிந்தியா காட்டிற்குச் சென்றோம். 'இந்தச் சக்கர தீர்த்தம் என்ற குளத்தை மகாவிஷ்ணு தமது சக்கரத்தால் உண்டாக்கினார்' என்பது ஐதீகம். இந்தச் சக்கர தீர்த்தத்தில் சிவனும் பார்வதியும் நீராடியதாகவும், அப்போது சிவபெருமான் காதில் அணிந்திருந்த காதணி இந்தக் குளத்தில் விழுந்தது என்றும் கூறுவார்கள். அதனால்தான் இந்த இடத்திற்கு 'மணிகர்ணிகா' என்ற பெயர் ஏற்பட்டது.(மணி – காதணி, கர்ணிகா – காது.)

இந்தச் சக்கரதீர்த்தத்தின் அருகிலுள்ள படிகளில் மேலே ஏறிச் சென்றால், வலப் புறத்தில் ஒரு சிவன் கோயில் இருக்கிறது. அது தனிமையான இடம். அந்த சிவாலயத்தைக் கடந்ததும் 'நரசிம்ம சுவாமி மடம்' என்ற ஒரு மடம் இருக்கிறது. இந்த மடத்தில் நரசிம்மரைப் பூஜிக்கிறார்கள். பெரும்பாலும் இங்கு மலையாளத்தைத் தாய்மொழியாகக் கொண்ட கேரள சந்நியாசிகள் தான் இருக்கிறார்கள். நரசிம்ம சுவாமி மடத்தையும் கடந்து படிக்கட்டுகளில் இன்னும் சற்று மேலேறிச் சென்றால் இடப் பக்கத்தில் 'அபய சந்நியாசி ஆசிரமம்' என்ற ஒரு மடம் வரும். இந்த ஆசிரமத்தில் சந்நியாசிகள் சிலர் இருக்கிறார்கள். இவர்களைத் தவிர மூன்று மாதம், ஆறு மாதம், ஒரு வருடம் இந்த ஆசிரமத்தில் தங்கியிருந்து விட்டு செல்லும் சந்நியாசி களும் உண்டு.

இந்த ஆசிரமத்தில் தரை மட்டத்திலிருந்து சுமார் 25 அடி ஆழமுள்ள ஒரு கிணறு இருக்கிறது. இந்தக்

கிணற்றின் அடிப்பகுதியில் ஒரு சிவலிங்கம் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. இந்தச் சிவலிங்கத்தை நாம் மேலே இருந்து பார்த்தால் ஒரு கிணற்றில் சிவலிங்கம் இருப்பதுபோல் தெரியும். மேலே இருந்து சிவலிங்கம் உள்ள இடத்திற்குச் செல்வதற்குப் படிக்கட்டுகளும், மின்சார விளக்குகளும் இருக்கின்றன. இந்தச் சிவ லிங்கத்திற்குத் தவறாமல் நித்திய பூஜை நடை பெறுகிறது.

இந்தச் சிவலிங்கத்தின் அருகில் அபய சந்நியாசி ஆஸ்ரமத்தைச் சேர்ந்த சந்நியாசிகளில் யாராவது ஒருவர் அமர்ந்து 'ஓம் நமசிவாய' என்ற மந்திரத்தை ஜபம் செய்துகொண்டிருப்பார். இப்படி 'ஒரு மணி நேரத் திற்கு ஒருவர் ஜபம் செய்வது' என்று முறை வைத்துக் கொண்டு இந்த ஆசிரமத்தின் சந்நியாசிகள், இந்த மணிகர்ணிகேஸ்வரர் சிவலிங்கத்தின் முன்பு ஜபம் செய்யும் வழக்கம் முன்பு இருந்து வந்தது. நாங்கள் அங்குள்ள மணிகர்ணிகேஸ்வரரைச் சென்று தரிசித்தோம்.

அங்கிருந்து நாங்கள் வீரேஸ்வர் சிவன் கோயி லுக்குச் சென்றோம். நாங்கள் சென்றபோது அந்தக் கோயிலில் ஒரே ஒருவர் கூட இல்லாமல் பூரண அமைதி நிலவியது. அங்கு நாங்கள் எடுத்துச் சென்றிருந்த கங்கை நீரை வீரேஸ்வர் சிவலிங்கத்திற்கு அபிஷேகம் செய்தோம்.

ஸ்ரீராமகிருஷ்ண மடத்தின் பக்தர்களுக்குக் காசி யிலுள்ள இந்த வீரேஸ்வர் சிவலிங்கம் முக்கியத்துவம்

வாய்ந்தது. ஏனென்றால் 'தனக்கு ஒரு மகன் பிறக்க வேண்டும்' என்று சுவாமி விவேகானந்தரின் தாய், இந்தக் காசி வீரேஸ்வரர் சிவலிங்கத்திற்குத் தனது பிரார்த்தனைகளைச் செலுத்தி வந்தார். இந்த சிவ பெருமானின் அருளால் பிறந்தவர்தான் சுவாமி விவேகானந்தர். எனவேதான் சுவாமி விவேகானந்தர் குழந்தையாக இருந்தபோது அவருக்கு அவருடைய பெற்றோர்கள் 'வீரேஸ்வர்' என்று பெயர் வைத்தார்கள். காசியிலுள்ள இந்த வீரேஸ்வர் சிவபெருமானின் அம்சமாகப் பிறந்தவர்தான் சுவாமி விவேகானந்தர். இந்தக் கோயிலிலுள்ள சிவலிங்கத்தில் ஒரு விசேஷம் உண்டு. இதன் ஆவுடையாரில் 28 பைரவர்களின் முகங்கள் சுற்றிலும் பொறிக்கப்பட்டுள்ளன.

அங்கிருந்து திரும்பி வரும் வழியில் சற்று தூரத்தில் வடக்கில் 'சங்கட்மாயி (சங்கடங்களை நீக்கும் அம்மன்)' என்ற பெயரில் பிரசித்திப் பெற்ற ஒரு தேவி கோயில் இருக்கிறது. சங்கடங்களை நீக்கும் தேவி என்பதால் இந்தக் கோயிலுக்கு நிறைய பேர் செல்வது வழக்கம். அதிலும் முக்கியமாக செவ்வாய்க்கிழமை, சனிக்கிழமை ஆகிய இரண்டு நாட்களில் இங்கு கூட்டம் மிகுதியாக இருக்கும். இதுபோன்று காசியில் முக்கியத் துவம் வாய்ந்த கோயில்கள் என்று எடுத்துக் கொண் டாலே சுமார் 100 கோயில்களுக்குக் குறையாமல் இருக்கும்.

பிறகு நாங்கள் சிந்தியா காட்டிலுள்ள கங்கைக் கரையை அடைந்தோம். அங்கிருந்து ஹனுமான்

காட்டிற்குச் செல்வதற்காக ஒரு படகை ஏற்பாடு செய்துகொண்டோம். படகு தெற்குத் திசையை நோக்கி நகர ஆரம்பித்தது.

தூரத்தில் கங்கைக் கரையில்பஞ்சகங்கா காட் தென்பட்டது. அங்கே இப்போது முஸ்லிம்களின் ஒரு மசூதி இருக்கிறது. அந்த மசூதி இருக்கும் இடத்தில் முன்பு ஒரு காலத்தில் 'பிந்து மாதவ்' என்ற புகழ் பெற்ற விஷ்ணு கோயில் இருந்தது. அந்த விஷ்ணு கோயிலில் தான் ஸ்ரீகிருஷ்ண சைதன்யர் காசிக்கு வந்தபோது தங்கியிருந்தார். இப்போது அங்குள்ள மசூதியின் கட்டிடம் முடியும் இடத்தில் 'திரைலங்க சுவாமி மடம்' இருக்கிறது.

திரைலங்க சுவாமி அங்கு வாழ்ந்தபோது ஸ்ரீராம கிருஷ்ணர் காசிக்கு வந்தார். ஸ்ரீராமகிருஷ்ண ரும்,திரைலங்க சுவாமியும் சந்தித்துப் பேசியது போன்ற விவரங்கள் ஸ்ரீராமகிருஷ்ணரின் வரலாற்றில் இடம் பெற்றுள்ளன. திரைலங்க சுவாமி மடத்திற்கும், கால பைரவர் கோயிலுக்குமிடையில்'தண்டபாணி கோயில்' என்ற ஒரு கோயில் இருக்கிறது. 'காசி யாத்திரை செல்பவர்கள் காசியில் தரிசிக்க வேண்டிய ஒன்பது முக்கியமான இடங்களில் தண்டபாணி கோயிலும் ஒன்று' என்று ஒரு பழைய சுலோகம் கூறுகிறது.

மணிகர்ணிகா க்ாட்டைத் தாண்டி படகு சென்றுகொண்டிருந்தபோது, கங்கைக் கரையில் மேலே இருந்த ஒரு கட்டிடத்திலிருந்து பலர் பஜனைப்

பாடல்களைப் பாடிக் கொண்டிருக்கும் சப்தம் கேட்டது. அங்கு ராஜராஜேஸ்வரி மடம் இருக்கிறது.

படகு மீர் காட் வழியாகச் சென்றது. இந்த இடத்திலிருந்து காசி விசாலாட்சி கோயில் அருகில் இருக்கிறது. இந்த மீர் காட்டில் 'வாராகி கோயில்' என்ற ஒரு கோயில் இருக்கிறது. இந்த வாராகி உக்கிர தெய்வம். இந்தக் கோயிலை விடியற்காலை நான்கு மணிக்குத் திறந்து காலை ஆறு மணிக்கு மூடிவிடுவார்கள். அதன் பிறகு மறுநாள் விடியற்காலையில்தான் திறப்பார்கள். எனவே பக்தர்கள் இந்த தேவியை விடியற்காலை ஆறு மணிக்குள்தான் தரிசிக்க முடியும். இந்தக் கோயிலை, தரை மட்டத்திலிருந்து படிகட்டுகளின் மூலம் சற்று கீழே இறங்கிச் சென்று, பக்தர்கள் வாராகிதேவியைத் தரிசிக்கும் வகையில் அமைத்திருக்கிறார்கள்.

நாங்கள் சென்ற படகு கங்கையில் பிரயாக் காட் வழியாகச் சென்றது. இப்போது அலகாபாத் என்று வழங்கும் ஊரின் பழைய பெயர் பிரயாகை. அதற்கு 'அலகாபாத்' என்ற பெயரைப் பிற்காலத்தில் முஸ்லிம் மன்னர்கள் வைத்தார்கள். அலகாபாத்தில் கங்கை, யமுனை,சரஸ்வதி ஆகிய மூன்று நதிகளும் சங்கமம் ஆகும் இடம் 'திரிவேணி சங்கமம்' என்று அழைக்கப் படுகிறது. காசியிலுள்ள இந்த பிரயாக் காட் கங்கையில் நீராடுவது, அலகாபாத் திரிவேணி சங்கமத்தில் நீராடுவதற்குச் சமம் என்று கருதப்படுகிறது. அன்னை ஸ்ரீசாரதாதேவியார் காசியில் தங்கிய நாட்களில் இந்த பிரயாக் காட்டிலும் நீராடுவதுண்டு.

நாங்கள் அமர்ந்திருந்த படகு சிறிது நேரத்தில் 'மானசரோவர் காட்' வழியாகச் சென்றது. கயிலாயத் தோடு தொடர்புடைய மானசரோவரின் பெயரை இந்த காட்டிற்கு வைத்திருக்கிறார்கள். இங்கு நீராடினால் மானசரோவரில் நீராடிய பலன் கிடைக்கும் என்பது நம்பிக்கை.

கங்கையில் நாங்கள் சென்ற படகிலிருந்து பார்த் தால் கங்கைக் கரையிலிருந்த பல்வேறு நீராடும் துறைகள், பிரம்மாண்டமான கட்டிடங்கள், அங்கும் இங்கும் பல கோயில்கள் தெரிந்தன. காசியிலுள்ள இந்த நீராடும் துறைகளை அழகாக அமைத்ததில் மராட்டியர்களுக்குப் பெரும் பங்கு உண்டு. சொல்லப் போனால் இன்றைய வாராணசி மாநகரத்தை மராட்டியர்கள் தான் உருவாக்கினார்கள்.

இமயத்திலிருந்து, வடக்குத் திசையிலிருந்து கங்கை தெற்கு நோக்கிப் பாய்கிறது. காசி என்ற இந்த ஓர் இடத்தில் மட்டும்தான் கங்கை தெற்கிலிருந்து வடக்குத் திசையில் செல்கிறது. அதனால் கங்கை இங்கு 'உத்திரவாகினி' என்று அழைக்கப்படுகிறது. காசியில் உத்திரவாகினியாக இருப்பதால் கங்கை விசேஷ முக்கியத்துவம் பெற்றிருக்கிறது. அதனால் மற்ற இடங் களில் இருப்பதைவிட கங்கைக்கு இந்த இடத்தில் மதிப்பு அதிகம்.

எங்கள் படகு 'க்ஷேமேஸ்வர் காட்' வழியாகச் சென்றது. இங்கு கங்கைக் கரையில் சிரார்த்த சடங்குகள் செய்கிறார்கள். பிறகு கேதார் காட், ஹரி சந்திரா காட்

ஆகியவற்றைக் கடந்து 'ஹனுமான் காட்' சென்றடைந்தது. அங்கே நாங்கள் படகிலிருந்து இறங்கிக் கொண்டோம்.

கங்கைக் கரையில் சற்று தூரத்தில் கோட்டைப் போன்று ஒரு கட்டிடம் தென்பட்டது. இங்கு 'நிரஞ்ஜனி அகாடா' என்ற பிரிவைச் சேர்ந்த சந்நியாசிகள் இருக்கிறார்கள். ஸ்ரீராமகிருஷ்ணரின் குருவாகிய தோத்தாபுரி நிரஞ்ஜனி அகடாவைச் சேர்ந்தவர். இந்த நிரஞ்ஜனி அகாடாவைச் சேர்ந்த ஒரு கிளை ஹரித்வாரில் இருக்கிறது. ஹரித்வாரில் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறும் கும்பமேளா சமயத்தில் நிரஞ்ஜனி அகாடாவைச் சேர்ந்த சந்நியாசிகளைப் பின்பற்றி ஸ்ரீராமகிருஷ்ண மடத்தின் சந்நியாசிகளும், ஸ்ரீராமகிருஷ்ண மடத்தின் பக்தர்களும் செல்வது வழக்கம். நாங்கள் நிரஞ்ஜனி அகாடாவிற்குச் சென்றோம். அங்கிருந்த சிவன் சந்நிதிக்குச் சென்று வழிபட்டோம்.

நிரஞ்ஜனி அகாடாவிலிருந்து நாங்கள் புறப்பட்டு ஹனுமான் காட்டிலுள்ள பிரசித்திப் பெற்ற ஹனுமான் கோயிலுக்குச் சென்றோம். இந்த ஹனுமான் கோயில் மிகவும் பழமை வாய்ந்தது. அதனாலேயே இந்தக் கோயில் 'ப்ராசீன் ஹனுமான் மந்திர்' என்று அழைக்கப்படுகிறது.

''ஹனுமான் காசிக்கு வந்தபோது கங்கையில் நீராடினார். அவர் கங்கையில் நீராடிய இடம் அவரது பெயரால் இப்போது 'ஹனுமான் காட்' என்று

அழைக்கப்படுகிறது'' என்ற கருத்தை ஆனந்த ராமாயணம் தெரிவிக்கிறது. ப்ராசீன் ஹனுமான் கோயிலைச் சந்நியாசிகள் சிலர் இப்போது நிர்வகித்து வருகிறார்கள். ஒரு காலத்தில் காசியில் இந்தப் ப்ராசீன் ஹனுமான் கோயில் பெரும் புகழுடன் ஏராளமான மக்களை ஈர்ப்பதாக இருந்திருக்கிறது. இப்போது காசியில் அந்த முக்கியத்துவத்தை 'சங்கட்மோசன் ஹனுமான்' கோயில் பெற்றிருக்கிறது.

அங்கிருந்து மேலும் ஓரிரு கோயில்களை நாங்கள் தரிசித்துவிட்டு, கங்கைக் கரையில் இருக்கும் 'அரிச்சந்திரா காட்' என்ற இடத்திற்குச் சென்றோம்.

இந்த இடத்தில் ஒரு பொது மயானம் இருக்கிறது. இந்த மயானத்தில்தான் சத்தியத்திற்காகவே வாழ்ந்த அரிசந்திரன் வெட்டியானாகப் பணி புரிந்தார் என்பது ஐதீகம். இப்போதும் இந்த மயானத்தில் சடலங்கள் எரிக்கப்படுகின்றன. இங்கு Electric Cremitorium (மின்சார இயந்திரம் மூலம் சடலங்களை எரிக்கும் இயந்திரம்)ஒன்றும் இருக்கிறது. அந்த மயானத்தில் 'ஸ்மசானேஸ்வர் (ஸ்மசானம் – சுடுகாடு. ஈசுவர் – சிவபெருமான்)' என்ற பெயரில் ஒரு சிவலிங்கம் வழிபடப்படுகிறது. இந்த சிவலிங்கத்தை மயானம் காத்தபோது அரிச்சந்திரன் ஸ்தாபித்ததாகக் கூறு கிறார்கள்.

அரிச்சந்திரா காட் வழியாக கேதார்நாத் கோயிலுக்குச் சென்றோம். அன்று பிரதோஷம். மாலை சரியாக 5.30 மணிக்குப் பிரதோஷப் பூஜைக்கான வேலைகள்

அங்கு துவங்கின. தமிழ்நாட்டில் மயிலாப்பூர் கபாலீஸ்வரர் கோயில், திருவண்ணாமலை அருணாசலேஸ்வரர் கோயில் போன்ற சிவன் கோயில்களில் நடப்பது போன்று காசி, கேதார்நாத் கோயில் நந்திக்கும் அபிஷேக ஆராதனைகள் மிக மிக விமரிசையாக நடைபெற்றன. அங்கு பிரதோஷப் பூஜை ஆரம்பித்ததிலிருந்து – தமிழ் நாட்டில் பிரதோஷப் பூஜை நடைபெறும் சமயத்தில் சைவத்திருமுறைகளிலிருந்து பாடப்படும் –பதிகங்களை எங்களில் ஒருவர் சொல்ல ஆரம்பித்தார்.

அன்றைய தினம் நாங்கள் தரிசித்த நந்தியம் பெருமானுக்கான அபிஷேக ஆராதனைகள், கண் கொள்ளாக் காட்சியாக என்றுமே வாழ்க்கையில் மறக்க முடியாதவையாக அமைந்தன. காசியில் பிரதோஷ பூஜையில் கலந்துகொள்வது என்றால் அது எவ்வளவு பெரிய விசேஷம்!

இன்று 22.6.98. திங்கட்கிழமை. நாள்தோறும் காசி விஸ்நாதர் கோயிலில் விடியற்காலை மூன்று மணிக்கு 'விஸ்வரூப தரிசனம்' என்ற பூஜை நடைபெறுகிறது. இந்தப் பூஜையில் கலந்துகொள்ள வேண்டுமானால் முதல்நாளே நபர் ஒருவருக்கு ரூ.108 செலுத்தி டிக்கெட் வாங்க வேண்டும்; விடியற்காலை 2.30 மணிக்குக் காசி விஸ்வநாதர் கோயில் கதவு அருகில் இருக்க வேண்டும். நாங்கள் ராமகிருஷ்ண மிஷன் சேவாசிரமத்திலிருந்து புறப்பட்டு, விடியற்காலை 2.15 மணிக்கே விஸ்வநாதர் கோயில் கதவருகில் சென்று அமர்ந்துகொண்டோம். சரியாக 2.30 மணிக்குக் கோயில் கதவைத் திறந்து

கோயில் பண்டாக்கள் இரண்டு பேர் கோயிலுக்குள் சென்றார்கள். அவர்கள் சென்ற சிறிது நேரத்தில் நாங்கள் கோயிலுக்குள் செல்வதற்கு அனுமதிக்கப்பட்டோம்.

கருவறையின் நுழைவாயில் கதவருகில் பண்டா கூறியதற்கேற்ப நாங்கள் அமர்ந்தோம். சிறிது நேரத்தில் காசி விஸ்வநாதர் உறங்கும் பொருட்டு வைத்த வெள்ளிக் கட்டில், போர்வை, தலையணை, மயில் இறகு விசிறி, விஸ்வநாதரின் பாதுகைகள் போன்றவற்றைப் பண்டாக்கள் கருவறையிலிருந்து எடுத்துச் சென்றார்கள். பண்டாக்கள் இரண்டு பேர், முதல் நாள் இரவு காசி விஸ்வநாதருக்குப் பள்ளியறை பூஜையின் போது செய்திருந்த அலங்காரங்களை ஒவ்வொன்றாகக் களைந்து கொண்டிருந்தார்கள்.

தொடர்ந்து அங்கு விஸ்வநாதருக்குச் செய்த பூஜையில் கங்கை நீர் அபிஷேகம், பால் அபிஷேகம், சந்தன அபிஷேகம், விபூதி அபிஷேகம், வில்வம் - மலர் மாலை சாத்துதல், நறுமண தூபம், இனிப்பு நைவேத்தியம், கர்ப்பூர ஆரத்தி போன்றவைகள் நடைபெற்றன.

இவ்விதம் கோயிலில் பண்டாக்கள் பூஜையைச் செய்து முடித்தார்கள்.

மறுநாள் காலை சிற்றுண்டிக்குப் பிறகு மணிகர்ணிகா காட் சென்று கங்கையில் நீராடினோம். இந்தத் தடவை காசி யாத்திரையின்போது காசி விஸ்வநாதரைத் தரிசிப்பது அதுவே கடைசி முறையாக இருக்கும் என்பதால், நிறைய பூஜை பொருள்களுடன்

சென்று காசி விஸ்வநாதரை வழிபட்டோம். அன்ன பூரணி கோயிலுக்கும் நிறைய பூஜை பொருள்களுடன் சென்று வழிபட்ட பின்பு சேவாசிரமம் திரும்பினோம்.

அன்று மாலை நாங்கள் காசியிலிருந்து விடை பெற்றோம். எங்களையும்,எங்கள் லக்கேஜ்களையும் வாராணசி ரயில்வே ஸ்டேஷனுக்குக் கொண்டு போய்ச் சேர்ப்பதற்கு, வருணா டிராவல்ஸ் ஒரு பஸ் ஏற்பாடு செய்திருந்தது. அந்த பஸ்ஸில் ராமகிருஷ்ண மிஷன் சேவாசிரமத்திலிருந்து புறப்பட்ட நாங்கள், சற்று முன்னதாகவே வாராணசி ரயில்வே ஸ்டேஷனுக்குப் போய்ச் சேர்ந்தோம்.

அன்று 22.6.98 மாலை சுமார் ஆறு மணிக்கு வாராணசியிலிருந்து வாராணசி எக்ஸ்பிரசில் சென்னைக்குப் புறப்பட்டோம். இரண்டு நாள் ரயிலில் பிரயாணம் செய்தோம். 24.6.98. காலை 10.30 மணிக்கு ரயில் சென்னைக்கு வர வேண்டிய குறிப்பிட்ட நேரத்தில் சென்னை, சென்ட்ரல் ஸ்டேஷனுக்கு வந்துசேர்ந்தது.

கைலாஸ் யாத்திரை என்ற மகத்தான வாய்ப்பை இந்தப் பிறவியில் அளித்த ஸ்ரீராமகிருஷ்ணரின் திருவருளை நினைந்து அவரை வணங்கினோம்.[1]

---

1. இந்தக் கைலாஸ் – மானசரோவர் யாத்திரை வீடியோ கேசட்டாகவும், VCD–யாகவும் எமது மடத்திலிருந்து வெளியிடப் பட்டுள்ளது.

பிற்சேர்க்கை

நந்தி பரிக்ரமம்

அஷ்டபத்திலிருந்து கயிலாயத்தை நாம் மிகத் தெளிவாகக் காண முடியும். இன்னும் நெருங்கி, மிக அருகிலிருந்து காண வேண்டுமானால் கயிலை மலைக்கு அருகிலுள்ள நந்தி பர்வதத்தைச் சுற்றி வர வேண்டும். இதுவே 'நந்தி பரிக்ரமம்' என்று அழைக்கப் படுகிறது. இந்தப் பாதை சுமார் 32 கி.மீ. தூரம் கொண்ட மிகமிகச் சிரமமான பாதை. நந்தி பர்வதம் கயிலாயத் திற்கு மிகவும் அருகிலுள்ளது. எனவே இந்த மலை யைச் சுற்றிவரும்போது ஒரு குறிப்பிட்ட பகுதியில் கைலாசபதியைத் தொடுகின்ற அளவிற்கு நெருங்கிச் செல்ல முடிகிறது.

நந்தி பரிக்ரமம் செய்வதற்கு, சீன ராணுவத்திடம் பணம் செலுத்தி சிறப்பு அனுமதி பெற வேண்டும். ஆனால் அந்த அனுமதி எளிதாகக் கிடைப்பதில்லை. மிகவும் ஆபத்தான பாதை என்பதாலும், பனிப்பாறை களில் வழுக்கி விழுகின்ற அபாயம், நிலச்சரிவுகள், பனிப்பாளங்கள் விலகுதல் போன்ற பல காரணங் களால் உயிரிழக்கின்ற அபாயம் போன்ற காரணங் களால் சீன ராணுவத்தினர் இந்தப் பரிக்ரமத்திற்கு அனுமதி அளிக்க மறுத்துவிடுகின்றனர். வயது,

உடல்நிலை, வெளிநாட்டினர், தட்பவெப்ப நிலை போன்ற பல காரணங்களால் அனுமதி மறுக்கப் படுகிறது.

அஷ்டபத் செல்வதுபற்றி ஏற்கனவே (பக்.96) கண்டோம். அஷ்டபத் செல்லும் வழியிலுள்ள சிரலங் புத்த மடாலயத்தில் தங்கி, அங்கிருந்து நந்தி பரிக்ரமத் தைத் தொடங்க வேண்டும். கயிலாயத்தின் அடிவாரத் திலுள்ள தார்ச்சன் முகாமிலிருந்து சுமார் 6 மணிநேரம் நடந்தால் சிரலங் புத்த மடாலயத்தை அடையலாம். இது 300 ஆண்டுகளுக்கு முற்பட்டது. சீனப் படை யெடுப்பின்போது முற்றிலுமாக அழிக்கப்பட்ட இந்த மடாலயம் 1980-களில் மீண்டும் கட்டப்பட்டது.

அதிகாலையில் புறப்பட்டுவிட வேண்டும். மிக வும் செங்குத்தான மலைகளின் மீது செல்ல வேண்டி யுள்ளது. எனவே ஊன்றுகோல் கட்டாயம். சிறிது நேர நடைக்குப் பிறகு நந்தி பர்வதத்தில் அடிவாரத்தை அடைகிறோம். இந்த மலையைச் சுற்றி உமா நதி ஓடுகிறது. இது கைலாயத்திலிருந்து புறப்படுகின்ற நதியாகும். நதியின் கரையில் சிலமணி நேரம் நடந்த பிறகு செங்குத்தான மலை வருகிறது. மிகவும் ஆபத் தான பகுதி இது. அடிமேல் அடிவைத்து, ஊன்றுகோல் துணையுடன், porters மேலேயிருந்து கைகொடுத்து தூக்கிவிட்டுதான் போக முடியும். சில இடங்களில் தவழ்ந்தும் போக வேண்டியுள்ளது. கடந்து வந்த பாதையைப் பார்க்கும்போது பாதாளமாகத் தெரிகிறது; தலை சுற்றுகிறது. வழியில் எங்கும் உட்காரவும் இடம் கிடையாது.

அஷ்டபத்திலிருந்து பார்க்கும்போது கயிலாய மலையும் நந்தி மலையும் தனித்தனியாகத் தெரிகின்றன. ஆனால் பரிக்ரமத்தின்போது இரண்டும் இணைந் திருப்பதைக் காண முடியும். இணைக்கின்ற இந்தப் பகுதியைக் கடப்பது மிகவும் கடினமான அனுபவம். இங்கே உள்ள ஓர் குகையில் பௌத்த மதத்தினரின் 13 ஸ்தூபங்களைக் (தூண்கள்) காண முடியும். இங்கிருந்து கைலாஸ்பதியின் கிழக்கு முகத்தை ஒரு மாறுபட்ட கோணத்தில் பார்க்க முடியும்.

இங்கிருந்து இறங்கும் பகுதி ஆரம்பிக்கிறது. ஏறுவதைவிட இறங்குவது சிரமமாக உள்ளது. வழியும் மிகுந்த வழுக்கலாக உள்ளது. வழுக்கி விழுந்தால் உறைபனியில் வீழ்ந்து உயிர் விடுவதைத் தவிர வேறு எந்த வழியும் இல்லை. மிகவும் நிதானமாக ஊன்று கோல் துணையுடன் கைலாஸ்பதியின் கிழக்கு அடிவாரத்தை அடையலாம். கிழக்கு முகம் முற்றிலும் உறைபனியால் மூடப்பட்டுள்ளது. மிகவும் அற்புதக் காட்சி இது. இங்கிருந்து சில மணிநேரம் நடந்தால் மீண்டும் அஷ்டபத்தை அடைய முடியும்.



கைலாஸ் - ஓர் அபூர்வக் காட்சி

ISBN 81-7823-033-X
9 788178 230337

புத்தகங்கள் வெப்தளம்மூலம் ஆர்டர் செய்ய
www.sriramakrishnamath.org

ஸ்ரீராமகிருஷ்ண மடம், சென்னை 4
email : srkmath@vsnl.com

Kailas Manasarovar Yathirai (Tamil) Rs. 40.00